# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 05 வியாழக்கிழமை (21.07.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 237


# மஹிந்தவின் நிகழ்வில் பாட மறுத்து தமிழ் உணர்வைக் காட்டிய பாடகர்கள்

## கொழும்பு வந்தவர்கள் செய்தி அறிந்து உடனடியாகவே சென்னை திரும்பினர்

கொழும்பு, ஜூலை 21

கிளிநொச்சியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்ட நிகழ்வில் பாட மறுத்து உடனடியாகச் சென்னை திரும்பினர் தென்னிந்திய திரையிசைப் பாடகர்களான மனோ, கிரிஷ், சுசித்திரா ஆகியோர். அமைச்சர்கள், அதிகாரிகள் கெஞ்சிக் கேட்டபோதும் சென்னையில் இருந்து கிடைத்த அழுத்தங்கள் காரணமாக அவர்கள் நிகழ்ச்சியில் பாட மறுத்துத் திரும்பினர்.

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கிளிநொச்சியில் நேற்று பல நிகழ்வுகளில் கலந்துகொண்டார். பிற்பகல் 3 மணியளவில் சர்வதேச விளையாட்டு மைதானத் தொகுதிக்கான அடிக்கல்லை நாட்டினார்.

மாலை 6 மணிக்கு கிளிநொச்சி நகர மைதானத்தில் பிரசாரக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் பின்னர் பிரபல தென்னிந்தியப் பாடகர்களான மனோ, கிரிஷ், சுசித்திரா ஆகியோரின் (27 ஆம் பக்கம் பார்க்க)



02 வாக்குப் பெட்டிகள் காணாமற்போகலாம்



14 அரசு ஏன் போர் செய்தது?



22 எதையாவது செய்து வென்றுவிட அரசு துடிப்பு

**கல்விச்சுடர்**

தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களை இறுதிப் பரீட்சைக்குத் தயார்படுத்தும் படிமுறைப் பரீட்சை இல 10 இன் வினாத்தாள் II இன்றைய உதயனின் 16,17ஆம் பக்கங்களில்.

## கூட்டமைப்பு அமைப்பாளர் பொலிஸாரால் திடீர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சாவகச்சேரி அமைப்பாளரும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டவருமான க. அருந்தவபாலன் குற்றப் புலனாய்வுப் பிரிவினால் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டார்.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு கோரி அவர் வெளியிட்ட துண்டுப் பிரசுரம் ஒன்று தொடர்பாகவே தான் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார் என்று அருந்தவபாலன் உதயனுக்கு தெரிவித்தார்.

அருந்தவபாலனின் வீட்டுக்கு நேற்று முன்தினம் சென்ற குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவரை விசாரித்தனர். நேற்று மாலை 4.30 மணிக்கு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு அவருக்கு அழைப்பு (28ஆம் பக்கம் பார்க்க)

## அற்ப சலுகைகளுக்காக நாம் துணை போகலாமா?

### கேள்வி எழுப்புகிறார் சரவணபவன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூலை 21

இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதை சனல் - 4 தொலைக்காட்சி மூலமும் போர்க் குற்ற விசாரணை அறிக்கையை ஊடகங்கள் வாயிலாகவும் அறிந்த தென்னிந்தியப் பாடகர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பாடமுடியாது என வந்த விமானத்திலேயே திரும்பிப் போய்விட்டனர்.

ஆனால் இவற்றை எல்லாம் நேரடியாக கண்டவர்கள் நாம். கடும் துன்பங்களையும் அனுபவித்த நாம் அற்ப சொற்ப அன்பளிப்புக்களுக்காக இந்த அரசுக்கு துணைபோகலாமா? எனக் கேள்வி எழுப்பினார் (27 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் இரு வருடத்தில் அபிவிருத்தியைச் செய்துள்ளோம்

### ஜனாதிபதி பெருமிதம்

கிளிநொச்சி,ஜூலை21

30 வருடகாலமாக பின்நோக்கிச் சென்ற கிளிநொச்சிப் பிரதேசத்தை இரு வருடகாலத்தில் நாம் எல்லா வீதிகளையும் புனரமைத்து பல அபிவிருத்தி வேலைகளையும் முன்னெடுத்துள்ளோம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 325 மில்லியன் ரூபா செலவில் அமையவிருக்கும் நவீன வசதிகள் கொண்ட விளையாட்டு மைதானத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று மாலை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு அடிக்கல்லினை நட்டு வைத்து தமிழில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், 30 வருட காலமாக நீங்கள் பட்ட கஷ்டம் நஷ்டம் எனக்கு நன்றாகவே தெரியும். இப்போது நீங்கள் எல்லோரும் இந்தப் பகுதியில் அச்சமில்லாமல் நிம்மதியாக வாழ்கிறீர்கள். ஜனநாயகம் பாதுகாப்பாக இருக்கிறது. அது இன்றும் என்றும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். வடக்கின் வசந்தம் மூலம் உங்கள் பகுதியில் பல அபிவிருத்தி வேலைகள் செய்துள்ளோம். இன்னும் இன்னும் செய்வோம். நாம் அதிகமாக சேவை செய்யும் மாகாணம் வட மாகாணம் தான் . உங்கள் பெண்கள் தொடர்பாக விசேடமாகக் கவனம் செலுத்தப்படும். அதன் மூலம் கௌரவமான வாழ்வை வாழ முடியும்.

உங்கள் பிள்ளைகள் இப்போது உயிருடன் உள்ளார்கள். இப்போதும் உங்கள் பிள்ளைகள் சிலர் தடுப்பில் உள்ளார்கள். சிலர் வெளியே வந்துள்ளார்கள். தடுப்பில் உள்ளவர்கள் பலர் விரைவில் வெளியே விடப்படுவார்கள் - என்றார்.

இந்த நிகழ்வில் பிரதமர் (27 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கு உட்பட கரையோரங்களில் இன்றுமுதல் 'ட்றோலர்'களில் மீன்பிடிக்கத் தடை

### நாடாளுமன்றில் அமைச்சர் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 21

வடக்கு மற்றும் கிழக்கு உட்பட கரையோரப் பிரதேசங்களில் இழுவைப் படகுகள் மூலம் (ட்றோலர்களில்) மீன்பிடிப்பதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை உடனடியாக - இன்று முதல் நடைமுறைக்கு வருகிறது என்று மீன்பிடித் துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்றுத் தெரிவித்தார்.

கடற்றொழிலில், நீரியல்வளங்கள் சட்டத்தின் கீழ் அங்கீகரிப்பதற்கான 4 பிரேரணைகளை நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் ராஜித மேலும் கூறியவை வருமாறு:-

அண்மையில் வெளியான அறிக்கையின் படி 13 பேர் போசாக்கின்மை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர். எதிர்வரும் 2013 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கையைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. எமது நாட்டில் நாளொன்றுக்கு தனிநபர் மீன் நுகர்வு 31 கிராமாக உள்ளது. இதனை எதிர்வரும் 2013 ஆம் ஆண்டில் (27 ஆம் பக்கம் பார்க்க)

## மாநகர சபை கடைத் தொகுதியில் நடந்த மோசடி மேலும் அம்பலம்

### புட்டுவைக்கிறார் முன்னாள் ஆணையர்

யாழ்ப்பாணம், ஜூலை 21

நிறுவனமாகப் பதிவு செய்து 12 நாள்களேயான கட்டட ஒப்பந்தகாரர் ஒருவருக்கு யாழ். மாநகர சபைக்குரிய பெரும் கட்டட ஒப்பந்தத்தை எப்படி வழங்கினார்கள்?

இந்த விடயத்தில் விதிமுறைகளைப் புறந்தள்ளி பெரும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்பது தெளிவாகத் தெரிகிறது என்று கூறுகிறார் யாழ். மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம்.

நேற்று நகரில் செய்தியாளர் மாநாடொன்றை அவர் நடத்தினார். அப்போதே யாழ். மாநகர சபைக்காக நகரப் பகுதியில் அமைக்கப்பட உள்ள 5 மாடிக் கடைத் தொகுதிக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டதில் நடைபெற்ற (27 ஆம் பக்கம் பார்க்க)

## அரச தரப்பை விட வேறு எந்தக் கட்சியும் யாழ். தேர்தலில் ஈடுபட முடியாத நிலைமை

### அரசுக்குப் பாடம் புகட்டுங்கள் என தமிழ் மக்களுக்கு கரு அழைப்பு

கொழும்பு, ஜூலை 21

யாழ்ப்பாணத்தில் அரச தரப்பைவிட வேறு எந்தக் கட்சியும் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத பயங்கரமான நிலைமை உள்ளது. மக்கள் இந்தத் தேர்தலைப் பயன்படுத்தி அரசுக்கு நல்ல பாடம் புகட்டவேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோது ஐ.தே. கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-


இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் முடிவின் படியே நாட்டின் எதிர்காலப் பயணம் தயார் செய்யப்படும். சுதந்திரத்தை அழிக்கின்ற - மக்களின் பணத்தை வீண்விரயம் செய்கின்ற - சர்வாதிகாரமிக்க இந்த ஆட்சிக்குப் பாடம் புகட்ட மக்கள் இந்தத் தேர்தலை பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

17ஆவது திருத்தச் சட்டம் அழிக்கப்பட்டு 18 ஆவது திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டதை அடுத்து, நாட்டில் நீதி குறைந்து (28ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானம் காணப்படும் சாத்தியம்.

# ஜே.ஆர். காலத்தில் இடம்பெற்றது போன்று வாக்குப் பெட்டிகள் காணாமல் போகலாம்

## வடபகுதி மக்களை எச்சரிக்கிறார் விக்கிரமபாகு கருணாரட்ன



கொழும்பு, ஜூலை 21

ஜே.ஆர். ஆட்சிக் காலத்தில் 17 வாக்குப்பெட்டிகள் காணாமல் போனது போல் இந்த எம்.ஆர். ஆட்சிக் காலத்திலும் காணாமல் போகலாம். வடக்கில் வாக்கு மோசடிகளைத் தடுக்க, மக்கள் காலையிலேயே வாக்குச்சாவடிகளுக்குச் சென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும்.

- இவ்வாறு புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் 'உதயனு'க்கு மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ் மக்கள் அரசின் பின்னாலேயே நிற்கின்றனர் எனக் கூறி சர்வதேச அழுத்தங்களில் இருந்து தப்பிக் கொள்வதற்கு எம்.ஆர். அரசு எதை வேண்டுமானாலும் செய்யலாம். நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசு தனது நலனுக்குப் பயன்படுத்தவே முனைகிறது. வெற்றி பெறுவதற்காக எதையும் செய்யலாம்.

எனவே, வடக்கு மக்கள் வாக்கு மோசடி இடம்பெறுவதைத் தவிர்ப்பதற்கு காலையிலேயே வாக்குச்சாவடிகளுக்குச் சென்று வாக்குரிமை என்ற ஆயுதத்தை சரிவரப் பயன்படுத்தவேண்டும். உங்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டுமானால், நீங்கள் தமிழ் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதே புத்திசாலித்தனமானது என்பதை மீண்டும் நான் உங்களுக்கு ஞாபகப்படுத்துகின்றேன்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அரசு பல்வேறு யுக்திகளைக் கையாண்டது. என்றுமில்லாதவாறு அமைச்சர்கள் வடக்குக்குப் படையெடுத்துச் சென்றனர். இதிலிருந்து அரசுக்கு இந்தத் தேர்தல் எவ்வளவு முக்கியம் என்பதை புரிந்துகொள்ளலாம். அதேபோன்றுதான் தமிழ் மக்களுக்கும் இது முக்கியமான தேர்தலாகும். எனவே, உங்களுடைய நிலைப்பாட்டில் நீங்கள் தெளிவாக இருங்கள். சோரம் போகவேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

ஜே.ஆர். ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற தேர்தலின்போது 17 வாக்குப்பெட்டிகள் காணாமல் போயின. காணாமல்போன பெட்டிகளுக்கு என்ன நடந்தது என்பது இன்றும் புரியாத புதிராகவே உள்ளது. ஜே.ஆரின் தம்பி என வர்ணிக்கப்படும் எம். ஆரும் இதைச் செய்ய முனையலாம். ஏனென்றால், இந்த விடயத்தில் ஜே.ஆரை விட வல்லவர் எம்.ஆர்.

அது மட்டுமின்றி கருணா, டக்ளஸ் ஆகியோர் போன்ற தலையாட்டி பொம்மைகளுக்கு எதையாவது கொடுத்து வாக்குப்பெட்டி பரிமாற்றல் நடவடிக்கைகளிலும் அரசு ஈடுபடலாம். எனவே, வடக்கு வாழ் தமிழ் மக்கள் காலையிலேயே வாக்குச்சாவடிகளுக்குச் சென்று வாக்களிக்க வேண்டும். அப்போதுதான் வாக்கு மோசடிகளைத் தடுக்க முடியும். இதுவும் சந்தேகமாகவே உள்ளது. இப்படி அவர் தெரிவித்தார். (ஐ-சி)

# தேர்தல் தினமான 23ஆம் திகதியும் வாக்காளர் அட்டையைப் பெறலாம்

## தத்தமது அஞ்சல் அலுவலகங்களில்

யாழ்ப்பாணம், ஜூன் 21

வாக்காளர் அட்டையைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் உள்ளூராட்சித் தேர்தல் தினத்தன்று மாலை 4 மணி வரையும் தமது பகுதி அஞ்சல் அலுவலகத்தில் அதனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறு பொது மக்களுக்கு அறியத்தருகிறார் யாழ்ப்பாணப் பிராந்திய அஞ்சல் அத்தியட்சகர் எஸ். ஜெயரட்ணம்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வாக்காளர் அட்டையை விநியோகிக்கும் அஞ்சல் நிலையம் அல்லது உப அஞ்சல் அலுவலகத்துக்குச் சென்று ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி வாக்காளர் அட்டையை பெற்றுக்கொள்ளலாம்.

இந்த அலுவலகங்களுக்குச் சென்றும் வாக்காளர் அட்டையை கிடைக்கப் பெறாதவர்கள் என்னுடன் தொடர்பு கொள்ள முடியும்.

காங்கேசன்துறை, தெல்லிப்பழை, வயாவிளான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் அந்த மக்களுக்கான வாக்காளர் அட்டைகள் அந்தந்தப் பகுதியிலுள்ள அஞ்சல் நிலையங்களில் விநியோகிப்பதற்காக வைக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்டவர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தி தேர்தல் தினத்தன்று மாலை 4 மணிக்கு முன்னதாக பெற்றுக் கொள்ள முடியும்.

கடந்த 16ஆம் திகதியுடன் வாக்காளர் அட்டைகள் தபாலக ஊழியர்கள் மூலம் விநியோகிப்பது பூர்த்தியாகியுள்ளது. தபாலக ஊழியர்கள் மூலம் வீடு வீடாக 87வீதமான அட்டைகள் விநியோகிக்கப்பட்டுவிட்டன.

இன்று(நேற்று) இருபதாம் திகதி வரை 90 வீதமான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன - என்றார்.(ஒ-14)

# தமிழ் மக்கள் யார் பக்கம்? தேர்தல் எடுத்துக்காட்டும்

## சுரேஷ் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 21

தமிழ் மக்கள் யார் பக்கம் இருக்கின்றார்கள் என்பதை இத் தேர்தலிலும் உலகுக்கு எடுத்துக்காட்டுவார்கள். வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிவாய்ப்பு பிரகாசமாகவே உள்ளது. அனைத்து சபைகளையும் நாம் கைப்பற்றுவோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

சுரேஷ் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்கு பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் மக்கள் அலைபோல் திரண்டனர். நடை பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 12 சபைகளைக் கைப்பற்றி அமோக வெற்றியீட்டியது. இம்முறையும் எமக்கே வெற்றி. வடக்கில் அனைத்து சபைகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றும்.

தமிழ் மக்கள் அரசின் பக்கமே உள்ளனர் என்பதை சர்வதேசத்துக்கு எத்துக்காட்ட அரசு முயற்சிக்கின்றது. இந்நிலையில் தமிழ் மக்கள் யார் பக்கம் இருக்கின்றனர் என்பதை இத் தேர்தலில் மீண்டும் சர்வதேசத்துக்கு எடுத்துக்காட்டுவர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தல்களையே எதிர்பார்க்கின்றது - என்றார்.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை ப யாழ்ப்பாணம்
ஆடி 20, 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6682.46↑
மிலங்கா(MPI) 6180.05↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1.3Bn
பங்குகளின் அளவு(No.) 46.24Mn
வியாபாரம்(No.) 19286
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
நந்தா 18.60
ஹொட்டல் சிகிரியா 71.70
யோக் அர்கேட் 34.80
பாகியூற் 27.00
குய்ஜெ 169.50
குறைவு(Top 5 losers) - விலை Rs.
சிலோன் லெதர் 4.10
ஈஸ்ரேன் மேக்கன்ர் 1011.00
எஸ் எம் பி லீசிங் 0.70
தலவாகல ரீ எஸ்ரேர் 33.20
கொன்பிபி ஹொட்டல் ஹோல்டிங் 240.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# தேர்தல் தொடர்பாக 14 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை21

உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பாக யாழ்.தேர்தல் மாவட்டத்தில் இருந்து 14 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. என்று யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

கடந்த 19ஆம் திகதி வரை கிடைத்த இந்த முறைப்பாடுகள் விசாரணைக்காக சம்பந்தப்பட்டவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ஒ-ஐ)

# ஏட்டிக்குப் போட்டியாக குடாநாட்டில் மனோ-பிரபா

கொழும்பு, ஜூலை 21

குடாநாட்டில் சகோதரர்கள் இருவர் ஏட்டிக்குப் போட்டியாகப் பிரசாரம் செய்வது யாழ். வாக்காளர் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

மனோ கணேசன், பிரபா கணேசன் ஆகிய இந்தச் சகோதரர்களில் பிரபா கணேசன் எம்.பி., ஆட்சியிலுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும், மனோ கணேசன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஆதரவாகப் பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

ஜனநாயக மக்கள் முன்னணியில் அங்கம் வகித்த இவர்கள் கடந்த பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சியுடன் இணைந்து போட்டியிட்டனர்.

கண்டியில் போட்டியிட்ட மனோ கணேசன் எதிர்பாராத விதமாக தோல்வியுற்றார். கொழும்பில் போட்டியிட்ட பிரபா கணேசன் வெற்றி பெற்றார். பின்னர் அவர் தனது கட்சிக் கட்டுப்பாட்டை மீறி, அரசுத் தரப்புக்குத் தாவினார் என்பது தெரிந்ததே. (ஐ-சி)

# முதன்மை வேட்பாளராக எவரும் நியமிக்கப்படவில்லை

யாழ்ப்பாணம்,ஜூலை 21

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் எந்தச் சபைக்கும் முதன்மை வேட்பாளர்கள் நியமிக்கப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் முதன்மை வேட்பாளராக எஸ்.கௌரிகாந்தன் நியமிக்கப்பட்டுள்ளதாக வெளி வந்த தகவல் குறித்து கருத்துக் கூறுகையில் கூட்டமைப்பு மேற்கண்டவாறு தெரிவித்தது. (ஐ)

# நிகழ்வுகள்

## முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை 21

வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் சங்கானைக் கோட்டம் சங்கானை III குடும்ப முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சங்கானை, மாலியவத்தை ஞானவைரவர் முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

திருமதி ஜெ.அஜந்தாமதி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகச் சங்கானை பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ரி.பிரகாஸம், கௌரவ விருந்தினர்களாக ஆரம்பப் பிள்ளைப் பருவ கல்வி அபிவிருத்திப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.குகனேசனும் வலி. மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணியும் கலந்துகொள்வர். (ற)

## மாநகர சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ்.மாநகர சபையின் ஏழாவது மாதாந்தக் கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

இந்தக் கூட்டம் இன்று நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் அரசின் வாக்குப் பலம் ஒரு சதவீதமாவது அதிகரிக்குமாம்

**எதிர்வு கூறுகிறார் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார**

கொழும்பு, ஜூலை 21

வடக்கில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் அரசுக்கு அங்குள்ள மக்கள் வழங்கும் வாக்குகளில் இம்முறை ஒரு சதவீதமாவது அதிகரிப்பு ஏற்படும்.

-இவ்வாறு தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கில் அரசுக்கான வெற்றி வாய்ப்பு அதிகளவு உள்ளது. கடந்தமுறை தேர்தல்களை விட இம்முறை ஒரு சதவீதமாவது வாக்களிப்பு வீதம் அதிகரிக்கும். இதற்கு நாம் முன்னெடுத்த அபிவிருத்தி நடவடிக்கையே காரணம்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களுக்கு இன்று அபிவிருத்தியே தேவையாகவுள்ளது. அதனையே நாம் செய்கின்றோம். அரசுக்குத் தேவையானவற்றை அல்ல.

இரண்டு வருடங்களுக்கு முன்னரே நாம் அங்கு அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்துவிட்டோம். அதனையே இப்பொழுதும் முன்னெடுத்து வருகின்றோம். இதில் எந்தவித உள்நோக்கமும் இல்லை.

மேல்மாகாணத்தை அபிவிருத்தி செய்வது மட்டும் இலக்கல்ல, மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் வடக்கு- கிழக்கு உட்பட அனைத்து பிரதேசங்களையும் கட்டி எழுப்புவதுதான் அரசின் நோக்கம்.

முதலில் நாட்டில் உள்ள பிரதேசங்களை அபிவிருத்தி செய்தால்தான் நாடு அபிவிருத்தி அடையும்; அவ்வாறு நாடு அபிவிருத்தி அடைந்தால் முதலீட்டுக்கான வாய்ப்புகள் கிட்டும்; தொழில்வாய்ப்புகள் அதிகரிக்கும். இவற்றின் மூலம் கிடைக்கும் நன்மைகளை இலங்கையர்களாகிய நாம் இனிதே நுகரலாம். இதற்கான அடித்தளத்தையே அரசு இட்டு வருகின்றது.

நாட்டின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டே சர்வ



தேசத்திடம் நாம் கொடுக்கல் வாங்கல் செய்கின்றோம். அவர்களுக்கு நாம் வேறு எதனையும் காட்டத் தேவையில்லை.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டமை உண்மையே. ஆனால், அவர்களின் உறவினர்கள் உட்பட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை கட்டி எழுப்புவதே அவர்களுக்கு நாம் செய்யும் பரிகாரமாக அமையும். இதன் பொருட்டே, மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வீடு நிர்மாணித்துக் கொடுத்தல் போன்ற நடவடிக்கைகளை அரசு துரிதமாக முன்னெடுத்து வருகின்றது.

மூன்றுதசாப்தகாலமாக வடக்கு, கிழக்கில் நிலை கொண்டிருந்த தீவிரவாதத்தை முற்றாக அழித்து அரசு நாட்டில் சுதந்திரத்தை நிலைநாட்டியது. அது மட்டுமின்றி, வடக்கில் தற்போது ஜனநாயகத்தையும் நிலை நாட்டியுள்ளது. மக்களுக்கு சுதந்திரமாக வாக்களிப்பதற்கு வழி சமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இதுவே எமக்குக் கிடைத்த பெரும் வெற்றி.

இந்த நிலையில், அரசுக்கு எதிராக மக்கள் வாக்களித்தாலும், அதுவும் எமக்கு வெற்றியே. அதனை நாங்கள் வெற்றியாகவே கருதுவோம். இருப்பினும், எமக்கு வெற்றி வாய்ப்பு அதிகமாகவே உள்ளது. ஜனநாயக உரிமை, அரசியல் சுதந்திரம் என்பன வடக்கில் உள்ளன. மக்கள் தங்களுக்குத் தேவையான பிரதிநிதிகளை சுதந்திரமாகத் தேர்ந்தெடுப்பதற்கான சூழலும் அங்கு உள்ளது.

- இப்படி அவர் தெரிவித்தார். (ஐ-சி)

## கிளிநொச்சியில் சீனி, ரின்மீன் இலவசம்.

கிளிநொச்சி, ஜூலை 21

கிளிநொச்சியில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரசாரக் கூட்டத்துக்குச் செல்லும் மக்களுக்கு கால் கிலோ சீனி, மீன்ரின், அரைகிலோ பருப்பு, அரை கிலோ அரிசி அடங்கிய உணவுப் பொதிகள் வழங்கப்படுகின்றன.

இராணுவத்தினர் மக்களைப் பலவந்தமாக பிரசாரக் கூட்டங்களுக்கு அழைத்துச் செல்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## தொழிலாளி படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

'கொங்கிறீற்' தூண் சரிந்து தலையில் விழுந்ததனால் தொழிலாளி ஒருவர் தலையில் படுகாயமடைந்தும் உடற்காயங்களுக்குள்ளாகியும் சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

யாழ். செயலகத்தில் நேற்று மு.ப. 11 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வரணி கரம்பைக்குறிச்சியைச் சேர்ந்த எஸ். சொரூபகாந்தன் (வயது 27) என்ற இளைஞனே படுகாயமடைந்தார். அங்கு கட்டடத் திருத்த வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (ஒ-4)

# தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு வாக்களித்து சுய நிர்ணய உரிமையை வென்றெடுப்பர்

**முன்னாள் எம்.பி. டாக்டர் இல்யாஸ் நம்பிக்கை**

கொழும்பு, ஜூலை 21

தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு ஒட்டுமொத்தமாக வாக்களித்து தங்கள் சுய நிர்ணய உரிமையை வென்றெடுப்பது நிச்சயம்.

- யாழ். மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டாக்டர் ஐ. எம்.இல்யாஸ் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இன்றைய ஒரு சில அரசியல்வாதிகள் அரசின் ஊதுகுழலாய் இருப்பதைப் பார்த்து முழு முஸ்லிம் சமூகத்தையும் முழுமையாக எடைபோட்டுவிட முடியாது.

இஸ்லாம் அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களுக்கு எப்பொழுதுமே உதவி வந்துள்ளது; குரல் கொடுத்து வந்துள்ளது.

தந்தை செல்வாவின் பாசறையில் வளர்ந்த முஸ்லிம் அரசியல் தலைவர்கள் எத்தனையோ பேர் இன்றும் கிழக்கிலே வாழ்ந்தும், மறைந்தும் உள்ளார்கள்.

அநியாய ஆட்சிக்கு எதிராகத் துணிந்து சத்தியத்தைச் சொல்லி மரணித்த தியாகிகளும் உள்ளனர்.

தமிழ் மக்கள் நிம்மதியுடனும், சுய மரியாதை, கௌரவம், சுய உரிமையுடனும் வாழவேண்டும் என்பதே முஸ்லிம் மக்களின் ஏகோபித்த முடிவாகும். நல்லதை ஏவி, தீயதைத் தடுக்கும் பணியில் நாம் முழுமையாக உங்களுக்கு உதவத் தயாராக உள்ளோம்.

அப்பாவி மக்களைக் கொன்று குவித்தவன் முழுச் சமூகத்தையுமே அழித்தவனாகிறான். ஓர் அப்பாவியைக் காத்தவன் ஒரு நாட்டையும், சமூகத்தையும் காத்தவனாகிறான்.

உயிர்த் தியாகங்கள் செய்த அத்தனை நெஞ்சங்களின் சார்பில் முஸ்லிம் சமூகத்தின் ஒட்டு மொத்தமான வேண்டுகோள். வீட்டுக்கு வாக்களியுங்கள்! தமிழ் மண்ணைக் காப்பாற்றுங்கள்!! (ஐ-சி)

# தமிழ் மக்கள் அரசுடன் இருக்கின்றனர் என்பதை காட்டவே வடக்கில் அமைச்சர்கள் பட்டாளம்

**ஜே.வி.பி. சாடுகிறது**

கொழும்பு, ஜூலை 21

வடக்கிலுள்ள தமிழ் மக்கள் தம்முடன் இருக்கின்றனர் என உலகுக்குக் காட்டவே அமைச்சர்கள் பட்டாளம் வடக்கில் முகாமிட்டுத் தேர்தல் சட்ட திட்டங்களை மீறிச் செயற்பட்டு வருகின்றது. -

- இவ்வாறு ஜே.வி.பி. குற்றஞ்சாட்டுகின்றது.

ஜே.வி.பி. பிரசார செயலாளர் விஜித ஹேரத் எம்.பி. நேற்று 'உதயனு'க்குத் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிளிநொச்சியில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் வாழ வீடின்றி, உண்ண உணவின்றி, தொழில் வாய்ப்புகள் இன்றி கஷ்ட ஜீவனம் நடத்தும்போது 325 மில்லியன் ரூபா செலவில் நவீன விளையாட்டு அரங்கு தேவையா?

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் 19 உள்ளூராட்சி சபைகளுக்கே தேர்தல் நடைபெறுகின்றது. ஆனால், அரசிலுள்ள அனைத்து அமைச்சர்களும் வடக்கில் முகாமிட்டுள்ளனர். இந்த அமைச்சுகளின் வளங்களும், வாகனங்களும் தேர்தல் சட்ட விதிகளுக்கு முரணாக தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

மக்களுக்கு வழமைக்கு மாறாக இலவசமாகப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. அரச வளங்கள், வாகனங்கள், அரச அதிகாரங்கள் இந்தத் தேர்தலில் முறைகேடாகப் பயன்படுத்தப்படுகின்றன.

எதிர்க்கட்சிகளின் வேட்பாளர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர்; தாக்கப்படுகின்றனர். அவர்கள்



பிரசாரம் செய்ய முடியாத வகையில் பலவித இடையூறுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதுகுறித்து தேர்தல் ஆணையாளரிடமும், பொலிஸ் நிலையங்களிலும் முறையிட்டுள்ளோம். ஆனால், எதுவும் நடைபெறவில்லை. எனவே, மக்கள் நிதானமாகச் சிந்தித்து வாக்களிக்கவேண்டும். - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஐ-சி)

## இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் காலில் காயமடைந்து சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் கோப்பாயில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் மிருசுவிலைச் சேர்ந்த எஸ். கெங்கநாதன் (வயது 19) என்ற இளைஞனே படுகாயமடைந்தார்.

இவர் உடனடியாக கோப்பாய் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ஒ-4)

# பாரதிய ஜனதாக் கட்சியின் குழுவினர் லண்டனில் தமிழர் பேரவையுடன் பேச்சு

லண்டனுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் நிதின் கட்காரி தலைமையிலான கட்சியின் உயர்மட்டக் குழுவினரை பிரித்தானிய தமிழர் பேரவையினர் லண்டனில் சந்தித்தனர்.

பிரித்தானியாவுக்கு பிரச்சாரப் பணிகளுக்காக வருகை தந்த குழுவில் பாரதிய ஜனதாவின் மகளிர் அணித்தலைவி ஸ்மிருதி இராணி, ராஜஸ்தான் மாநில முன்னாள் முதல்வர் வசுந்தரா ராய சிந்தியா அம்மையார் மற்றும் டெல்லி மாநில சட்டசபை உறுப்பினர் விஜய் ஜோலி ஆகியோர் அடங்கி இருந்தனர்.

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றம் மற்றும் மானுடத்திற்கெதிரான குற்றங்களை சுயாதீனமான சர்வதேச விசாரணைக்கு உட்படுத்த, பல்வேறு தரப்பினரின் ஆதரவினை திரட்ட பாடுபடும் பிரித்தானிய தமிழர் பேரவை அதன் ஓர் அங்கமாக இந்தியாவின் எதிர்க்கட்சியினரை லண்டனில் சந்தித்து இலங்கையின் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் நிலை குறித்து கலந்துரையாடினர்.

இந்திய அரசு இந்த விடயத்தை இலங்கையோடு கனதியாக எடுத்துச்செல்வது அதன் கடமை என்பதனை ஏற்றுக் கொண்ட நிதீன் தாம் இந்த விவகாரத்தை நாடாளுமன்றத்தில் எழுப்புவதாகவும் உறுதியளித்தார். அத்தோடு நடைபெறவுள்ள சென்னை மாநாட்டில் தாம் இந்த விவகாரத்தை தமது சக உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதாக உறுதியளித்தார்.

இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றத்தினை விசாரிப்பதற்காக சர்வதேச சுயாதீன விசாரணையின் தேவை குறித்துக் கேட்டபோது, நிதீன் ஒரு கொள்கைபற்றுடையுடைய எதிர்க்கட்சி என்ற வகையில், இந்திய அரசு இந்த விவகாரத்தை சர்வதேச அரங்கத்துக்கு எடுத்து செல்ல நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துவதாக உறுதியளித்தார்.

ராஜஸ்தான் மாநில முன்னாள் முதல் பெண் முதல்வரான வசுந்தரா ராய சிந்தியா தமிழரின் நிலை குறித்து அனுதாபம் கொண்டிருப்பதோடு, ஈழத் தமிழர் விவகாரத்தை டெல்லிக்கு எடுத்துச் செல்வதில் தமிழ்நாடு ஆற்றக்கூடிய பங்கின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தினார்.

அந்தக் குழுவில் இடம்பெற்றிருந்த பாரதிய ஜனதா மகளிர் பிரிவின் தலைவி ஸ்மிருதி ராணி அம்மையார் தாம் இலங்கையின் கொலைக்களம் காணொளியை பார்த்து அதிர்ச்சி அடைந்ததாகவும் இந்த விவகாரத்தை தமது கட்சிக்குள் எடுத்துச் செல்வதாகவும் உறுதியளித்தார்.

இலங்கை தமிழர்களுக்கு நடைபெற்ற இன்னல்கள் குறித்து அறிந்த டெல்லி மாநில சட்டசபை உறுப்பினர் விஜய் யோலி அதிர்ச்சியை வெளிப்படுத்தினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உர நிவாரண உதவிகளுக்கு மட்டும் ரூ.5 ஆயிரம் கோடியை செலவிடும் அரசு

கொழும்பு, ஜூலை 21

நிவாரண உதவிகளாக மக்களுக்கு உர வகைகளை வழங்குவதற்கு அரசு ஆண்டு ஒன்றில் 5 ஆயிரத்து 250 கோடி ரூபா செலவிடுவதாகத் தேசிய உரச் செயலகத்தின் பணிப்பாளர் ரஞ்ஜித். தர்மவர்த்தன தெரிவித்துள்ளார்.

நெற்செய்கை தொடர்பாக வழங்கப்படும் உர நிவாரணத்துக்காக 3 ஆயிரத்து 456 கோடிகளும், ஏனைய பயிர்ச்செய்கைகள் தொடர்பாக வழங்கப்படும் உர நிவாரண உதவிகளுக்கு ஆயிரத்து 800 கோடி ரூபாய்களும் வருடாந்தம் அரசால் செலவிடப்படுகின்றது.

நெற்செய்கை தொடர்பாக விவசாயிகளுக்கு 350 ரூபாவுக்கு வழங்கப்படும் உரமூடை ஒன்றின் வர்த்தகப் பெறுமதியின் நூற்றுக்குப் பத்து வீதத்தையே விவசாயி ஒருவருக்கு செலவிடுவதாகவும் எஞ்சிய தொண்ணூறு வீதத்தையும் அரசே வருடாந்தம் செலவிடுகிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு விவசாயிகளுக்கான உரம் நாடு முழுவதும் உள்ள 557 விவசாய சேவை நிலையங்கள் மூலமாகவும் மற்றும் அதிகாரம் பெற்ற 10 ஆயிரம் முகவர்கள் ஊடாகவும் வழங்கப்பட்டு வருகின்றது என்று அவர் மேலும் கூறினார். (ம-22)

# தெற்கு அதிவேகப் பெருந்தெருக்களில் பயணிக்கும் வாகனங்களுக்குக் கட்டணம்

கொழும்பு, ஜூலை 21

விரைவில் திறந்து வைக்கப்படவுள்ள தெற்கு அதிவேகப் பெருந்தெருவில் கொட்டாவைக்கும் காலிக்குமிடையில் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களிடமிருந்து தடவைக்கு 300 ரூபா வீதம் கட்டணம் அறவிடப்படவுள்ளது.

பெருந்தெருக்கள் பிரதியமைச்சர் நிர்மல கொத்தலாவல இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

மேற்படிப் பெருந்தெருவுக்குள் பிரவேசிக்கும் இடங்களில் கட்டணங்களை அறவிடும் கருமபீடங்கள் நிறுவப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பெருந்தெரு மார்க்கத்தில் கொட்டாவையிலிருந்து காலி- பின்னதூவ வரையிலான பகுதியின் நிர்மாணப் பணிகள் ஜனாதிபதியின் பணிப்புக்கமைய இம் மாதத்துக்குள் நிறைவடையவுள்ளன.

பெரும்பாலும் அடுத்தமாதத்துக்குள் அந்த வீதியைத் திறந்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் கூறப்பட்டது.

இந்த அதிவேகப் பெருந்தெருவில் பயணிக்கும் வாகனங்களின் குறைந்தபட்ச வேகம் மணிக்கு 60 கிலோ மீற்றராகவும் அதிகபட்ச வேகம் மணிக்கு 120 கிலோ மீற்றராகவும் இருக்க வேண்டும்.

இந்த மார்க்கத்தில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் பயணிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது எனவும் பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-22)

# விமானப்படையின் புதிய ஓடுதளம் கிளிநொச்சியில்

இலங்கை விமானப்படையால் வன்னியில் முதலாவது விமான ஓடுதளம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. விமானப்படைத் தளபதி எயார் மாஷல் ஹர்ஷ அபேவிக்கிரம தலைமையில் இடம்பெற்ற விசேட விழா ஒன்றில் கடந்த 19 ஆம் திகதியன்று இந்த விமான ஓடுதளம் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. வை 12 ரக இலகு ரக விமானம் ஒன்று இப்புதிய விமான ஓடுதளத்தில் வெற்றிகர மாகத் தரையிறக்கப்பட்டதாகவும் விமானப்படையினர் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி நகரிலிருந்து ஏழு கிலோ மீற்றர் தொலைவில் கிழக்குப்புறமாக நிறுவப்பட்டுள்ள இந்த விமான ஓடுதளத்தின் நீளம் சுமார் ஒரு கிலோமீற்றர் ஆகும். இலகுரக விமானங்களின் பறப்புக்கும் தரையிறக்கத்துக்கும் இந்தத்தளத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை விடுதலைப்புலிகளின் முக்கிய விமான ஓடுதளம் அமைக்கப்பட்டிருந்த இரணைமடு பிரதேசத்தில் புதிதாக விமானப்படை முகாம் ஒன்று நிறுவப் பட்டுள்ளதோடு அந்த விமான ஓடுதளம் புனரமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வலி.வடக்குப் பிரதேச சபை காங்கேசன்துறை, மல்லாகம்
## வேலைக்கான கேள்வி அறிவித்தல்- 2011

சபைநிதி-2011 நிதிமூலம் மேற்கொள்ளப்படும் கீழ்வரும் வேலைகளுக்கான கேள்வி வலி.வடக்குப் பிரதேச சபையினால் கோரப்படுகின்றது. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

★ கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி:
21.07.2011 தொடக்கம் 28.07.2011
பிற்பகல் 3.00 மணிவரை

★ கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:
29.07.2011 நண்பகல் 12.00 மணி வரை

★ கேள்விகள் திறக்கப்படும் திகதி:
29.07.2011 பிற்பகல் 2.30 மணிக்கு.

கேள்விகள் குறிப்பிட்ட காலப்பகுதியில் கிடைக்கக் கூடியவாறு இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், வலி.வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்)" என்ற விலாசத்துக்குப் பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற விலாசத்துக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

01. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
02. இக்ராட் (ICTAD ) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கணியவியலாற்றலையும், (SLS: 573:1982) நியம அளவீடு முறையையும் அறிந்திருத்தல் வேண்டும்.
03. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவிலுள்ள இக்ராட் (ICTAD ) பதிவுப்புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
04. மேலதிக விவரங்களை வலி.வடக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT, NBT உள்ளடங்கலாக) | இருக்கவேண்டிய ஆகக் குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|
| 01. | இக்கிராஉனை கிராமிய வீதி புனரமைப்பு (மல்லாகம்) | 15,000.00 | 575.00 | C09 |
| 02. | சுப்பிரமணியசுவாமி வீதி புனரமைப்பு (பன்னாலை) | 50,000.00 | 575.00 | C08 |
| 03. | தேனிப்புளியடி வீதி அளவெட்டி தெற்கு | 4,500.00 | 575.00 | C10 |

வலி.வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.
21.07.20111

திருமதி க.சிவலிங்கம் யோகேஸ்வரி,
செயலாளர்,
வலி.வடக்கு பிரதேச சபை.

(சி/1884) (38)




கெருடாவில், ஜூலை 21

உடுப்பிட்டி பண்டகைப்பிள்ளை ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடை பெறவுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை தேர்த் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

திருவிழாப் பூசைகளை சிவஸ்ரீ. கு. சேவற்கொடியோன் குருக்கள் நிகழ்த்துவார். (ற-253)

* * *

யாழ்ப்பாணம் , ஜூலை 21

கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தின் முதலாய கோயில் ஸ்ரீ பருவர்த்தனி அம்பாள் சமேத இராமலிங்க சுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறும்.

எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை காலை 5.30 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் ஆரம்பமாகி முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ற-313)

* * *

கொழும்புத்துறை, ஜூலை 21

அரியாலை பிரப்பங்குளம் மகா மாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பெருந் திருவிழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறும்.

எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

திருவிழா கிரியைகளை சிவஸ்ரீ சோ. கணேசராஜக்குருக்கள், சிவஸ்ரீ கு.சோமஸ்கந்தக்குருக்கள் ஆகியோர் இணைந்து நிகழ்த்தவுள்ளனர். (ற-135)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ். நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து 9.15 மணிக்கு தேர்த்திருவிழா இடம்பெறும். மறுநாள் செவ்வாய்க் கிழமை காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

## பணியாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல குளிர்பான உற்பத்தி நிறுவனத்துக்கு பின்வருவோர் தேவைப்படுகின்றனர்.

முகாமையாளர்: சிங்களம் தெரிந்திருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

பணியாளர்: பெண்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0777579568

(6048)

## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை அம்புலன்ஸ் சாரதி வெற்றிடம்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு A வகுப்புச் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் மேற்படி வெற்றிடத்துக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரி தங்கள் சுய விவரத்துடன் பிறப்பு அத்தாட்சி, கல்விச்சான்றிதழ், நற்சான்றிதழ், சாரதி அனுமதிப்பத்திரம் என்பனவற்றின் மூலப்பிரதிகளுடன் 31.07. 2011 முற்பகல் 10.00 மணியளவில் வைத்தியசாலையின் அலுவலகத்துக்கு நேரடியாக சமுகம் தரவும்.

தலைவர்.
மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை,
மூளாய், சுழிபுரம்.

(சி/1886)

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் உறுப்பினர்
பொ.பத்மநாதனின் பாசமிகு
மனைவி
திருமதி பத்மநாதன்பத்மராணி
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்.

உத்தரவு பெற்ற நில அளவையாளர் சங்கம்
வடபகுதி.

(6049)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உங்களின் மன உணர்வுகளை வெளிப்படுத்த வந்துள்ள தருணம்

நாளை மறுதினம் சனிக்கிழமை வடக்கில் நடைபெற உள்ள உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. கடந்த வருடம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலை விட இது விசேடமானதும் பிரதானமானதும் ஆகும். காரணம், இந்தத் தேர்தலில் தமிழ் மக்களின் தீர்ப்பு என்னவாக அமையும் என்று சர்வதேசம் எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.

வன்னிப் போரின் பின்னர், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அமைத்த நிபுணர் குழுவின் அறிக்கையும், சனல் - 4 காணொளியும் உலக நாடுகளை அதிரவைத்துள்ளன.

அதன் பின்னர், நிபுணர் குழு அறிக்கை குறித்தும், சனல் - 4 காணொளிப் படங்கள் குறித்தும் தமிழ் மக்களின் மனநிலை எந்தளவுக்கு இறுக்கமாகிப்போயுள்ளது, அரசுக்கு எதிரான ஓர்மமும் வெறுப்பும் எத்தனை பாகையாக அதிகரித்துள்ளது என்பதனை சர்வதேசம் அறிந்துகொள்வதற்கு உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தல் ஒரு நல்ல சந்தர்ப்பத்தை அளித்துள்ளது.

ஆகையால், வடக்கில் நடைபெறும் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தல், சர்வதேசப் பெறுமானமும் முக்கியத்துவமும் பெறுகிறது என்பதனை எமது வாக்காளர்கள் மனதார உணர்வது அவசியம்.

அபிவிருத்தி, வாழ்வாதார உதவிகள், வேலை வாய்ப்பு என்பவற்றுக்கு முன்னிடம் கொடுப்பது இந்தத் தேர்தலில் உகந்ததும் அல்ல, பொருத்தமானதும் அல்ல என்பதனை மக்கள் தமது மனதில் பதித்துக் கொள்ள வேண்டும்.

தேர்தலில் போட்டியிடும் தரப்புகள் யாவுமே தாம் உங்களது பக்கத்திலேயே நிற்பதாகவும், உங்கள் நலனில் அதீத அக்கறை உள்ளனவாகவும் காட்டிக்கொள்ளும். அது தேர்தல் காலத்தில் அரசியல் கட்சிகள் எல்லாவற்றையும் பீடிக்கும் காய்ச்சல். அந்தக் காய்ச்சலின் வெப்பியாரத்தில் கட்சிப் பிரதானிகளும் வேட்பாளர்களும் வாக்காளர்களைத் தமது பக்கம் இழுப்பதற்கு, என்னென்ன சாத்தியமற்ற வாக்குறுதிகளை வீசி எறிந்து தமது பொறிக்குள் வீழ்த்தலாம் என்று திட்டமிடுவது ஒன்றும் புதிதல்ல.

வடக்குத் தேர்தலிலும் அது தப்பாது நடந்தேறியுள்ளது. ஆனால் அது குறித்து நீங்கள் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை. உங்கள் (வடக்கு வாக்காளர்) ஒவ்வொருவருக்கும், அடிமனதில் உண்டாகும் சாதாரண தேவைகளுக்கு அப்பாலும் உங்கள் பிரதேசம், உங்களுக்குச் சேர வேண்டிய உரிமைகள், அவற்றை விட்டுக் கொடுத்தால் அல்லது முற்றாக இழக்க நேரிட்டால் உங்களதும் பிள்ளைகளினதும் எதிர்காலம் அந்தகார இருளில் மூழ்கும் என்ற எதிர்மறை விளைவுகளை ஒரு வினாடிக்கேனும் மறந்துவிடாதீர்கள்.

வன்னி இறுதிப் போரின் போது உங்கள் வாழ்க்கையில் ஒரு நாளேனும் கனவாக காண்பதற்கேனும் விரும்பாத கோர நிகழ்வுகள் அரங்கேறியதையும் அவற்றின் விளைவுகளால் உங்கள் உடன்பிறப்புகளுக்கு நேர்ந்த கதியினையும் மனதில் இருத்திக் கொண்டு, காலையிலேயே நேரகாலத்துடன் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லுங்கள்.

சர்வதேசம் சனிக்கிழமைத் தேர்தலை எந்தக் கோணத்தில் நோக்குகிறது என்பதனை நெஞ்சிருத்திச் செயற்படுங்கள். நீங்கள் யாருக்கு வாக்களித்தீர்கள் என்பது எவருக்கும் தெரியவராது. தமிழ் இனத்தின் இருப்புக்கும் உரிமைக்கும் வாழ்வுக்கும் ஆதரவாளர்களாக உங்களை ஆக்கிக் கொள்ளுங்கள்; மாற்றிக்கொள்ளுங்கள். நீங்கள் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று உங்களுக்குள்ள ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தத் தவறாதீர்கள்.

தமிழ்ப் பிரதேசங்களில் ஏற்படுத்தப்படும் ஒவ்வாத, மிகப் பெரும் உள்நோக்கத்துடன் செய்யப்பட்டு வரும் மாற்றங்களும் திணிப்புகளும் ஒரு சில வருடங்களில் விளைவிக்கக்கூடிய பாதிப்புகளை உங்கள் மனங்களில் அசைபோட்டுப் பாருங்கள். அப்போது உங்கள் வாக்கு எந்தப் பக்கத்துக்குச் சேரவேண்டும் என்பதனை நீங்களே முடிவு செய்வீர்கள்.

எங்கள் மக்களுக்கு எதனை வேண்டிப் பல தசாப்தங்களாக, எழுத்தில் வகுத்துச் சொல்வதற்கு அடங்காத தியாகங்கள், வீட்டுக்கு வீடு வாசற்படிக்கு வந்து வருத்திய வரன்முறை இல்லாத இழப்புகள், அவற்றின்பால் உண்டான நிர்க்கதி நிலை, கைகொடுக்க எவருமற்ற அநாதை வாழ்வை ஒரு கணம் மீட்டுப்பாருங்கள், கவலையும் கண்ணீரும் தாரை தாரையாக ஊற்றெடுக்கும். அப்போது உங்கள் மனச்சாட்சி, வாக்கை நிதானமாகவும் உணர்வு பூர்வமாகவும் செலுத்துமாறு உந்தும்.

எமக்கான சிறந்த எதிர்காலத்தைத் தக்க வைப்பதற்கு உகந்த முடிவை நீங்கள் எடுப்பீர்கள். இப்போதே அதனை தீர்க்கமாக்குங்கள்.

# சர்வதேச பௌதிகவியல் ஒலிம்பியாட்டில் இலங்கைக்கு முதல் வெள்ளிப் பதக்கம்

## பற்றிக்ஸ் மாணவன் செல்வநித்திலன் சாதனை



யாழ்ப்பாணம், ஜூலை 21

எண்பதுக்கு மேற்பட்ட நாடுகள் பங்கு பற்றிய 42 ஆவது சர்வதேச பௌதிகவியல் ஒலிம்பியாட் போட்டி தாய்லாந்தில் கடந்த 10 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடைபெற்றது.

இதில் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி உயர் தர மாணவன் சிவபாலன் செல்வநித்திலன் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார். இதுவரை காலம் நடைபெற்ற இந்தப் போட்டிகளில் இலங்கைக்குக் கிடைத்த முதலாவது வெள்ளிப் பதக்கம் இதுவாகும்.

இந்தப் போட்டிக்காக மாணவர்களைத் தெரிவு செய்து பயிற்சி அளித்து அனுப்பும் பணியை, கொழும்புப் பல்கலைக்கழக பௌதிகவியல் துறையும், இலங்கை பௌதிகவியல் நிறுவனமும் 2005 ஆம் ஆண்டு முதல் இணைந்து செயற்படுத்தி வருகின்றன.

ஜீ.சி.ஈ. உயர்தர வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கிடையில் ஆண்டு தோறும் அகில இலங்கை ரீதியாக நடைபெறும் இலங்கை பௌதிகவியல் போட்டிப் பரீட்சையில் அதி உயர் புள்ளிகள் பெற்ற மாணவர்களே ஆசிய மட்டப் போட்டிக்கும், பின்னர் சர்வதேச மட்டப் போட்டிக்கும் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

மாணவன் செல்வநித்திலன் 2010 ஜூலை மாதம் நடைபெற்ற அகில இலங்கை பௌதிகவியல் ஒலிம்பியாட்டில் 100 புள்ளிகள் பெற்று ஆசிய மட்டப் போட்டிக்கான எண்மர் குழுவுக்குத் தெரிவானார். இஸ்ரேல் நாட்டில் 2011 மே மாதம் நடைபெற்ற இந்த 12 ஆவது ஆசிய பௌதிகவியல் ஒலிம்பியாட்டில் கௌரவக் குறிப்புச் சான்றிதழ் பெற்ற ஒரேயொரு இலங்கையர் இவராவார். இதில் 17 ஆசிய நாடுகள் பங்குபற்றின.

தொடர்ந்து தாய்லாந்தில் நடந்த 42 ஆவது சர்வதேச பௌதிகவியல் ஒலிம்பியாட்டில் பங்கு பற்றிய ஐவர் கொண்ட இலங்கைக் குழுவிலும் இடம்பெற்ற இவர், இந்தப்போட்டியில் வெள்ளிப்பதக்கம் பெற்ற முதல் இலங்கையர் என்ற பெருமையைப் பெறுகின்றார். மேலும் இந்தக் குழுவைச் சேர்ந்த மாணவர்கள் இருவர் வெண்கலப் பதக்கங்களையும், ஒருவர் கௌரவ குறிப்புச் சான்றிதழையும் பெற்றுள்ளனர்.

# கிராம சேவகர், சமுர்த்தி அலுவலர் பதவிகளுக்கு விரைவில் ஆள்சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21

கிராம அலுவலர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்குப் போட்டிப் பரீட்சை மூலம் ஆள்சேர்ப்பு இடம்பெறவுள்ளது.

இந்த வருட இறுதியில் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ. டி.ஜெ. செனிவிரட்ணா இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

ஜீ.சி.ஈ. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்திபெற்றவர்கள் இதற்கு விண்ணப்பம் செய்யலாம்.

நாடளாவிய ரீதியில் 2200 கிராம அலுவலர் பதவி வெற்றிடங்களுக்கும் 4800 சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் களுக்கும் ஆள்சேர்ப்பு இடம்பெறவுள்ளது:

மேற்படி இரு பதவிகளுக்கும் ஒரே தடவையில் விண்ணப்பம் கோரப்பட்டு வெவ்வேறு திகதிகளில் பரீட்சை நடத்தப்பட்டு ஆள்சேர்ப்பு இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-302)

# 140,000 ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுகள் இல்லை

## ஐக்கிய ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 21

ஒரு லட்சத்து 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு 2008 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை என அகில இலங்கை ஐக்கிய ஆசிரிய சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஆசிரியர் சேவையில் வகுப்பு 3 இல் இருந்து வகுப்பு 2 வரையும், 2-II இல் இருந்து வகுப்பு 2-I வரையும் வகுப்பு ஒன்றின் பதவி உயர்வுகளும் வழங்கப்படவில்லை எனத் சங்கத்தின் தலைவர் யல்வெல பஞ்ஞாசேகரதேரர் கொழும்பில் ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகக் கல்வித்துறை அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், சம்பந்தப்பட்ட அமைச்சு இது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லையெனவும் அவர் தெரிவித்தார். (த-22)

# சாத்வீக உணவு என்றால் என்ன?

சாத்வீக உணவு என்பது வாயினால் உட்கொள்ளப்படுவதை மட்டும் உள்ளடக்கி நிற்பதொன்றல்ல. அது ஐம்புலன்களாலும் உட்கொள்ளப்படும் உணவைக் குறிக்கின்றது. கண்கள், காதுகள், நாசி, கைகள், வாய் ஆகியவற்றால் உட்கொள்ளப்படுவதேயாகும். நாம் சாத்துவீக உணவை உட்கொள்கின்றோம் எனக் கூறுவதனால், ஐந்து புலன்களாலும் உட்கொள்ளப்படும் உணவு சாத்வீக இயல்பு படைத்ததாக இருக்கவேண்டும். இவ்வாறாக நாம் ஐந்து புலனுறுப்புகளாலேயும் சாத்வீக உணவையே உட்கொள்ளவேண்டும்.

ஐம்பொறிகளால் ஏற்படுத்தப்படும் மாசிலிருந்து (பேச்சு, பார்வை, கேட்டல், எண்ணம், செயல்) விலகிச் செல்வோமானால் நாம் எமது தெய்வீகத்தன்மையை உணரக்கூடியதாய் இருப்பதுடன் பரமாத்மாவாகவும் வர இடமுண்டு.

உடம்பு ஒரு ஷேத்திரம் - கோயில் - உடம்பாகிய இந்தக் கோயிலுக்கு ஐந்து வாயில்களுண்டு - ஐம்புலன்கள் - இந்தப் புனிதமான உடம்பிலே இருக்கும் ஐம்புலன்களது கதவுகளும் தூய்மையானதும், தெய்வீகமானவையுமே உட்புவதற்கு திறந்து இருக்கவேண்டும். இந்த ஐம்புல வாயில்களினூடாக எதுவித அசுத்தத்தன்மைகளையும் உட்புகுவதற்கு இடமளிக்கக் கூடாது.



(நன்றி: சத்தியசாயி பாபாவின் அருளுரைகள்)

சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பிரதேச செயலர் பிரிவு மக்களுக்கு அரசின் தேர்தல் கால உதவிகள் இல்லை

## மாநகர சபைக்குத் தேர்தல் இல்லாமையே காரணம்

யாழ்ப்பாணம்,ஜூலை21

யாழ்.மாநகர சபைக்கான தேர்தல் இடம்பெறாமையால் யாழ். பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட மக்களுக்கு அரசு உதவிப் பொருள்கள் எதனையும் வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 13ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட குழுவினர் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலை இலக்காகக் கொண்டு மக்களுக்கான உதவிகள் பலவற்றை வழங்கியதுடன் பல அபிவிருத்தித் திட்டங்களையும் ஆரம்பித்து வைத்தனர்.

இந்த மாதம் 9ஆம் திகதி வடமாகாண ஆளுநரின் அலுவலகத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் தலைமையில் நடந்த கலந்துரையாடலின் போது யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டம் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இதன் பின்னர் 10ஆம், 11 ஆம் திகதிகளில் யாழ்.மாவட்ட செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் பிரதேச செயலர்களுக்கான கூட்டம் இடம்பெற்றது. இதில் வைத்தே ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள், திறப்பு விழாக்கள், உதவிப் பொருள்கள் விநியோகம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் யாழ். பிரதேச செயலரும் கலந்து கொண்டிருந்தார். இருப்பினும் அந்தப் பிரதேசத்திற்கு அமைச்சர்கள் பயணம் செய்ய நாள் ஒதுக்கப்படவில்லை.

இருப்பினும் யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மக்களுக்கு வழங்கவென சாரம் மற்றும் சேலை என்பன ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டன. அவை இதுவரை மக்களுக்கு விநியோகிக்கப்படவில்லை.

அதேபோன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் ஏனைய இடங்களில் ஆரம்பித்து வைத்த அடிக்கல் நட்டு - திறந்துவைத்தல் போன்ற வேலைத் திட்டங்கள் பலவும் யாழ். பிரதேச செயலர் பிரிவிலும் இருந்தன. இருப்பினும் அவைகளை அமைச்சர்கள் எவரும் ஆரம்பித்து வைக்கவில்லை.

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்டதாக இந்தப் பிரதேச செயலகம் உள்ளது. மாநகர சபைக்கு இப்போது தேர்தல் நடைபெறவில்லை. இதனால்தான் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் இடம்பெற்ற திட்டங்கள் போன்று யாழ். பிரதேச செயலர் பிரிவில் அவை இடம்பெறவில்லை. இருப்பினும் மாநகர சபைக்குச் சொந்தமான வீதிகளை காப்பெற் வீதிகளாக்கும் செயற்றிட்டம் மட்டுமே ஆரம்பிக்கப்பட்டது.

மக்களை தம் பக்கம் கவர்வதற்காக அரச நிகழ்வுகளை தமது அரசியலுக்காக பயன்படுத்தி அரசு 14 பிரதேச செயலகங்களில் வேலைத் திட்டங்களை மேற்கொண்டது எனவும் மாநகர சபைக்கான தேர்தல் இடம்பெறாமையால் யாழ். பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வேலைத்திட்டம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (த-15)

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் 4 பாடசாலைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட பிரதேசங்களில் கடந்த வாரம் திறக்கப்பட்ட நான்கு பாடசாலைகளிலும் மாணவர் வரவு நன்றாக உள்ளதாக வடமராட்சி கல்விப்பணிப்பாளர் வ.செல்வராஜா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடமராட்சி கிழக்கில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் மாணவர் வரவு நன்றாக காணப்படுகின்றது.

கட்டைக்காடு பாடசாலையில் அண்ணளவாக 90 மாணவர்களும், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலம், வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்கப்பாடசாலை ஆகியவற்றில் 180 மாணவர்களும், கேவில் தமிழ்க் கலவன் பாடசாலையில் 48 மாணவர்களும் கல்வி பயின்று வருகின்றனர்.

வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. 'என்றிப்' திட்டத்தின் கீழ் கட்டைக்காடு பாடசாலையில் கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது என்றார்.

இதேவேளை எதிர்வரும் 21 ஆம் திகதி மீள் குடியமர அனுமதிக்கப்பட்ட நாகர்கோயில் மேற்கு, நாகர்கோயில் தெற்கு பகுதியில் உள்ள பாடசாலைகள் தொடர்பாக கேட்டபோது,

அங்கிருந்த நாகர்கோயில் மகாவித்தியாலயக் கட்டடம் போரினால் முற்றாக அழிவடைந்துள்ளது.

இதனால் அங்கு தற்காலிக கொட்டகை ஒன்றை நிறுவி கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்க தீர்மானித்திருப்பதாக கல்விப்பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (த-319)

# 18 ஆயிரம் லீற்றர் தார் யாழ்ப்பாணத்துக்கு வந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 21

குடாநாட்டு வீதிகளைப் புனரமைக்கவென நேற்று இரண்டு பௌசர் வாகனங்களில் 18 ஆயிரம் லீற்றர் தார் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

அத்துடன் தார் ஊற்றும் வாகனம் ஒன்றும் எடுத்து வரப்பட்டது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன் வீதிகளை அவசர அவசரமாக புனரமைக்கவே இந்தத் தார் எடுத்துவரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் புனரமைப்பு பணிக்கென பாரம் தூக்கி மற்றும் ரோலர் வாகனங்களும் ஏற்கனவே கொண்டு வரப்பட்டுள்ளன. (த-26)

# 11 வருடங்களின் பின் நேற்று மீள் குடியமர்வு

தென்மராட்சி, ஜூலை 21

எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவு மக்கள் 11 வருடங்களின் பின்னர் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு பிரதி அமைச்சர் இந்திக குணவர்தன மக்களை மீளக் குடியமர்த்தும் நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (207)

# ஜெய்ப்பூர் நிறுவனத்தின் மூலம் 50 ஆயிரம் பேருக்கு உதவிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தின் கடந்த 24 வருடகால சேவையில் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட பயனாளிகள் பயன் பெற்றுள்ளதாக இந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிறுவனத்தின் செயற்கை அவயம் பொருத்தும் பகுதி, குறைபாட்டு நிவர்த்தி உறுப்புப் பகுதி, நடமாடும் உபகரணப் பகுதி, இயன் மருத்துவப்பகுதி, புனர்வாழ்வுச் சேவைகள் ஆகியவற்றின் ஊடாக இந்த 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

செயற்கை அவயம் பொருத்தும் பகுதியில் கால்கள் 5 ஆயிரத்து 80 பயனாளிகளுக்கும் கைகள் 245 பயனாளிகளுக்கும் பொருத்தப்பட்டுள்ளன.

குறைநிவர்த்தி உறுப்புப் பகுதியில் சார்புறுப்புக்கள் ஆயிரத்து 282 பேருக்கு பொருத்தப்பட்டுள்ளன.

அத்துடன் மாற்றுவலுவுடையோரின் போக்குவரத்து இடையூறுகளைக் கருத்தில் கொண்டு நடமாடும் உபகரணப் பகுதியால் 554 பேருக்கு முச்சக்கர வண்டிகளும், 335 பேருக்கு சக்கர நாற்காலிகளும், 807 பேருக்கு சக்கர நாற்காலிகளும், 2 ஆயிரத்தி 388 பேருக்கு முழங்கை ஊன்றுகோலும், 187 பேருக்கு நடைதாங்கிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை இயன் மருத்துவப் பகுதியில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளிகள் வருகை தந்தபோதும் 3 ஆயிரத்து 143 பேருக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் மாற்று வலுவுடையோர் புனர்வாழ்வு பெறும் வகையில் 371 பேருக்கு சுயதொழில் ஊக்குவிப்புக்கடன் உதவியும், 300 மாணவர்களுக்கு கல்வியை ஊக்குவிக்கும் வகையில் பண உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-313)

## தேவைகள் என்ன?



அறியும் ஆவல்: அண்மையில் யாழ். ஒஸ்மானியா கல்லூரிக்குச் சென்ற சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகாரப் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.ஹிஸ்புல்லா அங்குள்ள முறைசாரக்கல்விப் பிரிவில் மாணவிகளால் தைக்கப்பட்ட ஆடைகளைப் பார்வையிடுகிறார். (த-7)

# வடக்கு உள்ளூராட்சி உதவியாளர் சேவைக்கு புதிய பிரமாணக் குறிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21

வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் உள்ளூராட்சி உதவியாளர் சேவைக்கு புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு வெளியிடப்படவுள்ளது.

மாகாண ஆளுநரின் பணிப்புரையின்பேரில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் புதிய சேவை பிரமாண குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

புதிதாக தயாரிக்கப்பட்ட உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான சேவைப்பிரமாண குறிப்பு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் வடமாகாண உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கப்படும் எனப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 09.07.1999 இல் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு கடந்த 12 வருடங்களாக சேவை பிரமாண குறிப்பு தயாரிக்கப்படவில்லை. கடந்த காலங்களில் மூன்று சேவைப்பிரமாணக் குறிப்பு தயாரிக்கப்பட்ட போதும் அவை உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் அங்கீகரிக்கப்படவில்லையென ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவித்தனர். (த)

# மருதங்கேணி வைத்தியசாலையில் மருந்தாளர் இல்லாமையால் சிரமம்

யாழ்ப்பாணம்,ஜூலை 21

மருதங்கேணி அரசினர் வைத்தியசாலையில் மருந்தாளர் களாகச் சுத்திகரிப்பு தொழிலாளர்களே கடமையாற்றுவதாக அங்கு செல்லும் நோயாளிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மருதங்கேணி வைத்தியசாலையில் இருந்த மருந்தாளர் அண்மையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குத் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டார். இதனையடுத்து அங்கு அரசினர் வைத்தியசாலையில் மருந்தாளர் பதவி வெற்றிடமாகியது. இதனால் அங்கு சுகாதாரத் தொழிலாளர்களே மருந்தாளர்களாகப் பணியாற்றி வருவதாக அங்கு செல்லும் நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் சிலவேளைகளில் வைத்தியர் எழுதும் மருந்துகளை விளங்கிக்கொள்ளாமல் வேறு மருந்துகளை வழங்குவதனால் அங்கு செல்லும் சிறுவர்கள், நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

போரினால் பாதிக்கப்பட்டு மீள்குடியமர்ந்துள்ள மக்களின் மருத்துவ தேவைகள் இவ்வாறு அசமந்தப்போக்கில் இடம்பெறுவதாகவும் உடனடியாக மருந்தாளரை நியமிக்குமாறும் அந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி விடயம் தொடர்பாக அந்தப் பிரதேச மக்கள், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர். இரவீந்திரன், வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுவரவுள்ளதாகத் தெரிவித்தனர். (த-302)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### நடந்தவைகள் அனைத்தையும் மறந்து விடுவோம்

# பழைய சம்பவங்களைப் பேசுவதில் அர்த்தமில்லை என்றார் ஜனாதிபதி

சாவகச்சேரி, ஜூலை 21

நாம் எல்லோரும் ஒரு தாய் மக்களே. எல்லோரும் சுய கௌரவத்தோடு வாழவேண்டும். நாம் நமது மக்களுக்காக சேவை செய்ய வேண்டும். பழைய சம்பவங்களைபேசுவதில் அர்த்தமில்லை. நான் உங்களை நம்புகின்றேன் - இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நகர சபை விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் நடைபெற்ற விசேட கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்:

கடந்த 30 வருடங்களாக பின் தள்ளப்பட்ட வட பிரதேசத்தை மீண்டும் முன்னேற்ற வேண்டிய நிலை உள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நான் வெற்றி பெற்றேன். எனது அமைச்சரவையில் 161 நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளனர். அவர்களில் தமிழ் மொழி பேசும் உறுப்பினர்களும் உள்ளனர்.

பௌத்த, இந்து, இஸ்லாம் மதங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் உள்ளனர். எனவே இந்த நாட்டைக் கட்டிஎழுப்ப நாம் ஒன்று படவேண்டும்.

நாங்கள் முழு நாட்டுக்கும் சேவை செய்யவேண்டும். முப்பது வருடங்களாக பின் தள்ளப்பட்ட பிரதேசங்களை வளப்படுத்தவேண்டும். எமது பிரச்சினைகளை நாமே தீர்க்கவேண்டும். இந்தப் பகுதிகளில் பல அபிவிருத்தி வேலைகளைச் செய்கின்றோம்.

புனர்வாழ்வு பெற்ற இளைஞர், யுவதிகளுக்கு பல நலத் திட்டங்களை செயற்படுத்துகின்றோம். இவர்களை வெளிநாடுகள் செல்ல வசதி செய்து கொடுத்துள்ளோம். மக்களுக்கு பொருள் வசதி, பண வசதி செய்துள்ளோம். மீள்குடியேற்றம் செய்துள்ளோம்.

இது பெரிய விடயம் . நவீன வசதியுடன் வைத்தியசாலை அமைத்துள்ளோம். சுகாதாரம் மிக முக்கியமானது. நமது மக்களுக்காக சேவை செய்யவேண்டும். பழைய சம்பவங்களை பேசுவதில் அர்த்தமில்லை. உங்களுக்கு வளமான எதிர்காலம் உண்டு - என்றார்.

அவர் சிங்களத்திலும் தமிழ் மொழியிலும் உரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் பொதுமக்கள் கலந்து கொண்டனர். பிரதமர் டி.எம்.ஜெயரட்ண. அமைச்சர்களான டக்ளஸ்தேவானந்தா, றிசாத் பதியுதீன் உட்படப் பலர் இதில் உரை நிகழ்த்தினர். (த-131)

## தென்மராட்சி கலாசார மண்டபத்தை நவீன வசதியுடன் புனரமைக்க பணிப்பு

தென்மராட்சி,ஜூலை 21

சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்றகலாசார மண்டபத்தை நவீன வசதிகள் கொண்ட மண்டபமாக மாற்றுவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் அடுத்தமுறை இங்கு கூட்டம் நடத்தும் வேளையில் நவீன முறையிலான மண்டபமாகத் திகழவேண்டும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தென்மராட்சி பிரதேச செயலருக்கு பணிப்புரை வழங்கி அதற்கான மதிப்பீட்டை உடனடியாக அனுப்பி வைக்குமாறும் கூறினார்.

தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் மண்டபம் போதிய வசதிகள் இன்றி உஷ்ணமாக இருந்ததை அவதானித்த அமைச்சர் இவ்வாறு பணிப்புரை வழங்கினார்.

மண்டப வேலைகளுக்கு ஆறு கட்டங்களாக யாழ்.அரச அதிபரினால் நிதி உதவி வழங்கப்பட்டு அமைக்கப்பட்ட போதிலும் வேலைகள் இன்னமும் பூர்த்தியடையாத நிலையில் மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-207)

## குடிதண்ணீர் விநியோகம் விரைவில்

யாழ்ப்பாணம், ஜூலை 21

இருபாலை மற்றும் கோப்பாய் பகுதிக்கான குழாய் மூலமான குடிதண்ணீர் விநியோகம் விரைவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

நிலாவரையில் இருந்து நிலத்தடி குழாய் மூலம் இந்தப் பிரதேசங்களுக்குக் குடிதண்ணீர் வழங்கும் பணிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

இந்தக் குடிதண்ணீர் திட்டத்தின் மூலம் 2 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் நன்மை அடைவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-26)

## இருளில் மூழ்கியுள்ள கொழும்புத்துறை வீதி

கொழும்புத்துறை, ஜூலை 21

கொழும்புத்துறை வீதியில் இரவு நேரத்தில் வீதிவிளக்குகள் ஒளிராது இருள்சூழ்ந்து காணப்படுவதால் அடிக்கடி வீதி விபத்துக்கள் இடம்பெறுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியில் உள்ள மின் கம்பங்களில் மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள நிலையிலும் அவை நீண்டகாலமாக ஒளிராத நிலையிலேயே உள்ளதாகத் தொிவிக்கின்றனர்.

தற்போது உதயபுரம், மணியந்தோட்டம், வசந்தபுரம், எழிலூர் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதையடுத்து இந்த வீதியில் இரவிலும் சன நடமாட்டம் அதிகமாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியில் விபத்துக்கள் மற்றும் திருடர், விஷமிகளின் நடவடிக்கைகளைக் கட்டுபடுத்த மின்விளக்குகளை ஒளிரச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (எ-135)

## மண்டைதீவுக்கு இதுவரை மின் விநியோகம் இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 21

மண்டைதீவுக்கு இதுவரை மின்விநியோகம் வழங்கப்படாமை குறித்து அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் தற்போது அபிவிருத்திப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படுகின்ற அதே வேளை மண்டைதீவுப் பிரதேசம் தொடர்ந்தும் புறக்கணிக்கப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தமது பிரதேசத்துக்குப் பல அமைச்சர்களும் அதிகாரிகளும் வந்து செல்கின்றபோதும், இந்தப் பகுதிக்கான மின் விநியோகம் தொடர்பில் எவ்வித கவனமும் செலுத்தப்படவில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மண்டை தீவுப் பகுதிக்கான மின் விநியோகப் பணிகளில் தொடர்ந்தும் அசமந்தப் போக்குக் கடைப்பிடிக்கப்படுவதாகவும் அவர்கள் கூறினார்கள். (த-26)

## வல்வெட்டித்துறைப் பகுதிக்கு குடிதண்ணீர் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை 21

வல்வெட்டித்துறை நகர சபைக்குட்பட்ட நாவலடி- ஊரிக்காடு, மயிலியதனை, கம்பர்மலை, வல்வெட்டித்துறை ஆகிய பிரதேச மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்கப்படப்படவுள்ளதாக யாழ். தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் உதவிப் பொதுமுகாமையாளர் எந்திரி தி.பாரதிதாசன் தெரிவித்தார்.

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்துக்கு அருகில் 63 மில்லியன் ரூபா செலவில் பாரிய நீர்த் தாங்கியும் அலுவலக கட்டடமும் அமைக்கப்பட்டு வருகின்றன.

குடத்தனை நீர் நிலையில் இருந்து கொண்டுவரப்படும் குடிதண்ணீர் நீர்த் தாங்கிக்கு ஏற்றப்பட்டு வல்வெட்டித்துறை நகர சபைக்குட்பட்ட நாவலடி - ஊரிக்காடு, மயிலியதனை, கம்பர்மலை, வல்வெட்டித்துறை ஆகிய மக்களுக்கு குழாய் மூலம் பகிர்ந்து வழங்கப்படவுள்ளன.

இதன் மூலம் தினமும் 750 மீற்றர் கன அளவு நீர்வழங்கப்படும்என்று அவர் மேலும் கூறினார். (த-302)

### அபிவிருத்தி...



நல்ல தருணம்: அண்மையில் சங்கானைக்கு வருகை தந்த அமைச்சர் பசில் ராஜபக்ஷ பாடசாலை மாணவிகள் சிலருக்கு சைக்கிள்களை வழங்குகிறார். அருகில் அமைச்சர்களான பவித் திரா வன்னியாராச்சி, ஹிஸ்புல்லா, டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் உள்ளனர். (த)

## தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 21

வேலணை கிழக்கில் வீடொன்றில் இருந்து தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலத்தை ஊர்காவற்றுறைப் பொலிஸார் திங்கட்கிழமை மீட்டுள்ளனர்.

இவரின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அந்தச் சடலத்தைப் புதைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

வேலணை கிழக்கைச் சேர்ந்த சோமசுந்தரம் ஆனந்தசிவராசா (வயது-56) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு மீட்கப்பட்டார். சம்பவ இடத்துக்குச் சென்ற நீதிவான் திருமதி ஜோய் மகாதேவா விசாரணைகளை மேற்கொண்டார்.

சடலத்தை உடற்கூற்றுப் பரிசேதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-4)

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணம்

யாழ்ப்பாணம்,ஜூலை 21

நலிவுற்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக யாழ். எயிட் நிறுவனத்தால் காலணிகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் பாடசாலை அதிபர் திருமதி கே.அசோக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இலங்கை நிர்வாக சேவை அதிகாரி பொ.வாக்சன் கலந்துகொள்வார். (த-319)

## தென்மராட்சி முன்பள்ளிகளின் 1000 சிறுவர்களுக்கு உதவிகள்

தென்மராட்சி,ஜூலை 21

தென்மராட்சி பிரதேச முன்பள்ளிகளைச் சேர்ந்த ஆயிரம் சிறார்களுக்கு கடந்த 18 ஆம் திகதி கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி நகரில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அலுவலகத்தில் தனியார் போக்குவரத்துத் துறை அமைச்சர் சீ.வி.இரத்நாயக்கா, மேல் மாகாண வீதிகள் அமைச்சர் நிமால் லங்சா, அமைச்சரின் இணைப்பாளர் றொசான் குணவர்த்தன, ஈ.பி.டி.பியின் தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ் ஆகியோர் இந்தக் கற்றல் உபகரணங்களை முன்பள்ளி சிறார்களுக்கு வழங்கினர்.

பிரதேசத்தைச் சேர்ந்த 22 முன்பள்ளிகளின் சிறார்கள் நேற்றைய நிகழ்வில் கலந்து கொண்டு கற்றல் உபகரணப் பொதிகளைப் பெற்றுக் கொண்டனர். (த-207)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. அதிபர் திருமதி ந.சந்திரகுமாரால் விருந்தினர்கள் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்படுகின்றனர். (ம-14)

# இலங்கைப் பணியாளர்கள் ஈராக்கில் உண்ணாவிரதம்

## சம்பள நிலுவை வழங்குமாறு கோரிக்கை

இலங்கை பணியாளர்கள் 26 பேர் மூன்றாவது முறையாகவும் ஈராக்கின் அல்- அமாரா நகரில் நேற்றுமுன்தினம் உண்ணாவிர தத்தை ஆரம்பித்துள்ளனர். 19 மாத சம்பள நிலுவை வழங்கி தம்மை இலங்கைக்கு அனுப்புவதாக ஈராக் அரசு வழங்கிய வாக்குறுதியை இதுவரை நிறைவேற்றாத காரணத்தினால் மீண் டும் உண்ணா விரதத்தை ஆரம் பித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தமது பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுத் தரும்வரை தமது உண்ணாவிரதத்தை கைவிடப் போவதில்லை என்று உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள பணியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.எனினும் இதுவரை குறித்த இலங்கையர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்குவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட இலங்கையர்கள் இதற்கு முன்னரும் இரண்டு தடவைகள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த சந்தர்ப்பங்களில் ஈராக் அரச பிர திநிதிகள் அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்த காரணத்தினால் உண்ணா விரதம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. (வ)

## வாராந்த செற்பொழிவு

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந் துள்ள பெரியாழ் வார் ஆச்சிரமத் தில் பிரதி ஞாயிற் றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் வாராந்த நிகழ்வில் எதிர் வரும் 24 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை 'பக்தி' என்னும் தலைப்பில் சொற் பொழிவு இடம் பெறவுள்ளது.

இந்தச் சொற் பொழிவை சைவப் புலவர் சி.நவரட் ணம் நிகழ்த்தவுள் ளார். (வ-78)

**ஊழியர் தேவை**

எமது ஸ்தாபனத்தில் பொருள்கள் பொதி செய்வதற்கும் சிட்டைகளின் படி பொருள்களை எடுத்து வைத்துப் பொதி செய்வதற்கும் "முன் அனுபவமுள்ள" பெண்/ ஆண் ஊழியர்கள் தேவை.

*திறமைசாலிகளுக்கு ஒரு நாளைக்கு ரூபா. 350 வழங்கப்படும்.*

குறிப்பு: முன்பு சில்லறைக் கடைகளில் நிறுத்து வேலை செய்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*கிராம சேவகரின் சிபாரிசுக் கடிதம் மற்றும் சுய விவரத்துடன் நேரில் வரவும்.*

**சிவா நறுமணப் பூங்கா**

இல.288, ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.

021 222 2567 (சி/1882)

மஹஜன சம்பத
மஹஜன சம்பத
Mahajana Sampatha

19.07.2011

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2421

வெற்றி எழுத்து: Q
வெற்றி எண்கள்: 9 6 6 3 6 7

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Q | 9 | 6 | 6 | 3 | 6 | 7 | ரூபா. 11,611,173/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 9 | 6 | 6 | 3 | 6 | 7 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 6 | 6 | 3 | 6 | 7 | ரூபா. 100,000/= | பரிசுகள் 14 |
| 3 பரிசுகள் | | | | 6 | 3 | 6 | 7 | ரூபா. 10,000/= | பரிசுகள் 137 |
| 4 பரிசுகள் | | | | | 3 | 6 | 7 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1367 |
| 5 பரிசுகள் | | | | | | 6 | 7 | ரூபா. 100/= | பரிசுகள் 13852 |
| 6 பரிசுகள் | | | | | | | 7 | ரூபா. 20/= | பரிசுகள் 137557 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 9 | 6 | 6 | 3 | 6 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 12 |
| 8 பரிசுகள் | | 9 | 6 | 6 | 3 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 143 |
| 9 பரிசுகள் | | 9 | 6 | 6 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1381 |
| 10 பரிசுகள் | | 9 | 6 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 13842 |
| 11 பரிசுகள் | Q | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 54979 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 12,466,120.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 12,939,009.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 2470662, 4607000, Hotline: 2433631

# நடிகர் திலகம் ஒரு சகாப்தம்



தமிழக மக்களுக்கும் உல கெங்கும் பரந்து வாழும் தமிழர்களுக்கும் இந்தி யாவுக்கும் பெருமை தேடித்தந்தவர் நடிகர் திலகம் சிவாஜிகணேசன்.

தனது குணசித்திர நடிப்பால், தமிழர் தம் பண்பாட்டுச் சிறப்புக்களை வெளிக் காட்டியவர். சிம்மக்குரலால் சீரிய கருத்துக்களை உரத்துச் சொன்னவர். அவரது பத்தாவது நினைவு தினத்தை இன்றைய தினம் அவரது ரசிகர்களும், அன்பர்களும் நினைவு கூருகின்றார்கள்.

நடிப்புலகத்தின் அகராதியாக விளங்கியவர் தமிழக அரசின் சிறப்புப் பட்டங்கள் பலவற்றைப் பெற்றவர். பத்மஸ்ரீ பத்ம பூஷன், தாதா சாகேப் பாஸ்கே விருது போன்ற உயரிய விருதுகள் பலவற்றை இந்திய அரசு அவருக்கு வழங்கியது.

அமெரிக்க அரசு நயாகரா நகரத்துக்கு சிவாஜியை அழைத்து ஒரு நாள் அதி பராக நியமித்துக் கௌரவித்தது.

பிரான்ஸ் நாடு அந்த நாட்டின் அதி உயர் கௌரவ விருதான செவாலியர் விருதை அவருக்கு வழங்கிப் பெருமைப்படுத்தியது.

இத்தனை உயர் பெருமைக்கும் உரித்துடையவரான சிவாஜி கணேசன் 1928 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1ஆம் திகதி பிறந்தார். 1952 ஆம் ஆண்டு மணவாழ்வில் இணைந்து கொண்டார். அத்துடன் தொடங்கிய திரையுலக வாழ்க்கையில் வெற்றி நடைபோட்ட முதலாவது படமான 'பராசக்தி' படத்தின் மூலம் கதாநாய கனாக அறிமுகமானார். அவரது இந்த முதலாவது படம் இலங்கை யிலும் இந்தியாவிலும் பெருவெற்றி கண்டது. நல்ல தமிழ் பேசும் தனது நாவன்மையால் கேட்போர் மனங்களைக் கொள்ளை கொண்டார்.

பராசக்தியைத் தொடர்ந்து பலநூறு படங்கள் நூறு நாள்களுக்கு மேல் திரையிடப்பட்டு ரசிகர்களின் நிரம்பிய ஆதர வைப் பெற்றன.

அவ்வாறு 100 நாள்களுக்கு மேல் திரையிடப்பட்ட படங்கள் நூற்றுக்கு மேலும் வெள்ளி விழாக்கொண்டாடிய படங்கள் 15 இற்கு மேலும் அமைந்தன. சராசரியாக ஒரு வருடத்தில் எட்டுப் படங்கள் வீதம் நடித்தார். 300 படங் களுக்கும் மேலாகப் படங்களில் நடித்த அவரின் சாதனைகள் சிலவற்றைக் குறிப்பிடலாம். ஒரே வருடத்தில் வெளி வந்துள்ள இவ்விரண்டு படங்கள் வெள்ளி விழாக்கண்டன. அந்த வகையில் வெளிவந்த படங்களும் ஆண்டும்.

1959 - வீரபாண்டிய கட்டப் பொம்மன், பாகப் பிரிவினை, 1961- பாவமன்னிப்பு, பாசமலர், 1972 -, பட்டிக்காடா பட்டணமா, வசந்தமாளிகை, 1983 நீதிபதி, சந்திப்பு ஆகிய படங்கள் இவை தவிர வெளிவந்து 100 நாள்களுக்கு மேல் திரையிடப்பட்ட படங்கள் நிறையவே உள்ளன.

இலங்கையிலே - கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் வெற்றி நடை போட்ட தீபம். அந்தமான் காதலி, பராசக்தி, வசந்தமாளிகை, உத்தமன், பைலட் பிறேம்நாத் போன்ற படங்கள் வெள்ளிவிழாப் படங்களாகக் கொண்டா டப் பட்டவற்றுள் சிலவாகும்.

அவை வசூலிலும் உச்ச நிலையி லேயே காண்பபட்டன.

திரை உலகத்தின் சரித்திரத்தில் உயர்ந்த நாயகனாகப் போற்றப்படும் வகையில் நடிப்பினாலும் நல்ல கதைத் தேர்வினாலும் முன்னிலையில் திகழ் தார். அவரது நடிப்பின் மகிமையை முந்தும்வகையில் எவரும் இதுவரை தோன்றவில்லை என்பது உண்மை. புராணப்படங்களிலும் வரலாற்றுப் படங்களிலும் தோன்றி நடித்த கம்பீரமும் குரலினிமையும் தமிழ்ப்பட உலகில் என்றும் நிலைத்திருக்கும் .

பழைய படங்கள் என்றால் அதில் சிவாஜி கணேசனின் படங்களுக்குச் சிறப்பான இரசிகர்கள் இருக்கவே செய்கின்றார்கள்.

அவரது மறைவு கலையுலகுக்குப் பேரிழப்பெனினும் அவரது கலைத்துவப் பணியின் பெருமை சிவாஜி கணேசனின் நாமத்தை என்றும் உரத்தே ஒலிக்கும். ✱

# இலங்கை அகதிகள் 89 பேரையும் இந்தோனேஷியா திருப்பி அனுப்பக்கூடாது

## மலேசிய மாகாண துணைமுதல்வர் வலியுறுத்து

இந்தோனேஷியாவில் தடுத்து வைக் கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்கள் 89 பேரையும் இந்தோனேஷிய அரசு திருப்பி அனுப் பக்கூடாது என்று மலேசியாவின் பினாங்கு மாகாண துணை முதல்வர் கலா நிதி பி.ராம சாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:

நியூசிலாந்து செல்ல முற்பட்ட இலங்கையர்களின் படகு இந்தோனேஷியா எல்லைப் பாதுகாப்புப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எனவே இந்த அகதிகள் விடயத்தில் மனித நேயத்துடன் இந்தோனேஷியா செயற்படும்.

இதேவேளை இன்னமும்இலங்கை முகாம்களில் மக்கள் இருப்பதைக் கருத்தில் கொண்டு இவர்கள் திருப்பி அனுப்பக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (வ)

**வீசா தேவை**

UK Student Visiting Visa சகல ஏற்பாடுகள், Financial Sponsorship மற்றும் Singapore Work Permit என்பன.

தொடர்பு: 0725225808

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1311 நீலம்

மகரம் 05 38 39 46 19-07-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 5,400,700/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 258,861 | 20/- | 5,177,220/- |
| 2 இலக்கங்கள் | 23,775 | 40/- | 951,000/- |
| 1 இல. + லக்கினம் | 23,387 | 60/- | 1,403,220/- |
| 2 இல. + லக்கினம் | 2,214 | 200/- | 442,800/- |
| 3 இலக்கங்கள் | 629 | 1000/- | 629,000/- |
| 3 இல. + லக்கினம் | 58 | 10,000/- | 580,000/- |
| 4 இலக்கங்கள் | 04 | 200,000/- | 800,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 5,400,700/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 9,983,240/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 697 | | 747,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 309,625 | | 10,730,240/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,978,875/-

இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

13 35 36 40 ஜக்பொட் பரிசு ரூபா. 200,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 694 | 500/- | 347,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 200,000/- | 200,000/- |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 697 | | 747,000/- |

இந்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 200,000/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகாரத்தின் இரகசியத்தன்மை பிரச்சினைகளின் தோற்றத்துக்குக் காரணம்

## முன்னாள் பிரதம நீதியரசர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 21

இலங்கையில் நிறைவேற்று அதிகாரத்தின் வெளிப்படைத் தன்மையற்ற காரணங்களே நாட்டில் பிரச்சினைகளுக்கு வித்திடுகின்றன. இவ்வாறு முன்னாள் பிரதமநீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

''நிறைவேற்று அதிகாரம் மக்கள் இறைமைக்கு சவாலாக உள்ளதா'' என்ற தலைப்பில் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

நீதித்தன்மை பொதுமக்களுக்குக் கிடைக்கவேண்டியது ஒன்றாகும். எனினும் இலங்கையின் நிறைவேற்று அதிகார நடவடிக்கைகளில் இரகசியத் தன்மைகள் உள்ளன.

நிறைவேற்று அதிகாரத்தின் வெளிப்படையற்ற தன்மை காரணமாகவே ஹெட்ஜிங் உடன்படிக்கையின்கீழ் பல மில்லியன் டொலர்களை அரசு நட்டஈடாகத் செலுத்த வேண்டியேற்பட்டுள்ளது.

தரங்குறைந்த பெற்றோல் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதனால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது - என்றார். (ச)

# மக்களுக்கு நிவாரணம் வழங்க போதிய நிதி உதவிகள் இல்லை

## உலக உணவுத் திட்டம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 21

உலக உணவுத் திட்டம் நிதித் தட்டுப்பாட்டை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கில் இடம்பெயர்ந்த மற்றும் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்கு உணவு நிவாரணங்களை வழங்குவதற்கு போதியளவு நிதி உதவிகள் கிடைக்கவில்லை என உலக உணவுத் திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த ஆண்டுக்காக திட்டமிட்ட உதவிகளை முழுமைப்படுத்துவதற்கு இன்னமும் 40 வீதமான நிதி ஒதுக்கீடுகள் அவசியம் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆண்டின் இறுதி வரையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு நிவாரணங்களை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததாக உலக உணவுத் திட்டத்தின் இலங்கைப் பணிப்பாளர் அன்டன் கான் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் மீள்குடியேற்றப்பட்டவர்களுக்குத் தேவையான 60 வீதமான உணவு நிவாரணங்கள் கைவசம் இருப்பதாகவும், எஞ்சிய 40 வீதமான நிவாரணங்களை வழங்குவதில் நெருக்கடி நிலைமை உருவாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# மரண தண்டனைக் கைதி டெங்கு நோயால் மரணம்

கொழும்பு, ஜூலை 21

மரணதண்டனை விதிக்கப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதியொருவர் டெங்குநோயால் உயிரிழந்துள்ளார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் டெங்குநோயால் பீடிக்கப்பட்ட இரண்டு மரணதண்டனைக் கைதிகள் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் சிகிச்சை பயனளிக்காமல் கடந்த திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார் எனச் சிறைச்சாலைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தலங்கம பிரதேசவாசியான கே.கே.பீ. சோமரத்ன என்ற (வயது-61) நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ச)



''நிறைவேற்று அதிகாரம் மக்கள் இறைமைக்கு சவாலாக உள்ளதா?'' என்ற தொனிப்பொருளில் நேற்றுமுன்தினம் கொழும்பு பொதுநூலகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவின் மனைவி அனோமோ பொன்சேகா ஆகியோர் கலந்துகொண்டனர். (ச)

# நாட்டில் இடம்பெறும் ஊழல் மோசடிகளை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும்

## சரத் பொன்சேகா கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 21

நாட்டில் இடம்பெற்றுவரும் ஊழல் மோசடிகள் குறித்து மக்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். இராணுவத் தலைமையகத்தின் காணிகளை விற்பனை செய்து ஆயிரம் கோடி ரூபா தரகுப் பணத்தைப் பெற்றுக் கொண்டது யார் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

வெலிக்கடைச் சிறைச்சாலை மீன் சந்தை விற்பனை செய்யப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறு அரசு சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் மேலும் 4000 கோடி ரூபா தரகுப் பணம் பெற்றுக்கொள்ளப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார். இந்தத் தரகுப் பணம் யாருக்குச் சேரும் என்பதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டுமெனஅவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# இலங்கையில் நிரந்தர சமாதானமே நல்லிணக்கம் ஏற்பட வழிவகுக்கும்

## ஐ.நா. அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 21

போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வட பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கையை அரசு கட்டியெழுப்புவதுடன், அங்கு நிரந்தர சமாதானத்தையும் ஏற்படுத்தவேண்டும். அப்போதுதான் இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்று ஐ.நா.சபை அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஐ.நா. சபையின் கொழும்புக்கான வதிவிடப் பிரதிநிதியாக புதிதாக கடமையேற்ற சுபனாய் நெண்டி வட பகுதிக்கு நேற்று முன்தினம் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார்.

இதனையடுத்தே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார். போரினால் பெரும் அழிவை சந்தித்த வடபகுதி மக்கள் மீண்டும் தமது வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதில் பெரும் சவால்களை எதிர்நோக்கிவருகின்றனர் என்று ஐ.நா. சபையின் கொழும்புக்கான வதிவிடப் பிரதிநிதி மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# குற்றச் செயல்கள் தொடர்பில் தகவல் வழங்கக் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 21

நாட்டில் உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய குற்றச் செயல்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது. இணையத்தள குற்றச் செயல்கள் தொடர்பிலான தகவல்களை வழங்குமாறும் குற்ற விசாரணைத் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

குற்றச் செயல்கள் தொடர்பிலான தகவல்களை பொதுமக்கள் வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இணையத்தள குற்றச்செயல்கள் தொடர்பில் செய்யப்பட்டுள்ள 100 முறைப்பாடுகள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இணையக் குற்றச் செயல்களில் ஈடுபடுவோரைக் கண்டுபிடிக்கும் நோக்கில் விசேட இணையக் குற்றச்செயல் கண்காணிப்புப் பிரிவொன்று உருவாக்கப்பட்டுள்ளதாகக் குற்ற விசாரணைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தேசிய பாதுகாப்பு, பொருளாதாரம், பொதுமக்களின் நலன் போன்றவற்றுக்கு குந்தகம் ஏற்படும் வகையில் சிலர் இணையத்தைப் பயன்படுத்தி வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இணைய வலையமைப்புக்களில் சட்டவிரோதமாக பிரவேசித்தல், தகவல்களைப் பிழையாக வெளியிடுதல், பழையான செய்திகளை வெளியிடுதல், உறுதிப்படுத்தப்படாத போலித் தகவல்களை வெளியிடுதல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பு

கொழும்பு, ஜூன் 21

வீதி விபத்துக்கள் அதிகரித்துச் செல்வதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் எம்.கே. இலங்கக்கோன் போக்குவரத்து பொலிஸ் தலைமையகத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நாட்டின் பிரதான வீதிகளில் போக்குவரத்துப் பொலிஸாரின் நடமாடும் சேவையை 24 மணித்தியாலங்களும் முன்னெடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து மாத்தறை, கண்டி, குருநாகல், புத்தளம், இரத்தினபுரி, உள்ளிட்ட பிரதான வீதிகளில் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படும் என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த வீதிகளில் அதிவேகமாக வாகனம் ஓட்டுதல், மது போதையில் வாகனம் செலுத்துதல், விபத்தை ஏற்படுத்தும் வகையில் பயணித்தல், போக்குவரத்து விதிகளை மீறுதல் என்பவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ச)

# வங்கியில் தங்க நகைகள் பட்டப்பகலில் கொள்ளை

## பலப்பிட்டியவில் ஆயுததாரிகள் துணிகரம்

கொழும்பு, ஜூலை 21

பலப்பிட்டியவில் அரச வங்கிக்குள் புகுந்த இனந்தெரியாத இருவர் அங்கு பெட்டகங்களில் வைக்கப்பட்டிருந்த அடகுநகைகளைக் கொள்ளையடித்துக்கொண்டு தப்பிச்சென்றுள்ள சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

கொஸ்கொட பிரதேசத்தில் அமைந்துள்ள வங்கிக்குள் புகுந்த ஆயுததாரிகள் இருவர், வங்கியின் பாதுகாப்பு ஊழியர்களைத் தாக்கி, வான்நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்துவிட்டு, வங்கியின் பெட்டகங்களில் இருந்த 23 லட்சம் பெறுமதியான தங்க ஆபரணங்களைக் கொள்ளையிட்டுக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் சென்ற இந்த ஆயுததாரிகள் தம்மிடம் இருந்த ஆயுதங்களால் வங்கிப் பாதுகாவலர்களைத் தாக்கி அவர்களிடம் இருந்த துப்பாக்கியைப் பறித்துக்கொண்டு வங்கிக்குள் புகுந்துள்ளனர். அப்போது வங்கி ஊழியர்கள் நாளாந்தக் கடமைகளுக்காக வங்கியில் உள்ள பெட்டகங்களைத் திறந்து வைத்திருந்துள்ளனர். கொள்ளையர்கள் திறந்து வைக்கப்பட்டிருந்த பெட்டகங்களில் இருந்த தங்க [illegible] றுள்ளனர். வங்கி திற[illegible] தெரிந்தது என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ச)

# மிகப்பெரிய ஒட்டுண்ணி இலங்கையரின் உடலில்

இலங்கையில் டெங்கு மற்றும் மர்மமான வைரஸ் நோய்கள் பரவிவரும் நிலையில், மருத்துவ ஆராய்ச்சி நிலையம் மனிதனின் உடம்பில் வாழும் மிகப்பெரிய ஒட்டுண்ணியொன்றை இலங்கையரில் கண்டுபிடித்துள்ளது.

'பலன்ரிடியம் கொலி' எனப்படும் இந்த ஒட்டுண்ணியானது முன்னொருபோதும் இலங்கையரில் கண்டறியப்படவில்லையென மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் சஹரிக சமரசிங்க தெரிவித்துள்ளார். இந்த ஒட்டுண்ணி பன்றிகளின் பெருங்குடலிலேயே வாழ்கின்றது. இது உலகின் மிகப்பெரிய ''புறட்டோஸோ'' ஒட்டுண்ணியாகும். இந்த ஒட்டுண்ணி மாசடைந்த நீர்வழியாக மனித உடலில் நுழைகிறது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஒட்டுண்ணி தொற்றுக்குள்ளாகியவர்க்கு தோல்நோய் மற்றும் வயிற்றுப்போக்கு போன்றன காணப்படுகின்றன எனவும் சஹரிக சமரசிங்க குறிப்பிட்டார். இந்த ஒட்டுண்ணி மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளராஷ துஷாரா தந்திரகே என்பவரால் அடையாளம் காணப்பட்டது. இதேவேளை, மருத்துவ ஆராய்ச்சி நிலையம் இவரின் உடம்பில் ஒருவகையான நாடாப்புழுவையும் கண்டுபிடித்துள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரியில் குடிதண்ணீர் வழங்கலுக்கான பெரிய நீர்த்தாங்கியும் அலுவலகமும் அமையும்

பூநகரி, ஜூலை 21

பூநகரி, மட்டுவில் நாடு கிழக்குப் பிரதேசத்தில் குடிதண்ணீர் வழங்கலுக்கான பெரிய நீர்த்தாங்கியும் - அலுவலகமும் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான காணி இனங்காணப்பட்டதுடன், தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் யாழ்.- கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகத் திட்டப் பிரிவுக்கு இதனை வழங்குவதற்கு பூநகரி உதவி அரச அதிபர் கே.எஸ்.வசந்தகுமார் முன்வந்துள்ளார்.

இந்தப் பிரதேசம் நீண்டகாலமாகக் குடிதண்ணீர்ப் பிரச்சினையை எதிர்கொண்டு வருகின்றது. இதனால் இரணைமடுக் குளத்து நீரினால் பூநகரி பிரதேச மக்களும் முழுமையாக நன்மை அடையும் நோக்கில் பெரிய நீர்த்தாங்கியொன்றை அமைக்க 15 பரப்புக் காணி வழங்கப்படவுள்ளது.

பூநகரிப் பிரதேசத்தில் பிரதேச செயலகம், பிரதேச சபை, தபாலகம், கமநலசேவைகள் நிலையம் அமையும் பிரதேசத்திலேயே யாழ். - கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகப் பிரிவுக்கும் பெரிய நீர்த்தாங்கியும் - அலுவலகமும் அமைக்கக் காணியை வழங்குமாறு வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் தி. இராசநாயகம், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் ஆகியோரின் கோரிக்கையை அடுத்து காணி வழங்கப்படவுள்ளது.

இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் பூநகரி உதவி அரச அதிபர் கே.எஸ். வசந்தகுமார் மேற்கொண்டுள்ளார்.

(க-302)

# வாகன இலக்கத் தகடுகள்

கிளிநொச்சி, ஜூலை 21


கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் மோட்டார் போக்குவரத்துக் கிளையில் விண்ணப்பித்தவர்களுக்கான இலக்கத் தகடுகளின் ஒரு தொகுதி தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் கிளிநொச்சி அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இவற்றின் உரிமையாளர்கள் அலுவலக நேரத்தில் வாகனப் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி மற்றும் அதன் புகைப்படப் பிரதி, தேசிய அடையாள அட்டை, பழைய இலக்கத் தகடுகள் (பழைய பதிவேடுகளுக்கு மாத்திரம்) ஆகியவற்றைச் சமர்ப்பித்து இவற்றைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அவரது அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகனங்களின் விவரங்கள் வருமாறு:-

US - 1300, GM - 1300, GJ -7973, GY - 9759, GP - 6586, JU-7269, HR - 8139, TV - 4280, TH - 4832, TA - 1170, HL - 1781, MR - 7399, ML - 7978, HH - 3547, JX -1558, MB - 8304, TP - 3401, MN - 6609, MB - 8053, VU -4923, VU - 4899, VU - 4908, VU - 4903, VU - 4902, VU -4924, VU - 4901, VU - 4921, VU - 4917, VU - 4922, VU -4914, VU - 4911, VU - 4912, VU - 4916, VU - 4904, VU -4905, VU - 4909, VU - 4907, JK - 9448,VU - 4919, VU - 4918, HT - 5437, VU - 4915, VU - 4913, VU - 4906, VU -4910, VU - 4920, LD - 6595, GR - 9757, JK - 5708, QB - 6041, LA - 8751, LI - 5353, LB - 7054, LB - 0619, QF - 4527, GT - 2287, JP - 5830, GS - 4962, HW - 0145, GC -6746, QB - 2274, JO - 3561, HF - 2181, QQ - 5362, HJ -2067, HU - 5065, LE - 7453, GD - 9484, HZ - 3021, QB -7166, GT - 2363, GV - 9768, JV - 8883, HG - 7094, JA - 9899, LD - 2875, JB - 2151, HF - 7440, HG - 2265, JN - 5723.

# தேசிய மட்டப் பேச்சுப் போட்டியில் திருவையாறு மாணவிக்கு முதலிடம்



சாதனை நாயகி நகுலகுமார் அபிராமி, அதிபர், ஆசிரியர்களால் மலர் மாலை அணிவித்து அழைத்து வரப்படுகிறார்.

கிளிநொச்சி, ஜூலை 21

அகில இலங்கை தமிழ்மொழிக் கலைத்திறன் போட்டியில் தேசிய மட்டத்தில் நடைபெற்ற இரண்டாம் பிரிவுக்கான பேச்சுப் போட்டியில் கிளிநொச்சி திருவையாறு மகாவித்தியாலய மாணவி நகுலகுமார் அபிராமி முதலாம் இடம்பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

போட்டியில் வெற்றிபெற்று ஊர்திரும்பிய மாணவியை அதிபர் தலைமையிலான பாடசாலைச் சமூகத்தினர் மங்களவாத்திய இசையுடன் மாணவியின் வீட்டில் இருந்து மலர்மாலை அணிவித்துப் பாடசாலை மாணவர்களதும், கிராமத்தவர்களதும் பலத்த கரகோசத்துடன் அழைத்து வந்தனர். பாடசாலையில் வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் க.மதுரநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என பலதரப்பினரும் மாணவியின் சாதனையைப் பாராட்டினர். அவரது சாதனையால் திருவையாறு கிராமமும், பாடசாலையும் பெருமைகொள்வதோடு கிளிநொச்சி மாவட்டமும் பெருமை கொள்வதாகவும் தெரிவித்தனர். இந்த நிகழ்வால் திருவையாறு கிராமம் விழாக்கோலம் பூண்டிருந்தது.

(க-405)

# வாக்காளர் அட்டைகள் பெறலாம்

கிளிநொச்சி, ஜூலை 21

எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களில் வாக்களிப்பதற்கான 'வாக்காளர் அட்டைகள் இதுவரை கிடைக்கப் பெறாதவர்கள் இவற்றை அண்மையிலுள்ள தபாலகங்களில் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்திப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரும், அரச அதிபருமான திருமதி றூபாவதி கேதீஸ்வரன் இவ்வாறு அறிவித்துள்ளார்.

(க)

# பெரிய பாலத்தின் பணிகள் விரைவில் பூர்த்தியாகும்

கிளிநொச்சி, ஜூலை 21

கிளிநொச்சி திருவையாற்றுக்குச் செல்லும் பிரதான வீதியிலுள்ள பெரிய பாலத்தின் புனரமைப்புப் பணிகள் விரைவில் முழுமைபெறுமெனத் தெரிய வந்துள்ளது.

இந்தப் பாலம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் இதனூடாகப் பயணிக்கும் மக்கள் பெரும் ஆபத்தையும், அச்சத்தையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது இந்த இரும்புப் பாலத்தைப் புனரமைப்பதற்கான மீதி இரும்புப்பால இணைப்புக்கள் கிடைத்துள்ளதாகக் கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் தெரிவித்துள்ளார். இன்னும் இருவாரங்களில் இந்தப் பாலவேலைகள் அனைத்தும் பூர்த்தியாகுமெனத் தெரிய வருகின்றது.

இதேவேளை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பிராந்திய ஆணையாளரும், வடக்கு மாகாண பொது நிர்வாக பிரதிப் பிரதம செயலாளருமான தி. இராசநாயகம் மேற்படி இடத்தைப் பார்வையிட்டதுடன் பாலத்தின் புனரமைப்புப் பணி குறித்து வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் இந்தப் பாலத்தின் அவல நிலை குறித்து உதயன் பத்திரிகையில் செய்தி வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-302)

## நல்ல பராமரிப்பு...



மழலைப் பட்டாளம்: முறிகண்டி பரி. பவுல் பகல் சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகளின்போது சிறுவர்கள் நிகழ்வு ஒன்றில் ஈடுபடுகின்றனர். (421)

# மந்தகதியில் இயங்கும் கிராம அமைப்புக்கள்

## பயன்பெறாத நிலையில் முல்லை. மக்கள்

முல்லைத்தீவு, ஜூலை 21

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கிராம அமைப்புக்கள் மந்த கதியில் இயங்கி வருவதால் மக்களுக்கான பயன்பாடுகள் கிடைக்கப் பெறுவதில் தாமதங்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள மக்களின் சகல செயற்பாடுகளும் கிராம அமைப்புக்கள் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனால் இவற்றின் செயற்பாடுகள் துரித கதியில் அமைய வேண்டியது அவசியமாகும்.

மேலும் கிராம அமைப்புக்களில் தொடர்ந்தும் குறிப்பிட்ட ஒரு சிலரே அங்கம் வகித்து வருகின்றனர்.

இவர்கள் தம்மைச் சார்ந்தவர்களுக்கு நன்மைகளைப் பெற்றுக் கொடுப்பதை நேரடியாகக் காணமுடிவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்தக் கிராம அமைப்புக்கள் யாவற்றையும் கலைத்துவிட்டு நேரகாலம் பாராது மக்களுக்காக உழைக்கக் கூடியவர்களைத் தெரிவு செய்ய வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-500)

# தமிழ் ஆக்கத்திறன் போட்டி விருதுகள்

## வள்ளிபுனம் பாடசாலைக்கு

அளம்பில், ஜூலை 21

கனடா வன்னித் தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற தமிழ்மொழி ஆக்கத்திறன் போட்டியில் முல்லைத்தீவு, வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்துக்கு இரண்டு விருதுகள் கிடைத்துள்ளதாக வித்தியாலய அதிபர் செல்வி ஆர்.பேரின்பராணி அறிவித்துள்ளார்.

ஆரம்பப் பிரிவைச் சேர்ந்த தரம் 7 இல் பயிலும் கு. விதுசன் மற்றும் மேற்பிரிவுப் போட்டியில் கலந்து கொண்ட அ.கௌசலாதேவி ஆகிய மாணவர்களே சிறுகதைப் போட்டியில் பரிசைப் பெற்றவர்கள் ஆவர்.

கடந்த செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் முல்லைத்தீவுக் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மா.இராஜகுமார் தலைமையில் நடைபெற்ற தமிழ்மொழி ஆக்கத்திறன் மேம்பாட்டு விழாவில் இவர்களுக்குரிய பரிசுகள் வழங்கப்பட்டன.

இவர்களுடன் சேர்ந்து ஏனைய பாடசாலை மாணவர்கள் 55 பேருக்கும் இந்த விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.பத்திநாதன் மற்றும் சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் வே.சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

பரிசு பெற்ற மாணவர்களுடன் அவர்களது பெற்றோரும் அழைக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் கலை நிகழ்வுகள், பரிசு வழங்குதல், மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு என்பன இடம்பெற்றதாகவும் விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(க-555)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராணுவத்தின் 'பிடிக்குள்' மயானம்**

# இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கு அலைந்து திரியும் ஒட்டுசுட்டான் மக்கள்

முல்லைத்தீவு, ஜுலை 21

ஒட்டுசுட்டான் மக்கள் நீண்ட காலமாகப் பயன்படுத்தி வந்த வெடுக்குநாறி மயானம் இராணுவத்தினரால் வேலிபோட்டு அவர்களின் பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டதால் மயான வசதியின்றி இந்தப் பிரதேச மக்கள் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இங்குள்ள மக்கள் இறந்தவர்களைப் புதைக்கவோ அல்லது எரியூட்டவோ ஏழு கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள மயானத்தையே தற்போது பயன்படுத்தி வருகின்றனர்.

மேலும் இறந்தவர்களின் உடல்களை மயானத்துக்கு எடுத்துச் செல்வதற்கு எவரும் முன்வராததால் அதிக பணம் கொடுத்து வாகனங்களில் கொண்டு செல்ல வேண்டிய நிலையிலேயே இங்குள்ள மக்கள் உள்ளனர்.

மேலும் முன்பிருந்த மயானத்தில் உடல்களை அடக்கம் செய்யும் போது ஊரிலுள்ள அதிகமான மக்கள் மயானத்துக்கு வருகை தந்து வேண்டிய ஒத்தாசைகளையும் வழங்குவர்.

ஆனால் தற்போது ஒரு சிலர் மட்டுமே மயானம் வரை வருகின்றனர். மேலும் இந்தக் கிராமத்தில் மயானம் அமைப்பதற்குப் பொருத்தமான காணிகளும் காணப்படவில்லை.

இது தொடர்பாகப் பலருக்குத் தெரியப்படுத்திய போதிலும் பயனெதுவும் கிடைக்கவில்லை. இந்த நிலை தொடர்ந்தால் அவரவர் தமது காணிகளிலேயே இறந்தவர்களை அடக்கம் செய்ய வேண்டிய நிலை வருமோவெனக் கிராம மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

ஆகவே உரிய உயர் அதிகாரிகள் இனியும் மெத்தனமாக இருக்காது தமது மயானத்தை மீட்டுத்தர வேண்டுமென்பதே இந்த மக்களின் கோரிக்கையாகவுள்ளது. (க-500)

# தமிழ்மொழி ஆக்கத்திறன் விழா

முல்லைத்தீவு, ஜுலை 21

கனடா - வன்னி தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையுடனான தமிழ் மொழி ஆக்கத்திறன் விழா நேற்று முன்தினம் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு அரச அதிபர் அ.பத்திநாதன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு வலய ஓய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் வே.சுப்பிரமணியம், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆர்.ராஜேஸ்வரன், முல்லைத்தீவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) மா.ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் போது கனடா-வன்னி தமிழ்ச் சங்கத்தின் உதவியுடன் முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு நிதியுதவியும் வழங்கப்பட்டுள்ளன. இதன் போது 90 மாணவர்களுக்குத் தலா ஐயாயிரம் ரூபா வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது. (க-14)

**வணிகத்துக்கு உயர்வு...**



மாலையும் கழுத்துமாக: கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வணிக நாள் நிகழ்வின்போது பாடசாலை அதிபர் சு.கணபதிப்பிள்ளை, பிரதி அதிபர் திருமதி சி.பரதன், சிறப்புரையாற்ற வருகை தந்த பல்கலைக்கழக மாணவன் தி.சஞ்சீபன், உப - அதிபர் க. அருளானந்தகுமார் ஆகியோர் மேடையில் அமர்ந்திருக்கின்றனர்.

# வணிக விழாப் போட்டிகள்

கிளிநொச்சி, ஜுலை 21

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையேயான வணிக விழாப் போட்டி நிகழ்வுக்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இதற்காகப் பாடசாலை மட்டத்தில் போட்டிகள் நடத்தப்பட்டு மாவட்ட மட்டப் போட்டிக்குரியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் போட்டி வணிகத்துறை சார் பாடங்களைக் கற்கும் மாணவர்களிடையே மூன்று பிரிவுகளாக நடைபெறுகின்றது.

தரம் 10 மாணவர்கள் முதலாவது பிரிவாகவும், தரம் 11 மாணவர்கள் இரண்டாவது பிரிவாகவும், தரம் 12, 13 மாணவர்கள் மூன்றாவது பிரிவாகவும் பிரிக்கப்பட்டு பேச்சு, கட்டுரை, குறுவினாவிடை ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன. (க-405)

# மன்னாரில் பலத்த காற்று கடற்றொழிலாளர் பாதிப்பு



மன்னார், ஜுலை 21

மன்னாரில் தொடர்ந்து வீசி வரும் பலத்த காற்றின் காரணமாகக் கடற்றொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பலத்த காற்றும் கடுமையான வெயிலும் சேர்ந்து இவர்களைத் தொழிலுக்குச் செல்ல முடியாத நிலையைத் தோற்றுவித்துள்ளன. இவற்றையும் மீறி இவர்கள் தொழிலுக்குச் சென்றால் பிடிபடும் மீனின் அளவும் குறைவாகவே காணப்படுகின்றது. எரிபொருளுக்கு அதிக பணத்தைச் செலவிடும் இவர்கள் இதனால் அதிக நட்டத்தை எதிர்கொள்கின்றனர். அத்துடன் தற்போது கடல் வற்றிய நிலையிலுள்ளதாகவும் கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வருமானமின்றியிருக்கும் இவர்கள் பெரும் நிதி நெருக்கடிக்குள் சிக்கியிருப்பதாகவும் கூறப்படுகின்றது. (க-601)

# மல்லாவியில் எரிபொருள் நிலையம்





மல்லாவி, ஜுலை 21

மல்லாவி நகரின் மத்தியில் கடந்த 16 ஆம் திகதி எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

துணுக்காய்ப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதே இடத்தில் பல ஆண்டுகாலம் இயங்கிவந்த இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் யுத்த சூழ்நிலையால் 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் செயலிழந்து போனது. தற்போது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஆதரவுடன் துணுக்காய்ப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அயராத முயற்சியின் பலனாக மீண்டும் அதே இடத்தில் புதுப் பொலிவுடன் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வானது மல்லாவி வாழ் மக்கள் மனதில் மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளது. விவசாயக் கிராமங்கள் அதிகம் அடங்கிய மல்லாவிப் பிரதேசத்தில் உழவு இயந்திரம் மற்றும் இதர விவசாயத் தேவைகளுக்கும் வாகனங்களுக்கும் எரிபொருள் நிரப்புவதற்கு பல கிலோ மீற்றர் தூரம் செல்லும் சிரமங்கள் இந்த எரிபொருள் நிலையம் அமைக்கப்பட்டதால் குறையும்.

இந்த நிகழ்வில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் வருகை தந்து எரிபொருள் நிரப்பு நிலையத்தைத் திறந்து வைத்தார். பெற்றோலிய வளத்துறை அமைச்சர் கௌரவ சுசில் பிறேம் ஜெயந்த வருகை தரவிருந்தபோதிலும் தவிர்க்க முடியாத காரணத்தால் வருகை தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரிகள், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் வடமாகாணம், கூட்டுறவு அபிவிருத்தி முல்லைத்தீவு உதவி ஆணையாளர், துணுக்காய்ப் பிரதேச செயலாளர், பிரதேச சபைச் செயலாளர், கமநல சேவைப் பெரும்பாக உத்தியோகத்தர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர், நெறியாளர்கள், பணியாளர்கள் மற்றும் இதர சங்கங்களின் தலைவர், நெறியாளர், பணியாளர்கள், வர்த்தகர்கள், பிரதேசப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள், பொதுமக்கள் எனப் பெருந்திரளானவர்கள் கலந்து சிறப்பித்தனர். (க)

# உயர்தர மாணவருக்கு கற்றல் கையேடுகள்

கிளிநொச்சி, ஜுலை 21

ஜிரிஇசற் நிறுவனத்தின் சமூக இசைவாக்கத்துக்கான கல்வி திட்டத்தின்கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள க.பொ.த. உயர்தர வகுப்புக்களையுடைய பாடசாலைகளிலிருந்து இந்தமுறை க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்கள் பயன்படுத்தக்கூடிய விதத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் கையேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்துக்குட்பட்ட முன்னோடிப் பாடசாலைகளான முழுங்காவில் மகாவித்தியாலயம், வேரவில் இந்து மகாவித்தியாலயம், ஜெயபுரம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்கும் ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு கையேடு வீதமும் ஏனைய பாடசாலைகளுக்குப் பாடசாலைக்கு ஒரு கையேடு வீதமும் வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் கணித, விஞ்ஞான, வர்த்தக, கலைப் பிரிவு மாணவர்களுக்கு இவ்வாறான கற்றல் கையேடுகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-405)

# பூநகரிப் பாலத்தில் மோதியது வாகனம்

பூநகரி, ஜுலை 21

பூநகரியில் புதிதாகப் புனரமைக்கப்பட்ட பாலத்தில் டிமோபட்டா ரக வாகனம் நேற்று முன்தினம் காலை மோதுண்டதில் வாகனத்தில் வந்தோர் மயிரிழையில் உயிர்தப்பினர்.


மிக வேகமாக யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்து இரும்புப் பாலத்தில் உள்ள இடதுபுறக் கேடருக்குள் புகுந்துள்ளது.

பூநகரிச் சந்தைக்குத் தக்காளிப் பழங்களை ஏற்றிக் கொண்டு வந்த வாகனமே இவ்வாறு பலத்த சேதமடைந்துள்ளது.

மேற்படி புதிய பாலம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்களும் மனிதர்களே
## பிச்சைக்காரர் (Beggar)



சமூகத்தினரால் ஒதுக்கப்பட்டு புறந்தள்ளப்படும் பிரிவினராக பிச்சைக்காரர்கள் கணிக்கப்படுகின்றனர். Oxford ஆங்கில அகராதி Beggar என்பதற்கு 'தெருக்களில் பணம், உணவு முதலியவற்றைப் பிறரிடம் இருந்து பெற்று வாழ்க்கை நடத்துபவர் என வரைவிலக்கணப்படுத்துகின்றது. சிறுவர், பெண்கள், முதியோர், நோயாளிகள் இன்றைய சமூகத்தில் பிச்சைக்காரர்களாக வலம் வருகின்றனர்.

பிச்சை எடுத்தாலும் பிறரிடம் இருந்து வாழ்க்கை நடத்துதல் என்பது கௌரவக் குறைச்சலாகக் கருதப்படுவதற்கு ஏற்ப பிச்சை எடுக்கத் தூண்டிய காரணிகளில் முக்கியமானவையாக வறுமை,போதிய வருமானமின்மை, அதிகரித்த பிள்ளைகள், பெற்றோரின் இயலாத தன்மை, பெற்றோர் இல்லாதிருத்தல், உழைப்பதற்கு சோம்பேறித்தனம், உறவினரால் கைவிடப்பட்டிருத்தல், தொழில்வாய்பு இல்லாதிருத்தல், உழைப்பதற்குரிய உடல் நலம் இல்லாதிருத்தல், அத்தியாவசியமற்ற தேவைகள், மதுபாவனை, போதைப்பொருள் பாவனை போன்றவை காணப்படுகின்றன.

தமது அத்தியாவசியமற்ற தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு உரிய வழிமுறையாகப் பிச்சை எடுத்தலைப் பயன்படுத்துவதனால் உண்மையான பிச்சைக்காரர்களுக்குரிய தேவைகள் உதவிகள் நிறைவேற்றப்படாத தன்மைகள் உள்ளன. குறிப்பாக,
*தகாத வார்த்தைகளை உபயோகித்தல்.
*மதுவை உட்கொண்டு பிச்சை எடுத்தல்.
*உதவி செய்வோருடன் வாக்குவாதப்படுதல் போன்றவை அதிகளவில் இடம் பெறுகின்றன.

தமது உண்மையான வாழ்வாதாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகப் போராடும் இரந்து வாழ்வோருக்கு உதவிகள் கிடைக்கப் பெறுதல் வேண்டும். அரசு மற்றும் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் இதற்குரிய செயற்பாடுகளை முன்னெடுத்தல் வேண்டும்.

சமூகத்தின் விளிம்பு நிலைக்குரிய மனிதர்களாகக் கருதப்படும் இவர்களுக்குத் தேவையான, இருப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல், நோய்களுக்கான மருத்துவ வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல். இவற்றின் மூலம் இவர்களுக்கான பாதுகாப்பை, சுய கௌரவத்தைத் உறுதிப்படுத்துதல் அவசியம்.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் இவர்களின் வாழ்வை மீளக்கட்டியமைக்க முடியும்.




## பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரிப்புக்குக் காரணம்

### பொதுமக்கள்

மனித வாழ்வில் பெண்கள் முக்கியத்துவத்தை வகிக்கின்றனர். பெண்ணானவள் மக்கள் மத்தியில் ஓர் சிறந்த குடும்பத் தலைவியாகவும், சகோதரியாகவும் தாயாகவும் பணிப்பெண்ணாகவும் பணி புரிகிறாள். இதன் காரணமாக, பொறாமையின் நிமித்தம் பெண்கள் வன்முறைகளுக்கு ஆளாக நேரிடுகிறது. இதனைத் தூண்டுவது பொது மக்களே!

சமுதாயத்தின் பொதுத்தொண்டுகளில் தனது உயிரையும் துச்சமென மதித்து ஈடுபடுகிறாள். பெண்களின் உரிமைக்காகப் பல துறைகளிலும் போராடுகிறாள். இதனால் பொதுமக்களின் ஆண் வர்க்கத்தினால் பல துறைகளிலும் வன்முறைகளுக்கு ஆளாகிறாள். இதனால் சட்டத்தின் கரங்களினால் அவளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு சமுதாயம் ஏற்ற நடவடிக்கைகளை எடுத்து பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

ஜா.துவாரகா
கைதடி

### அதிகாரிகள்

பண்டைய காலத்தில் அடிமையாக வீட்டுக்குள் கிடந்த பெண் நவீன காலத்தில் ஒரு சமுதாய வாதியாக, அரசியல் வாதியாக, குடும்பத் தலைவியாக சிறந்து விளங்குகின்றாள்.

பெண்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யவும் உயர்தொழில் வாய்ப்பைப் பெறவும் குறைந்த கூலியில் தொழில் புரியவும் முன்வருவதால் தொழில் புரியுமிடங்களில் உள்ள அதிகாரிகள் கீழ்த்தரமாக நடத்துகின்றனர். இதனால் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டு சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்படுகின்றனர். இதனால் மன உளைச்சலுக்கு ஆளாகும் நிலையும் காணப்படுகிறது.

எனவே அதிகாரிகளே! தொழில் புரியவரும் பெண்களை அவர்களுக்கான நேர்மையான ஊதியத்தை வழங்கியும் அவர்களை சக ஊழியராகவும், சகோதரியாகவும் மதிக்க வேண்டும் என்பது எனது கருத்தாகும்.

வி.[illegible],
மீசாலை மேற்கு, [illegible].

## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரிப்புக்கு காரணம் பொதுமக்களா? அதிகாரிகளா?**

பொது மக்கள்? ☐ அதிகாரிகள்? ☐

பெயர்: ..............................
முகவரி: ..............................
அடையாள அட்டை இல. ..............................
..............................

உங்கள் தீர்ப்புக்களை 28.07.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

# பொன் மொழிகள்

## அழகு (Beauty)

*இயற்கை ஒரு பெண்ணுக்கு அளிக்கும் முதல் சீதனம் அழகு. அதே இயற்கை ஒரு பெண்ணிடமிருந்து முதலில் பறித்துக்கொள்ளும் சீதனமும் அதுவே.
*ஒரு மனிதனின் அழகு அவன் நாவின் இனிமையில் இருக்கிறது.

## அன்பு(Affection, Kiddness Love)

*அழகு விரைவில் மடிவது போல், அழகின் மேல் அன்பு வைப்பதும் விரைவில் மடிகிறது.
*சட்ட பூர்வமான திருமணமாக இல்லாது விட்டாலும் அன்பு புனிதமானது. சட்ட பூர்வமான திருமணமேயானாலும் அன்பு இல்லையேல் அது புனிதமற்றது.
*எங்கு அன்பு இருக்கிறதோ அங்கே வாழ்வு இருக்கிறது. வெறுப்பு அழிவுக்கு முன்னோடி.
*தன்னிச்சையாக மற்றவர்களுக்காக எழும் அன்பே அன்பு. அதிகாரத்திலிருந்து எழும் அன்பு தன்னையே நேசிக்கும் அன்பு.
*இளைஞர்கள் காதல் பணம், ஆரோக்கியம் என்று முதலில் விரும்புகிறார்கள். பின்னர் அவர்களே ஆரோக்கியம், பணம், காதல் என்று சொல்லுவார்கள்.
*எத்தனையோ கடவுள்கள், எத்தனையோ பிரிவுகள் ,வளைந்து செல்லும் பாதைகள் எத்தனையோ இருக்க துன்பமான உலகத்துக்குத் தேவை அன்பு என்ற இதயம் ஒன்றேதான்.

## அறிவு (Knowledge)

*அறிவு என்ன என்று கேட்பதை நிறுத்தாதே. நாம் அங்கு நேரில் போய்ப் பார்ப்போம்.
*அறிவு செல்வம் மாதிரி. அதிகம் பெறப்பெற அதிகம் ஏங்குகிறான்.
*தனக்கு அறிவின்மை இருப்பதை உணர்வதே அறிவு தேடுவதற்கு வழி.

சி.கிருசா, (புலோலி)

# வாழ்வு சிறக்க...

**நல்ல நட்பில்.......**

நல்ல நட்பில் வயது வித்தியாசம், திறமை வேறுபாடுகள், அறிவு வேறுபாடுகள் எதுவுமே பெரிய விடயங்கள் இல்லை. பகிர்தல், மகிழ்தல், ஒருவருக்காக மற்றவர் எதையும் இழக்கத்துணிதல் இவையே இருக்கமுடியும். ''குறை'' சொல்லும் போது கூட ''கறை'' ஏற்படுத்தும் எண்ணம் இருக்காது. ''அக்கறை'' மட்டும் தான் அங்கே இருக்கும்.

**சந்தோஷம் நிலைக்க...........**

எந்த வீட்டில் பெண்ணை அடக்கி ஓர் ஆண் ஜெயிக்கிறானோ அங்கே ஒரு மிருகம் ஜெயித்தது என்று பொருள். எங்கே ஓர் ஆணை அடக்கி ஒரு பெண் ஜெயிக்கிறாளோ அங்கே ஒரு பிடாரி ஜெயித்தது என்று பொருள்.

கணவன் மனைவியிடமும், மனைவி கணவனிடமும் தோற்றுப் போகத் தயாராக இருந்தால் அங்கே குடும்பம் ஜெயிக்கிறது. அதனால் சந்தோஷம் நிலைக்கிறது.

'' சுடர் மதி'',கொக்குவில்.

## நீங்களும் நீளமான பெயர் கொண்டவரா?

★உலகில் மிக நீளமான பெயர் உடையவர் ஒரு பெண் பெக்ஸாஸில் உள்ள 'ப்யூமவுண்ட்' எனுமிடத்தில் உள்ளார். 12.09.1984 அன்று ஜேம்ஸ்- வில்லியம்ஸ் என்ற தம்பதிக்கு பிறந்த இவருக்கு. 5.10.1984 அன்றைய பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் படி (சுருக்கமான) Rosha williams என்று பெயர் வைக்கப்பட்டது. இந்தப் பெயரை விரித்து எழுதினால் முதல் பெயரின் விரிவு 1016 எழுத்துக்களும் நடுவில் உள்ள சொல்லின் விரிவு 36 எழுத்துக்களுமாக மொத்தமாக 1052 எழுத்துக்கள் வருமாம்.

★இதேபோல் இந்தியாவிலே மிக நீளமான பெயர் உடையவர் M.S.S.R.C.V.L.N.S. சக்கரவர்த்தி. இவர் கர்னா பகாவின் மாண்டியாவில் வசிக்கிறார்.இவரது பெயரின் ஒன்பது இனிஷல்களையும் விரித்து எழுதினால் ஆங்கிலத்தில் 71 எழுத்துக்கள் வரும்.

★அதேபோல் இலங்கை, கிரிக்கெட் அரங்கு பல சாதனைகளைத் தன்வசம் வைத்துள்ளது. இதில் நீண்ட பெயர் கொண்ட கிரிக்கெட் வீரர்கள் வரிசையில் இலங்கை வீரர்களுக்கே முதலிடம் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. முன்னணி வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாசுக்கே அச்சாதனை சேரும்.அவரது முழுப்பெயர் WARNAKULASURIYA PATABENDIGE USHANTHA JOSEPH CHAMINDA VAAS இவரது பெயரை எழுத 52 எழுத்துக்கள் தேவைப்படுகின்றன. அதேவேளை, இலங்கை அணியின் மற்றொரு பந்துவீச்சாளர் வெலகெதரவின் முழுப்பெயரினை எழுத 49 எழுத்துக்கள் தேவைப்படுகின்றன. அவரது பெயர் UDA WALAWWE MAHIM BANDARALAGE CHANAKA ASANGA WELEGEDARA என்பதாகும். இவர்களது பெயர்கள் நீளமானதாக இருக்க அமெரிக்க இசையமைப்பாளர் 'வேராகி கார்மைக்கேல்' இசையமைத்துப் பாடிய ஒரு பாடலின் பெயர் இது - ''ஐயாம் எ கிராங்கி ஓல்டு யாங்க் இன் எ கிளாங்கி ஓல்டு டாங்க் ஆன் தி ஸ்டிரீட்ஸ் ஆப் யோ ஹாஹாமா வித் மை ஹானலுலு மம்மாடு இன் தோஸ் பீட்-ஓ, பீட்-ஓ பிளாட் ஆன்மை சீட் ஒஷிரோ [illegible]''

T.கஜேந்திரன்,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதங்களை விரைவாக ஒப்படைக்குமாறு கிழக்கு ஆயுதக் குழுக்களுக்கு அறிவித்தல்

மட்டக்களப்பு, ஜூலை 21

கிழக்கு மாகாணத்தில் செயற்படும் ஆயுதக் குழுக்கள் ஆயுதங்களை விரைவாக ஒப்படைக்க வேண்டுமென கடந்த திங்கட்கிழமை முதல் இராணுவம் கிராம மட்டத்தில் அறிவித்தல் விடுக்க ஆரம்பித்துள்ளது என அந்தப் பிரதேச இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த சில வாரங்களில் நாம் பல ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளோம். கிராம மட்டத்தில் அறிவித்தல்களை விடுக்க ஆரம்பித்துள்ளோம். சட்ட விரோதமாக ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் குறித்து தகவல்களைத் தருபவர்களுக்கு நாம் அன்பளிப்புகளையும் வழங்கவுள்ளோம் என இந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பகுதியில் பயங்கரவாதக் குழுக்கள் இல்லை. ஆனால் சில குழுக்கள் கொள்ளைகளுக்குப் பயன்படுத்துவதற்காக ஆயுதங்களை வைத்திருக்கின்றன என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மையில் மட்டக்களப்பில் இடம்பெற்ற வங்கிக் கொள்ளை இதற்கு உதாரணமாகும். பல குழுக்கள் ரி-56, ரிவோல்வர்கள் ஆகியவற்றை வைத்திருக்கின்றன. சிலவேளை அக்குழுக்களைச் சேர்ந்தோர் தமது அரசியல் நடவடிக்கைகளுக்கு ஆயுதங்களைப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் தாமாக ஆயுதங்களை ஒப்படைத்தால் தண்டிக்கப்படமாட்டார்கள். இல்லாவிட்டால் அவர்களுக்கு எதிராக இராணுவத்தினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன. (ச)



மட்டக்களப்பு ,கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் போசாக்கு உணவுப் பழக்கத்தை வலியுறுத்தி கடந்த திங்கட்கிழமை பேரணி நடைபெற்றது. இந்தப் பேரணியில் வேள்ட்விஷன் திட்ட இணைப்பாளர், சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.ஸ்ரீநாத், கோட்டக்கல்வி அதிகாரி ஸ்ரீதரன், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், பாடசாலை அதிபர்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடம்; நடவடிக்கை எடுக்க மனு கையளிப்பு

சப்ரகமுவ மாகாணத்தில் தமிழ்ப் பாடசாலைகளில் நிலவிவரும் ஆசிரியர்கள் பற்றாக்குறையை உடனடியாகத் தீர்க்குமாறுகோரி மகஜர் ஒன்றை பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள் அடங்கிய குழுவொன்று மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத்திடமும், மாகாண பிரதம செயலாளரிடமும் கையளித்துள்ளது.

மாகாணத்திலுள்ள தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் 500 இற்கும் மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவிவருவதால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளில் பெரிதும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இரத்தினபுரி மாவட்ட தமிழ்மொழிமூலப் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இதனால் அந்தப் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் பின்னடைவை எதிர்நோக்கி வருகின்றன என தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# வெண் சந்தனத்துடன் 11 பேர் கைது

கொழும்பு, ஜூலை 21

சுமார் 75 லட்சம் ரூபா பெறுமதியான 5,100 கிலோ எடையுள்ள வெண்சந்தனத்துடன் வியாபாரியொருவர் உட்பட 11 பேரை போகஹாகும்புர, குருத்தலாவப் பிரதேசத்தில் வைத்து பொலிஸார் கைதுசெய்தனர்.

வெண்சந்தனத்தின் மூலம் எண்ணெய் வடித்துவந்த சந்தேகநபர்களால் பயன்படுத்தப்பட்டு வந்த நான்கு அடுப்புகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. குருத்தலாவை போகஹாகும்புர பிரதேசத்திலுள்ள வீடொன்றில் இருந்தே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

கசாயப் பக்கற்றுகளைத் தயாரிக்கும் போர்வையில் இந்த வியாபாரம் நீண்டகாலமாக நடைபெற்று வந்துள்ளது. இதற்கென சந்தேக நபர்கள் வெளியிடங்களில் இருந்து கிலோவொன்று 1,500-1,600 ரூபாவுக்கு வெண்சந்தனக் குற்றிகளை வாங்கியுள்ளனர் என விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

# தரமற்ற பழரசம் விற்றவருக்கு அபராதம்

நுவரெலியா, ஜூலை 21

நோர்வூட் நகரில் தரமற்ற பழரசம் மற்றும் கற்கண்டு ஆகியவற்றை விற்பனை செய்த இருவருக்கு தலா 10,000 அபராதம் விதித்து ஹற்றன் மாவட்ட நீதிவான் சந்துன்வித்தான தீர்ப்பளித்தார்.

நோர்வூட் பொதுச்சுகாதார அதிகாரி ஆர்.சுப்பிரமணியம், பொதுச்சுகாதார மேற்பார்வையாளர் விஜயவீர ஆகியோர் தலைமையில் மேற்கொண்ட திடீர் சோதனையின் போதே இந்த வர்த்தகர்கள் இருவரும் இனங்காணப்பட்டு அவர்களுக்கு வழக்குத் தொடரப்பட்டது என தெரிவிக்கப்படுகின்றது.

# தைரொயிட் புற்றுநோய்

**புற்றுநோய் விழிப்புணர்வுத் தொடர் 20**

வடபகுதியில் மக்களிடையே புற்றுநோய் இப்போது வெகுவேகமாகப் பரவி வருகிறது. இந்த உயிர்க்கொல்லி நோயைக் குணமாக்குவதற்கான பல நவீன சிகிச்சை முறைகள் இப்போது அறிமுகமாகியுள்ளன. ஆனால் புற்றுநோயால் பாதிக்கப்படுவோர் பிந்திய நிலையிலேயே சிகிச்சைக்குச் செல்வதால், அதனைக் குணமாக்குவதில் வைத்தியப் பகுதியினர் பல சிரமங்களை எதிர்நோக்க நேரிடுகிறது. குடாநாட்டில் புற்றுநோய்க்கு நவீன சிகிச்சை முறைகளை அறிமுகப்படுத்தும் திட்டங்களுக்கு வேண்டிய இருநூறு (200) மில்லியன் ரூபாவைத் திரட்டும் இலக்குடன் காலி, தேவேந்திர முனையிலிருந்து பருத்தித்துறை வரை (TRAIL) அடிச்சுவடு பாதை நடை பயணம்" ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பயணித்து வருபவர்கள் இன்று புளியங்குளத்திலிருந்து மாங்குளம் வரை பயணிப்பர். அந்தக் காலப்பகுதியில் மக்களிடையே புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை உண்டாக்கும் பெருநோக்குடன் உதயனில் இக்கட்டுரைத் தொடர் வெளியிடப்படுகிறது.

(நேற்றைய தொடர்ச்சி...)

**தைரொயிட் புற்றுநோயின் அறிகுறிகள்**

**கழுத்தில் ஏற்படும் கழலைகள் (படம்:1)**

இவ்வாறாக கழுத்தின் நடுப்பகுதியில் முற்புறத்தே ஏற்படும் கழலைகள் குறிப்பாக விரைவாக வளர்ச்சி அடையும் ஆயின் அல்லது இறுக்கமாக அசைக்க முடியாது இருப்பின் அது பெரும்பாலும் புற்றுநோய்க் கட்டியாக இருக்கும்.




**குரலில் ஏற்படும் கரகரப்பு அல்லது குரல் மாற்றம்.**

தைரொயிட் கட்டியானது குரல் நாணுக்குச் செல்லும் நரம்பை அழுத்துவதால் அல்லது ஊடுருவுவதால் இந்த அறிகுறி ஏற்படும்.

**உணவு விழுங்குவதில் ஏற்படும் கடினத் தன்மை**

தைரொயிட் கட்டியானது உணவு செல்லும் குழாயை அழுத்துவதால் இந்தநிலை ஏற்படும்.


**சுவாசிப்பதில் கடினத்தன்மை**

தைரொயிட் கட்டியானது காற்றுச் செல்லும் குழாயை அழுத்துவதால் இவ்வாறான அறிகுறிகள் ஏற்படும்.

இவ்வாறாக தைரொயிட் சுரப்பியின் வீக்கம் அல்லது அதன் அருகே ஏற்படும் அழுத்தம் காரணமாக மட்டுமன்றி தைரொயிட் சுரப்பியில் ஏற்படும் புற்றுநோய் உடலின் வேறு பகுதிகளுக்கு பரவலடையுமிடத்து மேலும் பல அறிகுறிகள் ஏற்படும்.

**நுரையீரலுக்குப் பரவிய நிலையில்... (படம்:2)**

சளியுடன் இரத்தம் வெளியேறல், சுவாசிப்பதில் கடினத் தன்மை, மூச்சு எறிதல் என்பன ஏற்படும்.




**என்புகளுக்குப் பரவிய நிலையில்...**

என்பு நோவு ஏற்படல்,
இலகுவில் என்பு முறிவடைதல்,
முள்ளந்தண்டு என்பு நரம்புகளை அழுத்துதலால் உணர்வற்றுப்போதல் மற்றும் அவயவங்கள் வழங்காது போதல் என்பன ஏற்படும்.

**ஈரலுக்குப் பரவிய நிலையில்...**

ஈரல் தொழிற்பாடுகள் பாதிக்கப்படல், பசியின்மை ஏற்படல்

**மூளைக்குப் பரவிய நிலையில்...**

தலையிடி, வாந்தி, மாறாட்டம், பாரிசவாதம் மற்றும் வலிப்பு ஏற்படல்.

இவற்றைத் தவிர இவர்களில் தைரொக்சின் அளவு குறைவாக இருப்பின் இவர்கள் சோம்பல், உடல் பருப்பமடைதல் எனும் அறிகுறிகளையும் கொண்டிருப்பர். இவ்வாறான அறிகுறிகள் குறிப்பாகக் கழுத்துப் பகுதியில் ஏற்படும் கட்டியுடன் தொடர்பான அறிகுறிகள் ஏற்படுமிடத்து உடனே வைத்தியரை நாடவும். வைத்தியர் உங்களிடம் நோய்க் குறிப்புகள் எடுப்பதுடன் கழுத்துப் பகுதியையும் சோதனை செய்வார். மேலும் இந்தக் கட்டியின் தன்மை, பரவல் அடைந்த நிலை என்பன பற்றி அறிவதற்கும் புற்றுநோயை உறுதிப்படுத்துவதற்கும் சில விசேட பரிசோதனைகளையும் மேற்கொள்ளவார்.

**அல்ரா சவுண்ட் பரிசோதனை (படம்:3)**

தைரொயிட் சுரப்பியில் உள்ள கட்டியை அதன் தன்மை அதாவது அது திண்மக் கட்டியாக அன்றி திரவக் கட்டியாக உள்ளதா என்பதை அறிவதற்கும், அயலில் உள்ள இழையங்கள் ஊடுருவியுள்ளனவா என்பது பற்றி அறிவதற்கும் இந்தப் பரிசோதனை செய்யப்படும்.




**ஊசிமூலம் கல மாதிரிஎடுத்தல் (படம்:4)**

தைரொயிட் கட்டியில் சிறு ஊசி மூலம் கல மாதிரி எடுக்கப்பட்டு நுணுக்குக் காட்டியின் உதவியுடன் புற்று நோயானது பெரும்பாலும் உறுதிப்படுத்தப்படும்.




இந்தக் கட்டியின் தன்மை மற்றும் பரவலடைந்த நிலை என்பன பற்றிய தகவல்களைத் தெளிவாக அறிவதற்கு அயடீன் ஸ்கான் (படம்:5) CT Scan (படம்:6) மற்றும் PET Scan(படம்:7) மேற்கொள்ளப்படும்.




சத்திர சிகிச்சை மூலம் கூட சில சமயங்களில் தைரொயிட்டில் ஏற்படும் கட்டிகள் அகற்றப்பட்டு நுணுக்குக் காட்டியினூடாகப் பார்ப்பதன் ஊடாக புற்றுநோய் உறுதிப்படுகின்றது.

பெரும்பாலான தைரொயிட் புற்று நோயாளிகளில் வேகப்படுத்தும் காரணிகள் இல்லாது இருப்பதனால் இந்தப் புற்றுநோயைத் தடுப்பதற்கான வழிகள் குறைவாகவே உள்ளன. சிறுவர்களில் கழுத்துப் பகுதி எக்ஸ்-கதிர் பரிசோதனைகளை மீண்டும் மீண்டும் எடுத்தலை தவிர்த்தல் நல்லது. எனவே கழுத்துப்பகுதியில் கட்டிகள் தென்படின் உடன் வைத்தியரை நாடி பரிசோதனை செய்வதே நல்லது.







**புற்றுநோய் வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமாரன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
தொழில் விடயங்களில் அதிக கண்டிப்புடன் நடந்து கொள்வீர்கள். உறவினர்கள் வழியில் ஆதாயம் பெறலாம். வேலையாள்களால் ஏற்பட்ட தொல்லைகளிலிருந்து விடுபடுவீர்கள். எந்த வேலையையும், நாளை என பிற்போட்டு வைக்காமல், இன்றே சுறுசுறுப்பாகச் செய்து முடிப்பீர்கள். உதிரி வருமானங்களைப் பெறலாம். நட்பு வட்டம் விரிவடையும்.

**இடபம்:**
பல நாள்களாக வராமல் இருந்த உறவினர் ஒருவர், உங்களின் வீடு தேடி வரலாம். காலையில் ஒரு விடயத்தில் ஏற்பட்ட மனக்குழப்பம், மாலையில் முடிவுக்கு வரும். உங்களின் சொந்த விடயங்களை மற்றவர்களிடம் சொல்ல வேண்டாம். கல்மனம் படைத்த சிலரிடமும் கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உதிரி வருமானம் பெறலாம்.

**மிதுனம்:**
குடும்பத்தில், சில நல்ல நிகழ்ச்சிகள் நடக்கலாம். பிள்ளைகள் தொடர்பான காரியம் ஒன்றை இனிதே முடித்துக் கொள்வீர்கள். வெளியுலகத் தொடர்பு விரிவடையலாம். ஆடம்பரச் செலவுகளை குறைத்து, சிக்கனமாகச் செயற்படுவீர்கள். நண்பர் ஒருவருக்காக, மற்றொரு நண்பரிடம் பரிந்து பேசுவீர்கள். நல்ல செய்திகளைக் கேட்கலாம்.

**கடகம்:**
விரும்பிய ஒரு பொருளை வாங்க நினைத்து, பின் அந்த முடிவை மாற்றிக் கொள்வீர்கள். உறவினர்கள் சிலரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு முக்கிய விடயமாகப் பேசலாம். அயலாரின் செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். மாணவர்கள் மகிழ்ச்சி, உற்சாகமாகக் காணப்படுவர். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள்

**சிங்கம்:**
உங்களைப் பார்த்து, மற்றவர்கள் பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். அரசியல் தொடர்புடையவர்கள் அவசரப்பட்டு முடிவுகள் எடுக்க வேண்டும். உடன் பணிபுரிவோரை விமர்சிப்பதன் மூலம் அதிருப்திக்கு ஆளாகலாம். ஓய்வெடுக்க நினைத்தாலும், முடியாத அளவுக்கு ஏதாவது வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். செலவு கூடும் நாள்.

**கன்னி:**
உறவு, பகை பாராமல், நாடி வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல், உதவி செய்வீர்கள். தொழில் ரீதியான வருமானங்களைப் பெறலாம். உங்களின் நீண்டநாளைய ஆசை ஒன்றை மற்றவர்களிடம் வெளிப்படுத்துவீர்கள். புதிய முதலீடுகள் விடயங்களில் கவனம், நிதானம் அவசியம். எந்த வேலையையும் உற்சாகத்தோடு செய்வீர்கள்.

**துலாம்:**
கணவன், மனைவி இடையே பாசம் அதிகரிக்கும். உறவினர்கள் சிலரின் வீடுகளுக்குச் செல்லும் வாய்ப்பு உருவாகும். நீங்கள் கூறும் யோசனைகளை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளாமல், வாக்குவாதம் செய்யலாம். பெண்கள், பிறந்த வீட்டின் உதவிகளைப் பெற்று மகிழ்ச்சி அடைவர். கடன் மிகுதிகள் செலுத்துவீர்கள். ஆறுதலான நாள்.

**விருச்சிகம்:**
ஊக்கம், உற்சாகத்தைக் குறைக்கும் வகையிலான சம்பவங்கள் நடக்கலாம். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். சிலரிடம், முக்கிய வேலை ஒன்றை ஒப்படைத்து விட்டு, அது முடியுமோ, முடியாதோ என, குழப்பம் அடையலாம். சிவன் வழிபாட்டின் மூலம் ஆறுதல் பெறலாம். அலைச்சல், திரிச்சல் உண்டு.

**தனுசு:**
குடும்ப உறுப்பினர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். சில பிரச்சினைகளை மனம் விட்டு பேசுவதன் மூலம், நண்பர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு தீர்விற்கு வரும். அரசியல்வாதிகள், மேலிடத்தை பற்றி விமர்சிப்பதை தவிர்க்க வேண்டும். பம்பரமாக சுழன்று பணியாற்றுவீர்கள். விரும்பிய உணவு வகைகளைச் சாப்பிடலாம்.

**மகரம்:**
விலகிச் சென்ற சொந்தங்கள், விரும்பி வந்து சேரும் நாள். வியாபாரிகள் வழக்கத்திற்கு மாறாக, கூடுதல் வருமானம் பெறலாம். சிக்கலான காரியம் ஒன்றில், புது விதமான அணுகு முறையை கடைப்பிடித்து வெற்றி காண்பீர்கள். சகோதரர்கள் தொடர்பான விஷயங்களில், பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். நண்பர்கள் வட்டம் விரிவடையும்.

**கும்பம்:**
ஆடம்பரப் பொருள்கள் வாங்குவதில் நாட்டம் செல்லும். வீண் பிடிவாதம் பிடிக்கும் பிள்ளைகளால் எரிச்சல், கோபம் அடையலாம். வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள். அடுக்கடுக்காக குவியும் வேலைகளால், அவதிகளுக்கு ஆள்படலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். மறதியால் அவதியுண்டு.

**மீனம்:**
யாரிடமும் கோபம், வேகத்தை வெளிக்காட்டாமல் அமைதியாகச் செயற்பட வேண்டும். சக ஊழியர்கள் திடீர் விடுமுறையால், கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். உறவினர்களுக்காக, சில செலவுகளைச் செய்யலாம். நீங்கள் பெரிதாக நினைக்கும் ஒருவர், உங்களை துச்சமாக மதிக்கலாம். பணவரவுகளில் ஏற்பட்ட தடை, தாமதங்கள் விலகும்.

# தமிழ... மனம்... சிந்தி!

இலங்கைத் தீவின் இனப்பிரச்சினை 60 வருடங்களுக்கும் மேலான வரலாற்றைக் கொண்டது.

1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தது என்று சொல்லப்படுகின்ற காலத்திலிருந்து தமிழ் மக்களுடைய உரிமையை வென்றெடுப்பதற்காகத் தமிழ்த் தலைவர்கள், பேச்சுக்களையும் பல்வேறு போராட்டங்களையும் நடத்திவந்திருக்கின்றார்கள்.

போராட்டங்கள் என்றால் ஆயுதம் ஏந்திய போராட்டமல்ல. அகிம்சை வழியிலான, சத்திய வழியிலான தன்னையே வருத்துகின்ற போராட்டங்கள். பல்வேறு சந்தர்ப்பங்களில் இவற்றை நடத்தியிருக்கின்றார்கள். மக்களை இணைத்து மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டங்களையும் நடத்தியிருக்கின்றார்கள்.

பேச்சுக்களின் மூலம் சில உடன்பாடுகளும் அவ்வப்போது காணப்பட்டன. பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் என்பன கைச்சாத்திடப்பட்டன. ஆனால் எழுதப்பட்ட ஒப்பந்தங்களும் கூட இனவாதிகளின் அச்சுறுத்தல்களால் கிழித்தெறியப்பட்ட வரலாறுகள்தான் உண்டு. அகிம்சை வழியிலான, சத்திய வழியிலான போராட்டங்கள் எல்லாம் ஆயுதமுனையில் அடக்கப்பட்ட வரலாறுகள்தான் உண்டு.

## கல்வியில் கூட கைவைத்தார்கள்

ஜனநாயக வழியிலான, சட்டரீதியான போராட்டங்களையே ஆயுதம் தாங்கிய குண்டர்களை ஏவி அடக்கிய சிங்கள அரசு, தமிழனின் அழிக்கப்பட முடியாத கல்வியிலும் கைவைத்தது. தமிழனின் சொந்த மண்ணையே அபகரிக்க முனைப்புக்காட்டியது.

விவசாயக்குடியேற்றங்கள் என்று கிழக்கு மாகாணத்தில் கல்லோயா, கந்தளாய் போன்ற இடங்களில் திட்டமிட்ட வகையில் சிங்கள மக்களைக்குடியேற்றியது. தரப்படுத்தல் என்ற தடைக்கல்லைப் போட்டு தமிழ் மாணவர்களின் கல்வியை நாசம் செய்தது.

சோல்பரி அரசமைப்பின் மூலம் தமிழனுக்கு இருந்த அற்பசொற்ப சலுகையான 29ஆவது பிரிவை 1972ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட குடியரசு யாப்பின் மூலம் இல்லாது ஒழித்தது சிறீமா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசு.

1972ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசமைப்புக்குத் தந்தை செல்வாவால் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் அனைத்தும் சிங்கள இனவாதிகளால் நிராகரிக்கப்பட்டன.

1956, 1958, 1977, 1983 ஆகிய காலப்பகுதிகளில் சிங்கள இனவெறியர்களால் தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழ் மக்கள் வெட்டியும் குத்தியும் கொல்லப்பட்டார்கள்.

பச்சிளம் பாலகர்களை கொதிக்கும் தாரில் கதறக் கதற தூக்கிப் போட்டார்கள். தமிழனின் சொத்துக்கள் எல்லாம் சூறையாடப்பட்டன. உடுத்த ஆடையுடன் என்றல்ல, கிழிந்த கந்தல் உடையுடன் யாழ்ப்பாணத்துக்கு அடித்து விரட்டப்பட்டார்கள்.

1974ஆம் ஆண்டு யாழ். மண்ணில் தமிழன் தமிழுக்கு விழா எடுத்து மகிழ்ந்திருந்த நேரத்தில் சீருடையை அணியாதவர்கள் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசி பண்பாட்டுப் படுகொலை புரிந்தார்கள். 10 தமிழர்களின் இன்னுயிர்களைப் பறித்தார்கள்.

1981ஆம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட சபைத் தேர்தலில் ஆறு வாக்குப் பெட்டிகளை அபகரித்துச் சென்றவர்கள். அழகாக இருந்த யாழ். நகரையே எரித்துச் சுடுகாடாக்கினார்கள். தென்கிழக்கு ஆசியாவிலேயே சிறந்த நூல் நிலையமாகத் திகழ்ந்த யாழ். நூல் நிலையத்தையே எரித்துச் சாம்பல் மேடாக்கினார்கள்.

## ஆயுதம் ஏந்துவதற்கு ஏன் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்?

இத்தனை அநியாயங்களையும் தாங்கிய தமிழ் நெஞ்சங்கள் இனியும் பொறுத்திருந்தால் தமிழன் இருப்புக்கே ஆபத்து என்ற நிலையில்தான் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

ஆயுதப் போராட்டம் நடைபெற்ற 30 வருட காலத்தில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா பிரேமதாஸ, சந்திரிகா, ரணில், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய தலைவர்கள் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தினர்.

தமிழனை ஏமாற்ற வேண்டும் என்ற எத்தனிப்புடனும் சர்வதேசத்துக்கு ஓர் கண்ணாமூச்சி விளையாட்டுக் காட்ட வேண்டும் என்ற ஏளனமான போக்குடனும் தான் சிங்களத் தலைமைகள் பேச்சுக்களை நடத்தினர்களே தவிர இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற முனைப்புடன் சிங்கள அரசுகள் பேச்சுக்களை நடத்தவில்லை.

இதனைச் சிங்கள அரசுகளின் கடந்த கால வரலாறுகளை உன்னிப்பாக அவதானிப்பவர்கள் நன்கு உணர்ந்து கொள்வார்கள்.

கடந்த 60 வருடகால இனப்பிரச்சினை வரலாற்றில் அகிம்சை வழியிலான போராட்டங்கள் நடைபெற்ற 30 வருடகாலத்தில் சிங்கள அரசியல் தலைவர்கள் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம் காற்றில் பறக்கவிடப்பட்டன. அதன்பின்னர் அண்மையில் மஹிந்த ராஜபக்ஷவால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் வழங்கப்பட்டன.



* பிரபாகரனுடன் நேரடியாகப் பேசிப் பிரசனைக்குத் தீர்வுகாண்பேன்.
* சர்வ கட்சி மாநாட்டைக் கூட்டி அ,தன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன்.
* 13 ஆவது திருத்தத்துக்கு மேலாக அதிகாரங்களைப் பகிர்ந்து பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என்பனவே அந்த வாக்குறுதிகள்.

ஆனால் பிரபாகரனைக் கொன்றுவிட்டோம் என்று பெருமைப்பட்டு அறிவித்தார்கள். அதற்காக இன்றுவரை வெற்றிக்கொண்டாட்டங்களையும் நடத்தினார்கள்.

## ஜனாதிபதி செய்தது என்ன?

மூன்று வருடங்களாக சர்வகட்சி மாநாட்டை நடத்தியவர்கள் சமர்ப்பித்த அறிக்கையை ஜனாதிபதி இன்றுவரை வெளியிடவே இல்லை. இந்த அறிக்கைக்கு என்ன நடந்தது? இந்த அறிக்கை வெளியிடப்படாமைக்குக் காரணம் என்ன?

13ஆவது திருத்தத்துக்கும் மேலாக என்றால் அதில் சொல்லப்பட்ட அதிகாரங்களையும்விட மேலும் அதிகாரங்கள் என்றுதான் அர்த்தம். ஆனால் "சொன்னதைச் செய்வேன்; செய்வதையே சொல்வேன்" என்று வேலணையில் முழங்கிய ஜனாதிபதி அவர்கள் செய்தது என்ன?

13ஆவது திருத்தத்தில் சொல்லப்பட்ட பொலிஸ் அதிகாரம் மற்றும் காணி அதிகாரம் இவற்றைக் கொடுக்க வேமாட்டேன் என்பதுதான். ஆக மொத்தத்தில் இவர் கொடுத்த வாக்குறுதிகளும் காற்றில் பறக்க விடப்பட்டன.

சட்டத்தில், அதுவும் அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்ட அதிகாரங்களையே கொடுக்கமாட்டேன் என்று மறுக்கும் ஜனாதிபதி எதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கிறார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு இவருக்கு கண்டிப்பாகத் தேவை. ஏன் என்றால் தமிழ்மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றுவதற்கு வேறு வழி இல்லை.

ஒரே நாடு, ஒரே இனம் என்று ஜனாதிபதி அவ்வப்போது சொல்லி வருகிறார். அதனால்தானோ இன அழிப்பும் நிலப்பறிப்பும்?

போர் நடைபெற்ற காலத்திலும், ஏன் இன்றுவரையும் கூட எத்தனை படுகொலைகள்?, எத்தனை பாலியல் வல்லுறவுகள்? எத்தனை எத்தனை மனித உரிமை மீறல்கள்?.

புங்குடுதீவில் தர்சினி என்ற இளம் யுவதி பாலியல் வல்லுறவின் பின் கல்லுடன் கட்டப்பட்டு கிணற்றில் போடப்பட்டார். திருகோணமலையில் கடற்கரையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ழனே
# ம்விட்டு
# !



விளையாடிய மூன்று மாணவர்கள் சுட்டுக்கொல்லப் பட்டார்கள்.

மன்னாரில் இளம் தாயை கதறக் கதறப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி அந்த இளம் தாயையும் அவரது பிஞ்சுப் பாலகனையும் அவரது கணவனையும் ஈவிரக்கமின்றிப் படுகொலை புரிந்து உடல்களைக் கட்டித் தொங்க விட்டுக் களிநடனம்புரிந்தார்கள்.

வேலணையில் மருத்துவமாது தர்சிகாவைப் பாலியல் வல்லுறவு செய்து படுகொலையும் புரிந்தவர்கள் தூக்குப் போட்டுத் தொங்கவிட்டார்கள். சாவகச்சேரியில் பாடசாலை மாணவன் கபில்நாத் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார். மிருசுவிலில் தமது சொந்த வீடுகளைப் பார்க்கச் சென்ற எட்டுப் பேரை (ஐந்து வயதுச் சிறுவன் உட்பட) படுகொலை செய்து மலசலக் கூடக்குழியில் புதைத்தார்கள்.

பிறந்த நாளுக்குச் சென்றுவிட்டு ஓட்டோவில் வீடுதிரும்பிய அப்பாவித் தமிழர்களை நெல்லியடியில் வைத்து துடிக்க பதைக்க சுட்டுக் கொன்றார் கள். உரும்பிராயில் வேலாயுதம் ரஜனி என்ற இளம் பெண்ணை பாலியல் வல்லுறவு புரிந்தவர்கள் கொலை செய்து மலசலகூட குழியில் போட்டு மூடினார்கள்.

இவ்வாறாகச் செய்யப்பட்ட எண்ணிலடங்காப் படுகொலைகளில் இவை ஒரு சில மட்டுமே. இவற்றுக்கெல்லாம் முடி சூட்டுவதுபோல புலிகளிடமிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றுகிறோம் என்று கூறி வன்னி மண்ணில் தமிழனின் இரத்த ஆற்றை ஒட விட்டார்கள். இறந்தவர்கள் எண்ணிக்கை 40,000 ஆக இருக்கும் என்கிறது ஐ.நா. நிபுணர் குழு. ஒரு லட்சத்துக்கும் மேல் என்கின்றன மனித உரிமை அமைப்புக்கள்.

குறிக்கப்பட்ட இடத்தில் பாதுகாப்பாக இருக்கலாம். அங்கே சென்று பாதுகாப்பாக இருங்கள் என்று மக்களை அந்த இடத்துக்கு வரவழைத்த அரசு கொத்துக் குண்டுகளைக் கொட்டிக் பல்லாயிரக்கணக்கானதமிழ் மக்களைக் கொன்று குவித்து இனப்படு கொலை புரிந்தது என்று ஆதாரப்படுத்துகிறது ஐ.நா. நிபுணர் குழு.

மூன்று லட்சம் மக்களை முள்கம்பி வேலிக்குள் தடுத்து வைத்து நாயிலும் கேவலமாக நடத்தினர். இன்று சர்வதேசத்தின் நெருக்குதலால் மீள்குடியமர்வு என்ற போர்வையில் மக்களைத் தறப்பாள் கொட்டகைக்குள் தவிக்க விட்டு சகல வசதிகளுடனும் அவர்களை மீளக்குடியேற்றம் செய்திருக்கின்றோம் என்று வெளி உலகுக்குக் காட்டுகின்றனர்.

அந்த மக்கள் இன்று உண்ண உணவோ உடுக்கத் துணியோ இன்றி மழையிலும் வெள்ளத்திலும் காற்றிலும் பயங்கர விசப்பூச்சிகள் மத்தியில் அல்லாடுகின்றனர்.

யுத்தம் முடிந்தது இன்று இரண்டு வருடங்களுக்கும் மேலாகின்றது. இன்னும் ஏன் இராணுவத்தை எம் மண்ணில் வைத்திருக்கின்றார்கள்? ஓர் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்காமல் இருப்பதற்காகவா இராணுவ நிலைகள் இருக்க வேண்டும் என்று வாதம் புரிகின்றார்கள். தமிழர்கள் ஆயுதம் தூக்கியமைக்கான காரணத்தை நன்கறிந்து அதற்கான பரிகாரத்தை தேடினால் பயங்கரவாதம் ஏன் தலை தூக்குகிறது?

### அதியசயம் பேசும் அரசு

தமிழனை அடிமையாக வைத்திருக்க வேண்டும் என்ற மனோபாவம் சிங்கள அரசுக்கு இருக்கும் வரையில் தீர்வும் இல்லை. இந்த நிலையில், தமிழனுக்கு இத்தனை அநியாயங்களையும் அக்கிரமங்களையும் செய்த பின்பும் படுபாதகமான இழிசெயலை செய்த பின்பும் ஒரு தமிழ் மகனுக்கும் ஒரு சிறுகாயம் கூட ஏற்படாமல் பயங்கரவாதத்தை ஒழித்திருக்கிறோம் என்று உலக அதிசயம் பேசுகிறார்கள்.

பெற்றோரை இழந்த பிள்ளைகள் எத்தனை?, பிள்ளைகளை இழந்த பெற்றோர் எத்தனை?, கணவனை இழந்த விதவைகள் எத் தனை?, மனைவியை இழந்த கணவன்மார் எத் தனை?, எத்தனை குடுப்பங்கள் பூண்டோடு அழிந்தன?. எண்ணிக்கை பார்க்க மறுக்கிறது அரசு; அதனால் நீங்கள் எண்ணிப் பாருங்கள்.

கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக எந்தவித விசாரணையும் இன்றி சிறையில் வாடும் இளைஞர்கள், யுவதிகள் தமது இளமைக் காலத்தையே பாறிகொடுத்து வாடுகின்றார்கள். தமது பிள்ளைகளை இன்று விடுவார்கள்; நாளை விடுவார்கள் என்று பெற்றோர்களும், தமது கணவன்மாரை எப்பொழுது விடுவார்கள் என்ற ஏக்கத்துடனும் எதிர்பார்ப்புடனும் மனைவிமாரும் கண்ணீருடன் வாழும் வாழ்வு நிலை சொல்லில் அடங்காது.

இத்தனை அக்கிரமங்களை செய்யும் அரசுக்கும் அரசின் அமைச்சர்களுக்கும் தன் மானத்தை இழந்த எம்மவர்கள் சிலர் கோடாரிக்காம்புகளாக நின்று அவர்களுக்குக் குடை, கொடி, ஆலவட்டம் பிடிக்கின்றார்கள்.

தமிழன் தன் சொந்த மண்ணிலேயே இராணுவ நெருக்குவாரங்களுக்குள் சிக்கித் தவிக்கின் றான். முழத்துக்கு முழம் திரும்பிய திசையெல்லாம் பாதுகாப்புப் படையினர். இத்தனைக்கும் மத்தியில் கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவுகள். இந்த நிலையில் வடக்கின் வசந்தம் என்றும் நிம்மதியான வாழ்வு என்றும் பசப்பு வார்த்தை காட்டி தெருவீதியில் வலம் வருகின்றார்கள்.

### எதற்கு இந்த ஆரவாரம்?

நாடாளுமன்றத் தேர்தலுக்கு இல்லாத முக்கியம் ஏன் இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு? காரணத்தோடுதான் காய்நகர்த்துகின்றார்கள்.

ஐ.நாவின் நிபுணர்குழு அறிக்கையும், சனல்-4 தொலைக்காட்சியின் ஸ்ரீலங்காவின் கொலைக்களமும் இலங்கை அரசை கிலி கொள்ள வைத்திருக்கின்றன. சர்வதேசமும்

**மு.குமாரவேல்**
***மக்கள் சக்தி***

இலங்கை அரசை நோக்கி கை நீட்டுகின்றது.

போர்க் குற்றச்சாட்டிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு தமிழ் மக்களின் உதவி இந்த அரசுக்குத் தேவை. அதனால்தான் உள்ளூராட்சித் தேர்தலை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதற்காக அத்தனை அமைச்சர்களும் யாழ்ப்பாணத்தில் முகாமிடுகின்றனர்.

இந்தவேளையில் நாம் இன்னொரு விடயத்தையும் புரிந்து கொள்ளவேண்டும்.

இலங்கைத்தீவின் சகல சிங்களக்கட்சிகளும் தமிழனின் உரிமையை பறிப்பதில் போட்டு போட்டுக்கொண்டு செயல்பட்டன; செயல்படுகின்றன.

''புலிகள் அழிக்கப்பட்டுவிட்டார்கள் இனித் தீர்வுத் திட்டமே தேவையில்லை'' என்று தமிழர்களை அலட்சியப்படுத்தியவர் ஐ.தே.கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க. சட்டிகள் வெவ்வேறானாலும் கள் ஒன்றுதான்.

எமது மண் மீட்கப்படவேண்டுமானால், இராணுவ நெருக்குவார மின்றி நாம் வாழ வேண்டுமானால், எமது இளைஞர், யுவதிகள் ஒழுக்க நெறியோடு வ ாழவேண்டுமோனால் எமது சந்ததி காப்பாற்றப்பட வேண்டுமானால் "மானமுள்ள தமிழனை மண்விட்டுச் சிந்தி, மறு பேச்சில்லாமல் தமிழன் வாழ வாக்குக்குடு''

# அத்வைதம்



முன்னொரு காலத்தில் ரிபு என்ற முனிவர் ஒருவர் இருந்தார். அவருடைய சீடர் நிதாதர். ஒரு சமயம் ரிபு முனிவர் தவம் செய்யும் பொருட்டு வெளியில் எங்கேயோ சென்றிருந்தார். பின்னர் தனது பயணத்தை முடித்துக் கொண்டு அவர் ஆயிரம் வருடங்கள் கழித்து சீடரைப் பார்பதற்காகத் திரும்பி வந்தார்.

திரும்பி வந்த தன்னுடைய குருவை சீடர் நிதாதருக்கு அடையாளம் தெரியவில்லை. யாரோ ஒரு பெரிய முனிவர் வந்திருக்கிறார் என்று நினைத்துக் கொண்டார். அவரிடம் வந்த ரிபு முனிவர் ''எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது; சாப்பாடு வேண்டும்'' என்றார்.

உடனே சீடர் நிதாதர் தன் மனைவியை அழைத்து சுவையான உணவு சமைக்கச் சொன்னார். உணவு தயாரானதும் ரிபுவை சாப்பிட அழைத்தார். முனிவரும் திருப்தியாகச் சாப்பிட்டார்.

சாப்பாடு முடிந்ததும் ரிபுவிடம் ''என்ன திருப்தியாகச் சாப்பிட்டீர்களா?'' என்று வினாவினார் நிதாதர். ''நான் எங்கே சாப்பிட்டேன்? எவனுக்குப் பசியோ அவன்தான் சாப்பிடுவான். அவனுக்குத்தானே திருப்தி ஏற்படும்!'' என்றார் ரிபு.

சீடருக்கு முனிவர் கூறியது ஒன்றும் புரியவில்லை. குழம்பிப் போய் ரிபுவை நோக்கினார். முனிவர் ''இப்போது சாப்பிட்டது நான் இல்லை. என் உடல்தான் சாப்பிட்டது. அத னால் உடலுக்குத்தான் திருப்தியோ அதிருப்தியோ ஏற்படும். நான் ஆன்மா - ஆன்மாவில் திருப்தியோ அதிருப்தியோ கிடையாது'' என்று விளக்கினார்.

ரிபு சொன்னதைக் கேட்டவுடனேயே நிதாதருக்கு நம்முடைய குருநாதன் இவர் என்பது புரிந்துவிட்டது. குருவின் காலில் வீழ்ந்து வணங்கினார். பின்பு ரிபு முனிவர் மீண்டும் தவம் புரியச் சென்றுவிட்டார். ஆயிரம் வருடங்கள் கழித்து மீண்டும் ஊருக்குத் திரும்பி வந்தார்.

ஊருக்கு அவர்வரும் சமயத்தில் நிதாதர் தர்ப்பைப்புல் மூட்டையைத் தலையில் வைத்துக்கொண்டு தெரு ஓரமாக நின்று கொண்டிருந்தார். நிதாதரை நோக்கிய ரிபு, ''ஏன் இப்படித் தெரு ஓரமாக நின்று கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டார்.

இப்போதும் சீடருக்குக் குருவை அடையாளம் தெரியவில்லை. ''ராஜா யானை மேல் அமர்ந்து பவனி வந்து கொண்டிருக்கிறார். அதைத்தான் இப்படி ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கிறேன்'' என்றார் நிதாதர்.

அதற்கு ரிபு அவரிடம் ''அது சரி அதில் யார் ராஜா? எது யானை? என்று கேட்டார். சீடர் ஆச்சரியத்துடன் முனிவரைத் திரும்பிப் பார்த்தார். மேலே உட்கார்ந்திருக்கிறாரே அவர் தான் ராஜா. கீழே இருக்கிறதே அதுதான் யானை'' என் றார்.

''அப்படியா! 'மேலே' என்று சொல்கிறாயே, அப்படியென்றால் என்ன? 'கீழே' என்று சொல்கிறாயே அப்படியென்றால் என்ன?'' என்று திரும்பவும் கேட்டார் ரிபு முனிவர். குரு இப்படிக் கேட்டதும் நிதாதர் உடனே முனிவரின் தோள் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டார்.

அவர் அப்படி உடகார்ந்த படியே ரிபு முனிவரிடம் 'மேலே, கீழே என்பதற்கு விளக்கம் தானே கேட்டீர்கள்? இதோ நான் மேலே இருக்கிறேன். நீங்கள் கீழே இருக்கிறீர்கள்'' என்றார். முனிவர் அப்போதும் விடவில்லை அடுத்த கேள்வியைக் கேட்டார். ''நான் மேலே- நீ கீழே என்று சொல்கிறாயே; நான் என்றால் யார்? நீ என்றால் யார்?'' என்று திரும்பவும் கேட்டார்.

உடனே அப்போதுதான் வந்திருப்பது தன் குரு என்ற உண்மை நிதாதருக்குப் புரிந்தது. உடனே அவர் ரிபு முனிவரின் கால்களில் வீழ்ந்து வணங்கினார்.

''உயிர்களுக்கிடையில் வெளித்தோற்றத்தில்தான் வேறுபாடுகள் இருக்கின்றனவே தவிர எங்கும் எல்லா உயிர்களிலும் நீக்க மற நிறைந்திருப்பது ஆத்மா ஒன்றுதான்'' என்ற அத் வைத தத்துவத்தை விளக்க ரஹூகுணன் என்ற அரசனுக்கு ஜட பாதர் கூறிய புராணக் கதைஇது.

கோ. சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதயன் வெளியீடான
# கல்விச்சுடர்
தரம் 05 மாணவர்களை இறுதிப்பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதற்கான விசேட தொடர் வெளியீடு



எஸ். கபிலன்,
லோட்டஸ் அக்கடமி,
வவுனியா.

பரீட்சை இலக்கம்: 10

## தரம் 05 புலமைப் பரிசில் படிமுறைப் பரீட்சை - 2011

பெயர்/சுட்டெண்:......................... | **வினாத்தாள்-II** | நேரம்: 1 மணி 15 நிமிடங்கள்

* எல்லா வினாக்களுக்கும் தரப்பட்ட அறிவுறுத்தல்களின்படி விடையளிக்குக.

01. பின்வரும் பந்தியை வாசித்த பின் இல. 1 - 17 வரையிலான வினாக்களுக்கு விடை எழுதுக.

டெங்கு நோய் இன்று நம் நாட்டையே உலுக்கி வரும் மிகக்கொடிய நோயாகும். 25,500 பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 165 பேர் இது வரை இறந்துள்ளனர். டெங்குக் காய்ச்சல் வைரசினால் ஏற்படும் ஒரு நோயாகும். ஈடிஸ் ஈஜிப்டஸ் எனும் நுளம்புகள் மனிதனைக் கடிப்பதனால் இந்நோய் உண்டாகின்றது.

உலகளாவிய ரீதியில் 70 நாடுகளில் இந்தக் கொடிய டெங்கு நோயின் அபாயம் காணப்படுகின்றது. இந்நோயினால் சிறுவர்கள் மட்டுமல்ல பெரியவர்களும் பாதிப்புக்குள்ளாகின்றனர். டெங்கு நோயைக்கட்டுப்படுத்தப் பப்பாசி இலைச்சாறு மற்றும் தேன் ஆகியவற்றை கலந்து பருகுவதன் மூலம் குருதிச் சிறு தட்டுக்களின் அளவை அதிகரிக்க முடியும். டெங்கு காய்ச்சலைத் தடுத்துக் கொள்ள அதைப்பரப்பும் நுளம்புகள் உண்டாவதைத் தடுத்தல் வேண்டும்.

1) நம் நாட்டை உலுக்கி வரும் மிகக் கொடிய நோய் எது?
..........................................

2) எத்தனை பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்?
..........................................

3) டெங்கு நோயினால் எத்தனை பேர் இறந்துள்ளனர்?
..........................................

4) உலகின் எத்தனை நாடுகளில் டெங்கு நோயின் அபாயம் காணப்படுகின்றது?
..........................................

* ஒத்த சொல் தருக.
5) நோய் - ..........................
6) பருகுதல் - ..........................
7) தடுத்தல் - ..........................
8) குருதி - ..........................

* எதிர்ச்சொல் தருக.
9) நாடு - ..........................
10) தடுத்தல் - ..........................
11) இறப்பு - ..........................
12) உண்டாதல் - ..........................
13) இலை + சாறு என்பதைச் சேர்த்து எழுதுக. - ..........................
14) டெங்கு காய்ச்சலை ஏற்படுத்தும் நுளம்பின் பெயர் யாது?
..........................................
15) இந்நோயினால் யார் பாதிப்புக்குள்ளாகின்றனர்?
..........................................
16) டெங்கு நோயை கட்டுப்படுத்தவும் குருதிச் சிறுதட்டுக்களை அதிகரிக்கவும் யாது செய்யலாம்?
..........................................
17) டெங்குக் காய்ச்சலை தடுத்துக்கொள்ள என்ன செய்ய வேண்டும்?
..........................................
18) படர்க்கை பெயர்ச்சொல் ஒன்று தருக.
..........................................
19) உயர்திணை பலர்பால் பெயர்ச்சொல் ஒன்று தருக.
..........................................
20) உயர்திணை ஆண்பால் பெயர்ச்சொல் ஒன்று தருக.
..........................................

02. அடைப்புக்குள் இருக்கும் சொற்களில் இருந்து பொருத்தமான சொல்லைத்தெரிவு செய்து வெற்றிடத்தை நிரப்புக.
1) மாணவர்கள் .................................. யில் ஊக்கமாக இருக்க வேண்டும். (கல்வி, கள்வி)
2) சிறுவர்கள் சிரமதானப் .................................. களைச் சிறப்பாகச் செய்தனர். (பனி, பணி)

03. 1) பின்வரும் வாக்கியத்தை ஒருமையாக மாற்றி எழுதுக.
அவர்கள் பாடசாலைக்குச் சென்றார்கள்.
..........................................
2) பின்வரும் வாக்கியத்தை பன்மையாக மாற்றி எழுதுக.
பசு புல் மேய்கிறது.
..........................................

04. மரபுத் தொடரின் கருத்தை எழுதுக.
1) விழலுக்கிறைத்த நீர்
..........................................
2) தட்டிக்கொடுத்தல்
..........................................

05. பின்வரும் சொற்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.
1) தான் பிறந்த நாடு
..........................................
2) ஓர் இனத்தின் பாரம்பரிய உடை
..........................................
3) புராதனச் சின்னங்களைப் பாதுகாப்பாக வைக்கும் இடம்
..........................................

06. பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.
அபிநாத் சந்தைக்குச் சென்று மாம்பழமும் வாழைப்பழமும் தோடம்பழமும் வாங்கினான்

07. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக.
எப்பொழுது / வேண்டும் / மாணவர்கள் / உண்மை / பேச
..........................................

08. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.
1) சிறு துரும்பும் பல் குத்த உதவும்.
..........................................
2) முயற்சி உடையார் இகழ்ச்சியடையார்.
..........................................

09. ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.
1) முடிவுத் திகதி - ..........................
2) விலை - ..........................
3) நிறை - ..........................
4) பச்சை - ..........................

10. சிங்கள வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.
1) அபி கிரிபத் கமு. - ..........................
2) ஔாகே வயச கீயத? - ..........................

11. ஆங்கில வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.
1) I am eating mango - ..........................
2) My name is Jeya - ..........................
3) I read a book - ..........................

12. ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு நேரடியாக தொற்றக்கூடிய நோய் எது?
1) கண் நோய் 2) இருதய நோய்
3) நீரிழிவு நோய் 4) யானைக்கால் நோய்

13. தண்டில் காய்க்கும் மரம் எது?
1) வேம்பு 2) புளி 3) மா 4) வாழை

14. நன்றாக குளிர்மையான நிழல் தரும் தாவரம்,
1) ஆலமரம் 2) தென்னை 3) பனை 4) பப்பாசி

15. பப்பாசி இலையின் வடிவத்தை ஒத்த இலை உள்ள தாவரம் ஒன்று,
1) ஆமணக்கு 2) மா
3) வாழை 4) முருங்கை

16. இரவில் மலரும் பூக்களில் ஒன்று,
1) ரோஜா 2) சூரியகாந்தி
3) தாழம்பூ 4) நான்குமணிப்பூ

17. பின்வருவனவற்றில் புரதம் மிக்கது,
1) கீரை 2) அரிசி 3) கத்தரிக்காய் 4) பருப்பு

18. சமாதானத்தின் சின்னமாகக் கருதப்படும் பறவை,
1) காகம் 2) புறா 3) குயில் 4) மயில்

19. 
இங்கு காணப்படும் பறவை,
1) கொக்கு 2) காகம்
3) குயில் 4) வாத்து

20. பழங்களை விரும்பி உண்ணும், உடல் பச்சை நிறமாக இருக்கும் பறவை,




1) 2) 3) 4)

21. 
இங்கு சிறுவர்கள் விளையாடும் விளையாட்டைத் தெரிவுசெய்க.
1) கிரிக்கெட் 2) காற்பந்து
3) தாயம்போடுதல் 4) பசுவும் புலியும்

22. 
இலங்கைக்கு உன்னத சேவையாற்றியவரும், இப்படத்தில் காணப்படுபவருமான பெரியார் யார்?
1) சேர். டி. பி. ஜயதிலகா 2) எம். சீ. சித்திலெப்பை
3) சேர். பொன். இராமநாதன் 4) டி. பி. ஜாயா

23. பலகையில் குழி குடைவதற்கு ஏற்ற உபகரணம் எது?



1) 2) 3) 4)

24. 
இக் குறியீடு எவ் வங்கிக்குரியது?
1) சமுர்த்தி வங்கி 2) இலங்கை வங்கி
3) இலங்கை மத்திய வங்கி 4) மக்கள் வங்கி

25. 
இக் குறியீடுகள் பொதுவாக காணப்படும் இடம்,
1) கழிப்பறை 2) வைத்தியசாலை
2) சந்தை 4) பேருந்து (17 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ ஆட்சி நோக்கி நகரும் இலங்கை அரசு

இலங்கை மெல்ல, மெல்ல இராணுவ ஆட்சிக்கு மாறிக் கொண்டிருப்பது குறித்து புதுடில்லி அதிகார பீடம் அதிகம் அலட்டிக் கொள்ளாமல் இருப்பது ஆச்சரியத்துக்கும் கவலைக்கும் உரியது.

ஜனநாயகத் தேர்தல் மூலம் ஆட்சிக்கு வந்து, தொடர்ந்து வந்த தேர்தல்களில் அபரிமிதமான வெற்றிகளை ஈட்டி, ஜனநாயகப் பாதையில் தமது பதவியை நிரந்தரமாக உறுதிப்படுத்திக் கொண்டிருக்கும் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ, தனது அதிகாரப் பிடியை மெல்ல ராணுவ ஆட்சியாக மாற்றிக்கொண்டு வருகிறார் என்பது பலரும் புரிந்துகொண்டிருக்கும் விஷயம் தான்.

ஆனால், இத்தகைய மாற்றம் தனது பிராந்தியத்தில் ஏற்படுத்தக்கூடிய ஆபத்துக்களைப் புரிந்துகொள்ளாமல் புதுடில்லி - மென்போக்குடன் இருப்பதுதான் பலரையும் ஆச்சரியத்துக்குள் தள்ளியிருக்கிறது.

இன்றைய நிலையில் இலங்கைத் தீவில் ஒரு ஜனநாயகத் தேர்தல் நடத்தினால்கூட, தமிழர்கள் வாழும் வடக்கு, கிழக்குப் பிரதேசம் தவிர்ந்த ஏனைய பகுதிகள் எங்கும் ஜனாதிபதி ராஜபக்ஷவே பெரு வெற்றிபெறுவார் என்பது திண்ணம்.

அவ்வளவு தூரம் இலங்கைத் தீவின் பெரும்பான்மையினரான பௌத்த, சிங்களவர்கள் மத்தியில் அவருக்கு அபரிமிதமான செல்வாக்கு இருக்கிறது.

சம உரிமையும், சுதந்திரமும் கேட்டு ஆயுத வழியில் போராடி வந்த தமிழர்களின் விடுதலை அமைப்பான புலிகள் இயக்கத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்கிய சிங்கள மாவீரனாக ராஜபக்ஷவை சிங்களம் போற்றுகிறது.

அதுவே இலங்கைத் தீவில் இன்று அவரது ஏகபோக செல்வாக்குக் காரணம். இதனால் இந்த யுத்த வெற்றிக் காலத்தை ஒட்டி நடைபெறும் தேர்தல்களில் எல்லாம் அவரும் அவரது கட்சியினரும் அமோக வெற்றியை ஈட்டி வருகிறார்கள்.

ஆனாலும் இந்த யுத்த வெற்றிச் செல்வாக்கு நீண்ட காலத்துக்குத் தங்களுக்குக் கைகொடுக்காது என்பது ராஜபக்ஷ அணியினருக்கு நன்கு தெரியும்.

ஒருபுறம், தவறான ஆட்சிமுறையாலும், மோசமான பொருளாதாரக் கொள்கைகளாலும், ஊழல், மோசடி, அராஜக கெடுபிடிகள், அட்டகாசங்கள் போன்றவற்றாலும் விரைவில் தங்கள் ஆட்சியின் மீது மக்களுக்கு வெறுப்பு வந்துவிடும் என்ற உண்மை நிலை ராஜபக்ஷ ஆட்சி பீடத்துக்குத் தெளிவாகவே புரிகிறது.

மறுபுறம், யுத்தத்தில் வெற்றி ஈட்டும் ஒரே நோக்குடன் தமிழர்களுக்கு எதிராக ஈவு இரக்கமின்றித் தாம் முன்னெடுத்த ராணுவ அட்டூழிய நடவடிக்கைகள் சர்வதேச ரீதியில் யுத்தக் குற்றங்களாகவும், மனித குலத்துக்கு எதிரான மோசமான நடவடிக்கைகளாகவும், கொடூரமான மனித உரிமை மீறல்களாகவும் நிரூபிக்கப்படும் ஆபத்து வேகமாகச் சூழந்து வருவதும் ராஜபக்ஷ ஆட்சி பீடத்துக்குப் பெரும் இக்கட்டை ஏற்படுத்தியுள்ளது.

இந்த இரண்டு சிக்கல்களையும் எதிர்கொண்டு தப்பிப் பிழைப்பதற்கு ஒரே வழி நாட்டின் அதிகாரத்தை எந்த நேரமும் தமது கிடுக்கிப்பிடியில் வைத்திருப்பதுதான் என்று கருதும் ராஜபக்ஷ தரப்பு அதற்கான வியூகங்களை வகுத்துச் சாணக்கியத்தனமாகச் செயற்படத் தொடங்கியுள்ளது.

தான் சாகும்வரை ஆட்சி அதிகாரத்தில் இருப்பதைத் தடுக்கக் கூடிய அரசமைப்புக் கட்டுப்பாடுகளைக் கூட தவிடுபொடியாக்கும் விதத்தில் அரசமைப்பு மாற்றங்களை அவர் அதிரடி யாகக் கொண்டு வந்து நிறைவேற்றி விட்டார்.

ஆனாலும் கூட, சிங்கள மக்கள் மத்தியில் தமக்கு இருக்கும் செல்வாக்குச் சரிந்தால், ஜனநாயக வழியிலேயே தாம் வீட்டுக்கு அனுப்பப்படலாம் என்ற அச்சம் அவருக்கு இல்லாமல் இல்லை. அப்படி நேர்ந்தால் உள்நாட்டில் ஊழல், மோசடிகள், அராஜகங்கள், அட்டகாசங்கள் போன்ற குற்றச்சாட்டுகளுக்காகவும், சர்வதேச மட்டத்தில் யுத்தக் குற்றங்களுக்காகவும் நீதிமன்றங்களில் தாமும் தமது ஆட்சிப்பீட அணியினரும் எஞ்சிய வாழ்க்கைக் காலம் முழுதும் அல்லாட வேண்டி வரும் என்ற யதார்த்தமும் அவருக்கு நன்கு புரிகிறது.

அதனால், ஜனநாயக வழிகளை நம்பியிராமல், ஜனநாயக வேடமிட்டபடி, இராணுவ ஆட்சி முறைமையை நோக்கித் தமது பாதையைத் திருப்பி விட்டிருக்கின்றார் ராஜபக்ஷ. அதன் மூலம் வாழ்நாள் முழுவதும் தாம் அதிகாரத்தில் இருப்பதை உறுதி செய்யலாம் என்பது ராஜபக்ஷவின் நம்பிக்கை.

இந்த விபரீதப் பாதைக்கு அவர் திரும்பியமைக்கு அவரது வலது கரமாகச் செயல்படும் அவரது தம்பியார் கோத்தபாய ராஜபக்ஷவே பிரதான காரணம் என்கின்றன உள் தகவல்கள்.

கோத்தபாய இழுத்த இழுப்புக்கெல்லாம் விட்டுக் கொடுத்து, இசைந்ததால்தான் உலகின் மிகப்பெரிய விடுதலைப் போராட்ட அமைப்பான புலிகளைத் தோற்கடிக்க முடிந்தது என்று மஹிந்த ராஜபக்ஷ கருதுகிறார். அதனால் அதன் பின்னரும் கோத்தபாய காட்டும் வழியில் அவர் ஆட்சி அதிகார முறைமைகளை மாற்றுகிறார்.

தேர்தல்களையோ, மக்களையோ சந்தித்திராத முன்னாள் ராணுவ கேணலான கோத்தபாயவோ, தமது அண்ணரான மஹிந்த ராஜபக்ஷவை இராணுவ வழியில் ஆட்சியைத் தொடரத் தூண்டிவருகிறார்.

அதன் விளைவு? இன்று ஐ.நாவுக்கான இலங்கைப் பிரதிநிதி உட்பட பல பிரதான நாடுகளுக்கான இலங்கையின் தூதுவர்களாக ஓய்வு பெற்ற இராணுவ ஜெனரல்களே நியமிக்கப்படுகின்றனர்.

இராணுவ சேவையில் இருப்பவரே நேரடியாக மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவராகப் பணியாற்றும் அவலமும் நேர்ந்துள்ளது. இன்று, இலங்கையின் வெளிநாட்டு ராஜதந்திர சேவை என்பது ராணுவ அதிகாரிகளுக்கு இன்பமூட்டும் சேவைத் தளமாக மாறிவருகிறது.

மறுபக்கத்தில் நாட்டுக்குள்ளும் மாகாண ஆளுநர்கள், அரச அதிபர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பல பதவிகளுக்கும் இராணுவத்தினரே நியமிக்கப்படுகின்றனர்.

இன்று வெளிநாட்டுத் தூதுவர்களாகவும், உள் நாட்டின் உயர் மட்ட அரச நிர்வாக அதிகாரிகளாகவும் நியமிக்கப்பட்டு, வலுவாக அதிகாரங்களுடன் செயற்பட்டு வரும் இராணுவத்தினரின் பட்டியலை வெளியிட்டால் அதுவே நீண்ட அட்டவணையாகிவிடும்.


(20 ஆம் பக்கம் பார்க்க)

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)


26. தேசப்படத்தில் வயல்களைக் காட்டுவதற்கு பயன்படுத்தப்படும் நிறம்,
1) பச்சை 2) நீலம் 3) சிவப்பு 4) ஊதா

27. களைகள் புற்களை செதுக்குவதற்கும் குப்பை கூழங்களை மண்ணினுள் வெட்டி புதைப்பதற்கும் உதவுவது,
1) மண்வெட்டி 2) கத்தி
3) கோடரி 4) அலவாங்கு

*** உமது வகுப்பறையில் நீர் அமைத்த உபகரணங்கள் கீழே தரப்பட்டு உள்ளன. அவற்றின் பெயர்களை எழுதுக.**

28. 
(.......................)

29. 
(.......................)

30. 
(.......................)

*** வானில் உள்ள நட்சத்திரங்களில் சில கீழே காணப்படுகின்றன. அவற்றின் பெயர்களை எழுதுக.**

31. 
(...........................)

32. 
(...........................)

33. மின்னேரியாக்குளத்தை கட்டுவித்த மன்னன்,
1) மகாசேனன் 2) வசபன்
3) பராக்கிரமபாகு 4) தேவநம்பியதீசன்

34. தொல்பொருள் பெறுமதி மிக்கதாகவும் கலைத்துவ பெறுமதி மிக்கதாகவும் உள்ள இடம்,
1) எம்பிலிபிட்டிய 2) சிகிரியா
3) பொலன்நறுவை 4) அநுராதபுரம்

*** இலங்கையின் கலைத்துவப் படைப்புக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றின் பெயர்களை எழுதுக.**

35. 
36. 
37. 
38. 

...................... ...................... ...................... ......................

*** இலங்கையில் உள்ள இரு மாவட்டங்களின் பெயர்களை எழுதுக.**


39. .................................... 40. ....................................

41. வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடையில் உள்ள திசை யாது?
(................................)

42. 1kg செத்தல் மிளகாய் 190.00 எனின், 100g செத்தல் மிளகாயின் விலை யாது?
(................................)

43. $\frac{3}{8} + \frac{1}{8} =$ ..............................

44. அருகில் உள்ள உருவின் சுற்றளவு யாது?




..................................

45. ஒரு வாழைப்பழத்தின் விலை 7.50 சதம் ஆகும். 15 வாழைப்பழத்தின் விலை யாது? (................................)

46.
```
  368
+ 424
 [  ]
 ----
 1212
```

47.
```
- 8694
  [  ]
  ----
  3634
```

48. 10 m நீளமுள்ள நாடாவில் இருந்து 75cm நீளமுள்ள மூன்று துண்டுகள் வெட்டி எடுக்கப்பட்டன. மீதியாக உள்ள நாடாவின் மீதி யாது? (................................)

49. 1kg மாவின் விலை 60.00 எனின், 5kg 750g மாவின் விலை யாது?
(................................)

50. பயணத்தை ஆரம்பிக்கும்போது ஒரு வாகனத்தின் மானியில் இலக்கங்கள் பின்வருமாறு பதியப்பட்டிருந்தன. |4|5|3|6|8| km வாகனம் மேலும் 120km சென்ற பின்பு மானியில் பதிவாகும் இலக்கங்களை வெற்றுக்கூட்டில் எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

51. 550 புத்தகங்களை 5 பேருக்கு சமமாக பகிர்ந்து கொடுத்தால் ஒருவர் பெறும் புத்தகங்கள் எத்தனை?
..............................................................................

52. "எமது சூழலை சுத்தமாக வைத்திருப்பது எமது கடமையாகும்." எனும் தலைப்பில் 6 வசனங்கள் எழுதுக.
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி அழைப்பு



### அமரர் சண்முகம் சுப்பையா

கடந்த 22.06.2011 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சண்முகம் சுப்பையா அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (21.07.2011) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (6025) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்லையா சண்முகநாதன்

(Rtd- Postman)



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சண்முகநாதன் 19.07.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - அன்னம்மா தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்ற சிவக்கொழுந்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத் துரை - தங்கம்மா தம்பதியரின் மருமக னும் தனலக்சுமி (ஸ்ரீலக்ஷ்மி திருமண சேவை, கொழும்பு), காலஞ்சென்ற தயானந்தன் மற்றும் ஜெயலக்சுமி (கொழும்பு), நித்தியானந்தன் (T.R.R.O, Jaffna), செல்வரதி (மானிப்பாய்), மகாலக்சுமி (மானிப் பாய்), சிவானந்தன் (Kuwait) ஆகியோரின் தந்தையும் நிர்மல தேவன் (கிளி), விமலநாதன் (குட்டி), காலஞ்சென்ற பாலரஜனி மற் றும் ரதிமாலா ஆகியோரின் மாமனும் தர்ஷினி, கஷாந்தினி, வர் ஷன், நிஷா, ஐங்கரி, யசோ, திவ்யா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ந.ப. 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தனலக்சுமி, செல்வரதி
(பிள்ளைகள்)

மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய். (6037)

# கட்டடத்தில் இருந்து வீழ்ந்து இளைஞன் தலையில் படுகாயம்

யாழ்ப்பாணம்,ஜூலை 21

இரண்டு மாடிக்கட்டடத்திலிருந்து தவறி வீழ்ந்து இளைஞன் ஒருவன் தலையில் பலத்த காயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் சுன்னாகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் வவுனியா செட்டிகுளம், சின்னக்குளத்தைச் சேர்ந்த கேதீஸ்வரன் துயிரன் (வயது18)என்ற இளைஞனே படுகாயமடைந்தான்.

கட்டடத்தில் இருந்து வீழ்ந்து காயமடைந்த இவர் உடனடியாகத் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். பின்னர் அவர் மேலதிக சிசிக்சைக்காகக் கொழும்பு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (த-4)

## சங்கானையில் பாவனைக்குதவாத கோழி இறைச்சி

சங்கானைப் பகுதியில் உள்ள கோழிப் பண்ணை ஒன்றில் பழுதடைந்த பாவனைக்குதவாத கோழி இறைச்சி விற்பனைக்கு இருப்பதை அறிந்த பொது சுகாதாரப் பரிசோதகர் அந்த இடத்துக்குச் சென்று 118 கிலோ இறைச்சியைக் கைப்பற்றி அழித்துள்ளார்.

இந்தப் பண்ணை உரிமையாளர் கொழும்பில் இருந்து கோழிகளைக் கொள்வனவு செய்து வருபவர். அங்கிருந்து கோழிகளைக் கொண்டு வரும்போது சிலகோழிகள் இறந்து விடுவதாகவும் கூறப்பட்டது.

அவற்றை உரித்து, குளிர்சாதனப் பெட்டியில் வைத்து விற்பனை செய்து வந்ததாகவும் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

குளிர்சாதனப் பெட்டியில் பாவனைக்குதவாத மீன் வகைகளும் வைக்கப்பட்டிருந்தமை இதன்போது கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது.

பண்ணை உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார். (ம)

## சடலத்தை இனம்காணுமாறு கோரிக்கை

கடந்த 15 ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையின் 24 ஆம் இலக்க விடுதியில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்த சத்தியன் என்பவரது சடலத்தை மூன்று நாள்களுக்குள் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அவரது உறவினர்களைக் கேட்டுள்ளார்.

சடலம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. (ம)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

''என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்''

மண்ணக வாழ்வில்
05 . 11 . 1939

விண்ணக வாழ்வில்
21 . 06 . 2011



திருமதி
### சீமான்பிள்ளை மேரி லூர்த்தம்மா

அன்புக்கு அணிகலனாய் பாசத்தின் இருப்பிடமாய்
பொறுமையின் பொக்கிஷமாய் சுமை தாங்கியாய் வாழ்ந்து
எம் இதயத்தில் என்றும் அணையாத தீபமாய்
சுடர் வீசும் எங்கள் அம்மாவே!
இறைவன் உம்மைப் பிரித்தாலும் மறவாது உங்கள் நினைவுகள்
சித்திரம் போல் சிரித்து நின்ற உங்கள் அழகை சிலை வடிவில்
பார்த்திட நாம் என்ன பாவம் செய்தோம்? அம்மா
திங்கள் ஒன்று கடந்தாலும் உங்கள் அன்பு முகத்தை
எங்களால் மறக்க முடியவில்லை - அம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

4 ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

பாசத்துடன் நினைவு கூரும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி/5856) (45)

## VOLUNTEER SECTOR JOBS & INTERNSHIP OPPORTUNITIES

(Local & Foreign)

உள்நாட்டு வெளிநாட்டு தொண்டர் நிறுவன சேவை வாய்ப்புகள் மற்றும் தொழில் வாய்ப்புகள் பற்றிய இலவச தகவல்களுக்கும் செய்தித்தாளுக்கும் எழுதுங்கள்.

Programme Coordinator VP
Mecwin Resource,
P.O.Box 206,
Kandy. (5783)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்:
10.01.1978

அமரர்
### எஸ்.சைலேந்திரன்

திதி:21.07.2011

அழகாக சிரித்து
அன்பாக பேசிப் பழகிய உன்
நினைவுகள் என்றென்றும்
எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது
சைலேந்திரா என்னும் அன்பு
பெயர் எங்கள் மனதில்
என்றும் நிலைத்திருக்கும்

எமது அன்புச் செல்வத்தின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விண்ணில்:
17.07.2010

பிரிவின் துயரில்:
சந்திரலிங்கம் குடும்பத்தினர்
38,கோணாவளை லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் வேலுப்பிள்ளை குமாரசாமி

திதி:சஷ்டி (21.07.2011)



தோற்றம்
1936.04.01

மறைவு
2004.07.07

வையக வாழ்விலே வழிகாட்டிய தந்தையே!
மெய்யது நீங்கி ஏழாண்டு மாகிலும்
பொய்யிலா நின் புகழ் நின்டு நிலைத்திட
கையது கூப்பிச் சிவன் தாழ் பணிகின்றோம்

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர்.

கைதடி மேற்கு,
கைதடி. (சி/1874)

## 8ஆம் ஆண்டில் தொட்டிடும் நினைவுகள்

மலையாகக் காக்குதம்மா!

மண்ணில்
04 . 09 . 1943



விண்ணில்
21 . 07 . 2003

### திருமதி மகேஸ்வரி குஞ்சிதபாதம்

திதி: அபரபக்க ஸப்தமி (22.07.2011)

அலைபாயும் உள்ளத்தில்
நிலைகுலையா உன்னெண்ணம்
சிலையாக நின்றெம்மை
மலையாகக் காக்குதம்மா!

பிரிவுத் துயரால் பெருநோயுறும்:
துணைவன், பிள்ளைகள், மருகன், மருகிகள்,
பேரர்கள்: விதுரன், திவ்யன்,
நித்யன், சௌமியன்.

சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (சி/1861)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மண்ணில் மீண்டும் வளமோடு வாழ்வதற்காக பேராவலுடன் காத்திருக்கும் வளலாய் பகுதி மக்கள்

நீண்டகாலத் தமிழ்ப் பாரம்பரியமும் இந்துப்பண்பாடும் கொண்டு கல்வி கேள்வியால் மூத்த உழைப்பால் உயர்ந்தவர்கள் வளலாய் வாழ் மக்கள். கடந்த 27 வருடங்களுக்கு மேலாக இடம் பெயர்ந்த நிலையில் தமது சொந்தப் பிரதேசத்தில் எப்போது குடியேறுவோம், மீண்டும் வளமோடு வாழ்வோம் என்ற திடமான நம்பிக்கையுடன் கூடிய ஏக்கப்பெரு மூச்சுடன் மீள்குடியேற்றத்தை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கின்றனர்.

வடக்கின் வசந்தம் வந்தது, புது வீதிகள் பிறந்தன. பல தேர்தல்கள் முடிந்து உள்ளூராட்சித் தேர்தலும் வந்தது. பல வீதிகள் திறந்தன. எங்களின் வாழ்வில் ஏன் மாறுதல் இல்லை? எப்போது வீசும் புது வசந்தம்? என்ற ஏக்கச் சூறாவளி எண்ணக் கனவுகளுடன் மக்கள் உள்ளனர்.

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவின் வடமேற்கு எல்லையில் அமைந்துள்ள வளலாய் கிராமத்தின் வளமான பெரும்பகுதி பாதுகாப்பு அரண்கள், தடுப்பு அரண்கள், முட்கம்பிச் சுருள்களுக்கு உள்ளே முடங்கிக் கிடக்கின்றது.

கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பச்சைப் பசேல் என ஓங்கி உயர்ந்த மரங்கள் அதன் மண் வளத்தைப் புலப்படுவதைப் பார்த்து ஏங்குகின்றனர் வளலாய்ப் பகுதி மக்கள். இன்று 25 வயதை நிறைவு செய்து ஏங்கி நிற்கும் இளைஞர்களுக்கு தமது சொந்த இடத்தின் நிழல் கூடப் படவில்லை.

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ளடங்கும் வளலாய்



கிராமத்தின் வளலாய் மேற்கும் வளலாய் வடக்கும் கிராம அலுவலர் பிரிவு ஜே/284, ஜே/283 என்ற இரண்டு பிரிவுகளிலும் உள்ளடங்குகின்றன. ஜே/284 கிராம அலுவலர்பிரிவு வளலாய் கிராமத்தை முழுமையாகவும், ஜே/283 கிராம அலுவலர் பிரிவு வளலாய் வடக்கையும் இடைக்காடு கிராமத்தையும் உள்ளடக்கியதாக உள்ளது.

தற்போதைய உள்ளூராட்சி அமைப்பான பிரதேச சபைக்கு முந்திய உள்ளூராட்சி அமைப்பாகிய அச்சுவேலி கிராம சபையின் 6 ஆம் 7 ஆம் வட்டாரங்களை உள்ளடக்கியது. நீண்டு பரந்த நில வளமும், நீர் வளமும் கொண்டது. செம்மண், மணல்மண், இருவாட்டி மண், கிரவல்மண், வண்டல்நிறை குள மண் எனப் பல்வேறு வகையான மண் வளம் கொண்டது.நெய்தலும் மருதமும் இணைந்த வளம்கொழிக்கும் கிராமம்.

வளலாயின் மேற்கு எல்லை வலி. வடக்கு (தெல்லிப்பழை) பிரதேச செயலர் பிரிவு. கிழக்கு எல்லை இடைக்காடு கிராமமும் யாழ்.குடாக்கடல் நீர் ஏரியும். வளலாயின் வடக்கு எல்லை வடகடல் என மக்களால் அழைக்கப்படும் பாக்குநீரிணை. தெற்கு எல்லை பத்தமேனி, தம்பாலை கிராமங்கள்.

வளலாய் கிராமத்தின் இன்றைய நிலைக்கும், கடந்த 27 வருட பாதிப்புக்களுக்கும் காரணமாக இருப்பது கிராமத்தின் மேற்கு எல்லையில் பாதுகாப்புத் தரப்பினரின் பலாலி படைத்தளமும், பலாலி விமான நிலையமும் அமைந்திருப்பது தான். அத்துடன் வடக்கு எல்லையில் வட கடலான பாக்குநீரிணையும் அமைந்திருப்பதும் இதற்குக் காரணம். வளலாய் கிராமத்தின் வடக்குப் பகுதியை பலாலி வீதியும் தெற்கு எல்லையை ஊடறுத்து விமான நிலைய வீதியும் செல்கின்றன. மனிதனின் வாழ்வியலில் கிராமங்களின் அமர்வு எத்தனை தாக் கத்தை ஏற்படுத்துமோ அதே போன்று வளலாய் கிராமத்தின் அமைவிடம் அங்கு பரம்பரை பரம்பரையாக வளமோடு வாழ்ந்து வந்த பல நூற்றுக் கணக்கான குடும்பங்களின் நல்வாழ்வில் துன்ப துயரங்களை உண்டாக்கி நிலை தளம்ப வைத்து விட்டது.

பாதுகாப்பு அரணுக்கு வெளியே உள்ள வளலாய் கிராமத்தின் சமகால அமைப்பைப் பார்ப்போர் கண்ணீர்

**ஞான ஆதவன்**

விட வேண்டும். நிரந்தரமான கல் வீடுகள் எதனையும் காணமுடியாது. நூற்றுக்கணக்கான சேதமடைந்த வீடுகளின் அடித்தளத்தை மட்டும் கண்டுகொள்ள முடியும். வீடுகளின் எச்சமிச்சங்கள் கற்குவியலாகக் காட்சியளிக்கின்றன. வீடுகளின் சிதைவடைந்த சுவர்களைக் காணலாம். கூரையைக் காணமுடியாது.

வளலாய் கிராமத்தின் கல்விக்கு வளம்சேர்ந்த நூற்றாண்டுக் கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட வளலாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலையின் அடித்தளம் கூட சிதைவடைந்த நிலையில் காணப்படுகின்றது. இருக்கின்ற ஒரு சில குடிசை வீடுகளும் தப்பிப் பிழைத்த கல் வீடுகளும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நிரந்தர வீடுகளும் பெரும்பகுதி வேலி மறைப்புக்கள் இன்றி திறந்தவெளிக் குடியிருப்பாகவே உள்ளன.

(தொடரும்)

## மரண அறிவித்தல்

### தம்பு இராசையா



மாதகலைப் பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரி வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு இராசையா நேற்று (20.07.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு-மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் மகேஸ்வரி (மலேசியா) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற துரைச்சாமி (சேனாதி), நகுலேஸ்வரன் (சிறி), தவனேஸ்வரன் (அப்பு - சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தெய்வேந்திரத்தின் சிறிய தகப்பனும் ஜீவறஞ்சினி (லண்டன்), ஜெயறஞ்சினி(ஜேர்மனி), விஜயறஞ்சினி, தீபறஞ்சினி, சிவறஞ்சினி, சுஜந்தா, கஜந்தா, விஜிந்தன், தனுசா (சுவிஸ்), தனுசாந் (சுவிஸ்), தாருஜன் (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் நடராசா, அரியரத்தினம் (இந்தியா), கனகராசா, இராசதுரை (நோர்வே), வில்வராசா (ஜேர்மனி), இராசலட்சுமி (ஜேர்மனி), அழகேஸ்வரி, கனகாம்பிகை, சயந்தி (சுவிஸ்), புஸ்பராணி, செல்வநாயகி (இந்தியா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2011) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

தகவல்:
இ.நகுலேஸ்வரன்
(சிறி - மகன்)

(சி/1878) (20-25)

**வேலை ஆள் தேவை**

266/B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள கோல்டன் இராசையா மோட்டோர்ஸ் எனும் கடைக்கு பெண் வேலையாள்கள் தேவை.
(6036) (45) தொடர்பு: 0776141928

**காணி குத்தகைக்குத் தேவை**

கிளிநொச்சி, இரணைமடு பிரதேசத்தை அண்டிய பகுதியில் மேட்டு நிலமாகவுள்ள (மரக்கறித்தோட்டம் செய்யக் கூடியதாக) 10 ஏக்கர் காணி குத்தகைக்குத் தேவை.

தொடர்பு: 077 2753574

(6039) (45)

விஸ்வப் பிரம்ம ஸ்ரீ

**ஆண்டுகள் 15 ஆயினும் மறவோம்**

**அமரர் விஸ்வலிங்கம் கணேசமூர்த்தி**
(சிற்பாசாரி)



திதி: தேய்பிறை ஷஷ்டி-ஆடித்திங்கள்

நனவாய் 28.07.1945
கனவாய் 05.07.1996

திருவாய் நிறைவாய் எம் உயிராய் கலந்து
பெருவாழ்வெனும் தான் தரும் மாமணியே!
வருவாய் ஒரு நாள் என நீள் விழிகள்-சுடர்
திரியாய் எரியத் தொடர் நின் பணிகள்!!

"மாலிகா இல்லம்"
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

(சி/1879)

மனைவி, பிள்ளைகள்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் நிறைவடைந்து இரண்டு ஆண்டுகள்; சமாதானத்தை ஏற்படுத்துவதில் அசிரத்தை

## சர்வதேச நெருக்கடிக் குழு தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 21

இலங்கையில் யதார்த்தமான சமாதானம் இன்னமும் நிலைநாட்டப்படவில்லை . யுத்தம் நிறைவடைந்து இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் அரசு உண்மையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முனைப்புக்களில் ஈடுபடவில்லை என்று சர்வதேச நெருக்கடிக் குழு குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளுக்குதற்போதைய அரசு உரிய முன்னுரிமை அளிக்கத் தவறியுள்ளது. நல்லிணக்கத்தை நோக்கிப் பயணம் செய்வதற்கு மாறாக அரசு ஒரு தலைப்பட்சமான தீர்மானங்களை எடுத்து செயற்பட்டு வருகின்றது.

இலங்கையில், குடும்ப அரசியல் அதிகாரத்துவம் மேலோங்கி நிற்பதாகவும், இந்தியா, ஜப்பான், அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியன இந்த எதேச்சாதிகாரப் போக்குக்கு கடுமையான எதிர்ப்பை வெளியிட வேண்டும் .

யுத்தம் நிறைவடைந்தது முதல் தாக்குதல் பீதி இல்லாதொழிக்கப்பட்டுள்ள போதிலும், இனங்களுக்கு இடையிலான தப்பான புரிந்துணர்வு இன்னமும் நீடித்து வருகின்றது. அவசரகாலச் சட்டமும், பயங்கரவாதத் தடைச் சட்டமும் தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. வடக்கில் இன்னமும் சிவில் நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்படவில்லை.

இலங்கை அரசின் மூர்க்கத்தனம் மற்றும் கருத்து மாறுபடுபவர்களை சகித்துக்கொள்ளாத தன்மை காரணமாக அங்கு மீண்டும் மோதல் எழக்கூடிய அபாயம் இருக்கிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசு, வெற்றிக் களிப்புடன் மமதை மனோபாவத்துடனேயே இருக்கிறது.

சிறுபான்மை மக்கள் அவர்களின் எதிர்காலம் பற்றிய தீர்மானங்களின்போது ஒதுக்கப்படுகின்றனர். தேர்தல்களில் மோசடிகள் செய்து, சிவில் சமூகத்தினர் வாய்கள் கட்டப்பட்டு மௌனிகளாக்கப்பட்டுள்ளனர்.

இறுதிக் கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் பக்கச் சார்பற்ற சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டியது அவசியமானது- என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இராணுவ ஆட்சி...

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆட்சிப் போக்கு மாற்றத்தை இலங்கையின் உள்நாட்டு விவகாரமாக இந்தியா பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்பது தான் கொழும்பில் உள்ள இந்தியக தூதரக அதிகாரிகளின் நிலைப்பாடு.

விடுதலைப் புலிகள் இயக்கம், இலங்கையில் தனி ஈழம் அமைத்தால் அது இந்தியாவின் தமிழகத்திலும் அது போன்ற சிந்தனையைத் தூண்டும் விபரீத விளைவுகளை உருவாக்கி விடும் என புதுடில்லி அச்சப்பட்டது உண்மை என்றால், இலங்கையின் அதிகார வர்க்கம் ராணுவ ஆட்சி பீடமாக மாறுவதும் கூட அது போன்ற அச்சத்தைப் புதுடில்லிக்கு உருவாக்கியிருக்க வேண்டும் என அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதுவும், இந்திய நடப்புறவு நிலைப்பாட்டைப் புறமொதுக்கி, வெளிப்படையாகவே சீன, ரஷ்ய ஆதரவு அணி நிலைப்பாட்டை நோக்கித் தீவிரமாக நகர்ந்து கொண்டிருக்கும் இலங்கை அதிகார பீடம், இராணுவ ஆட்சி முறைமையை நோக்கித் தடம் மாறுவதும் இந்தியாவுக்கு மிக மிக ஆபத்தான விஷயம்.

இந்த விபரீதத்தைப் புரிந்துகொள்ளாமல்- அல்லது உள்வாங்காமல்- புதுடில்லி மௌனமாக நடந்துகொள்வது ஏன் என்று தெரியாமல் குழம்பிப் போயிருக்கின்றார்கள் இலங்கை விவகாரங்களைக் கையாளும் புதுடில்லியின் மூத்த அதிகாரிகளும், ராஜதந்திரிகளும்.

இது மிகவும் ஆபத்தான நிலைமை. இலங்கை அரச நிர்வாகம் இராணுவ ஆட்சிப் போக்குக்கு மாறுவது இந்தியாவின் பூகோள நலன்களுக்கும் இப்பிராந்தியத்தின் மீதான அதன் வல்லாதிக்க நிலைமைக்கும் பலத்த சவால்களை ஏற்படுத்தும்.

நாட்டின் ஜனாதிபதியே முப்படைகளின் தளபதி என்ற இலங்கை அரசமைப்பின் ஏற்பாட்டை வகையாகப் பயன்படுத்திக் கொண்டு, ஜனநாயக ஆட்சி முகமூடியை அணிந்தபடி, இராணுவ சர்வாதிகாரத்தை நோக்கி மஹிந்த ராஜபக்ஷ பயணித்துக் கொண்டிருக்கிறார்.

பாரதத்தின் தென்கோடி எல்லையில் சீனச் சார்பு இராணுவ ஆட்சி மலர்வது இந்தியாவுக்கு பலத்த சவாலாகப் போகிறது. இன்று துளிர்விட்டு மொட்டாக மாற முற்படும் இராணுவ ஆட்சி முறைமை நாளை முழு அளவில் சீன ஆதரவு பெற்ற இராணுவ சர்வாதிகாரமாக மலர்வதற்கு முன்னர் இந்தியா ஏதும் செய்தாக வேண்டும்.

ஆனால், இன்று இந்திய மத்திய அரசியலில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளில் அதிக கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கும் பாரத ஆட்சியாளர்கள், அயலுறவுக் கொள்கையில் அசிரத்தையாக நடந்துகொண்டு கோட்டை விடுவது மோசமான விளைவுகளை இந்தியாவுக்கு ஏற்படுத்திவிடும் என்று எச்சரிக்கிறார் இந்தியாவின் ராஜதந்திரி ஒருவர்.

(நன்றி: சூரியக்கதிர்)

# கடத்தப்பட்ட இலங்கையர் குறித்த அறிக்கைக்கு காத்திருப்பு

கொழும்பு, ஜூலை 21

சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடந்த ஞாயிறன்று கடத்தப்பட்ட ஐக்கிய அரபு எமிரேட்ஸின் எண்ணெய்தாங்கிக் கப்பலில் இருந்த இலங்கையர் தொடர்பில் கென்யாவின் நைரோபியிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் அறிக்கைக்காகக் காத்திருப்பதாக வெளிவிவகார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் எண்ணெய் தாங்கிக் கப்பலொன்று 16 பணியாளர்களுடன் சோமாலியக் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் இலங்கையர் ஒருவர், 5 இந்தியர்கள், 3 பங்களாதேஷ் நாட்டவர்கள், 4 சோமாலியர்கள், கென்யா, சூடான், மியன்மார் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலா ஒருவர் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.


**Computer Express**
Institute of Information Technology

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in computer science. | 4 Months | 1000/= |
| * Dip. in web page Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Graphic Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Desk top publishing. | 4 Months | 1000/= |
| * Dip. in Hardware Engineering. | 3 Months | 1000/= |
| * Dip. in Auto CAD. | 3 Months | 1000/= |
| * Dip. in MicroSoft Office. | 3 Months | 1000/= |
| * Dip. in Acc.Package.(MYOB,Accpac,Q Book) | 3 Months | 1000/= |
| * Dip.in programming | 3 Months | 1000/= |
| * Honours Dip. in computer science. | 5 Months | 1000/= |

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

பதிவுகளுக்கு முந்துங்கள்

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Monday to Friday 9Am to 3.30Pm
Course Fee 1000/-

Batch I - 22.07.2011 9Am or 3pm Batch II - 23.07.2011 9Am or 3pm
Batch III-24.07.2011 9Am or 3pm Batch IV - 27.07.2011 9Am or 3pm

Tally புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444


## உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் உள்ள கீழ்வரும் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| பதவி | :- | விற்பனை உதவியாளர் |
| குறியீட்டு இல | :- | 308/15 |
| சம்பளத்திட்டம் | :- | 9450-75 X 10 - 80 X 10 - 11000 |

தகைமைகள்

கூட்டுறவுப் பணியாளரின் 17 ஆவது சம்பளத்திட்டத்திலமைந்த விற்பனை உதவியாளர் பதவியில் பெற்றுள்ள 5 வருட அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் சாதாரணதரம் சித்தி/ க.பொ.த.சாதாரண தரத்தில் எண்கணிதம்/ கணிதம்/ வர்த்தக கணிதம், சிங்களம்/ தமிழ்

பொதுவானது:

1. வயதெல்லை 18-45 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
2. கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது என்பதுடன் அவர்கள் தமது விண்ணப்பத்தைத் தாம் பணிபுரியும் சங்கத்தினூடாகவே அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தைச் சங்கத்தில் பெற்றுப் பூர்த்தி செய்யப்பட்ட படிவத்துடன் சான்றிதழ்களின் நிழல்பிரதிகளையும் இணைத்து பொதுமுகாமையாளர், உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், உடுப்பிட்டி என்ற முகவரிக்கு 06.08.2011 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ, பதிவுத் தபாலிலோ அனுப்பி உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்,
உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்

19.07.2011 (சி/1881)

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் உள்ள அச்சகம் ஒன்றுக்குப் புத்தம் கட்டுநர் (Binding) வேலைக்கு ஆள் தேவை. அச்சக வேலைக்கு முன் அனுப வம் உள்ளவர் விரும்பத்தக்கது. பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு கொள்வதற்கு:
0771035864


வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் தரும்
சோ- கூ-றே குபேர மணிமேக்கர்ஸ்

கடன் தொல்லை, கல்வியில் முன்னேற்றமின்மை, வேலையின்மையும் பணக் கஷ்டமும், திருமணத் தடை, கொடிய நோய்களின் அவஸ்தை போன்ற வாழ்வின் மிக முக்கிய 5 பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு - வாகனம், மனை, கடை மற்றும் சகல வியாபார ஸ்தாபனங்களிலும் வைக்க உன்னத பலன் கிடைக்கும்.

விலை ரூபா 5100/= மட்டும்
(இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டது)


## மரண அறிவித்தல்



### இராசரத்தினம் செல்வநாயகி

காரைநகர், வலந்தலை பெரியமணலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் செல்வநாயகி கடந்த (18.07.2011) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் சுரேந்திரன் (சுரேஸ்), சுதன், நளனி ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.07.2011) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வலந்தலை, பெரிய மணல்,
காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

ஆதார வைத்தியசாலை தெல்லிப்பழையில் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தராகக் கடமை புரியும்
கலாவதி சிவகுமாரின் தந்தை

### முருகு செல்லத்துரை

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வடமாகாண அரசாங்க குடும்ப சுகாதார
சேவை உத்தியோகத்தர் சங்க நிர்வாகக் குழு.

## கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 56 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கைதடி மின்னொளி விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியிலான "செற்றப்" முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றை விரைவில் நடத்த இருக்கின்றது. இப்போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் கழகங்கள் தங்கள் பெயர் விவரங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னதாகக் கைதடி சந்தியில் இருக்கின்ற செல்வா தையல் நிலையத்திலோ அன்றேல் 0779233184 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

செயலாளர்,
மின்னொளி விளையாட்டுக் கழகம், கைதடி தெற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் குறித்து ஐ.நா. வலியுறுத்தியும் இந்திய அரசு மௌனம்

## இந்தியக் கம்யூனிஸ்ட் சீற்றம்

ஈரோடு, ஜூலை 21

இலங்கை அரசு செய்துள்ள போர்க் குற்றங்களை விவாதிக்க வேண்டும் என்று ஐ.நா. தொடர்ந்து வலியுறுத் தியும், இந்திய அரசு வாய் திறக்கவில்லை என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் தா.பாண்டியன் தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் செய்தியாளர்களிடம் அவர் மேலும் கூறுகையில்:

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு கூட்டம், சென்னையில் எதிர்வரும் 23 முதல் 26 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. அகில இந்தியப் பொதுச்செயலர் பரதன், சுதாகர் ரெட்டி போன்றோர் பங்கேற்கின்றனர். அகில இந்திய மாநாடு பீஹார் மாநிலம் பாட்னாவில் 2012 ஆம் ஆண்டு மார்ச் 21ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நடக்கிறது. இந்த மாநாட்டில் கட்சியின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து விவாதிக்க உள்ளோம்.

இந்தியாவில் மக்களை கலங்க வைக்கும் பிரச்சினையாக விலை உயர்வு உள்ளது. அதுபோல கணக்கில் வராத கறுப்புப் பணமும் அதிகம் உள்ளது. மத்திய அரசு முடிவுகளை உரிய காலத்தில் எடுக்காமல் இழுத்தடிக்கிறது.

இலங்கை அரசு செய்துள்ள போர்குற்றங்களைவிவாதிக்கவேண்டும் என்று ஐ.நா. தொடர்ந்து வலியுறுத் தியும், இந்திய அரசு வாய்திறக் கவில்லை. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு, போர்க்குற்றங்களை விசாரிக்க வேண்டுமென வலியுறுத்துகிறது.

கடந்த 2009 இல் இலங்கையில் போர் முடிந்தும் மறுவாழ்வு முகாம்களை கலைக்காமல் சித்



திரவதை நீடிக்கிறது. இந்த முகாம்களைக் கலைத்து, அவரவர் ஊருக்குச் செல்ல அரசு முயற்சி எடுக்க வேண்டும்.

விலைவாசி உயர்வு எமது நாட்டின் சந்தை பொருளாதார விதிப்படி நடக்கி றது. மத்திய அரசு விதிமுறைகளை பின்பற்றாததால் பெற்றோல், டீசல், காஸ் விலை உயர்கிறது. - இவ்வாறு அவர் தெரிவித்தார். (வ)

# மும்பைத் தாக்குதல் நிகழ்ந்த இடத்தில் ரூ.25 கோடி மதிப்பிலான வைரங்கள்

மும்பை, ஜூலை 21

மும்பையில் குண்டு வெடிப்பு நிகழ்ந்த ஓபரா ஹவுஸில் இடிபாடுகளைச் சுத்தப்படுத்தும் போது ரூ.25 கோடி மதிப்பிலான 65 வைரங்களை மீட்புக் குழுவினர் கைப்பற்றினர்.


இது தொடர்பாக மும்பை வர்த்தக சங்கத்தின் தலைவர் சஞ்சய் ஷா கூறுகையில்:

குண்டுவெடிப்பு இடம் பெற்ற இடத்தை சுத்தப்படுத்தும் பணியின்போது 65 வைரங்களை மீட்புக் குழுவினர் கைப்பற்றினர். பின்னர் அவை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன. இந்த வைரங்களின் மதிப்பு 25 கோடி ரூபா இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

இந்த வைரங்கள் அனைத்தும் வியாபாரத்துக்காக இங்கு வந்த குஜராத்தைச் சேர்ந்த வர்த்தகர்களுக்குச் சொந்தமானதாக இருக்கலாம் என்று நம்புகிறோம். சூரத், பாவ்நகரைச் சேர்ந்த சிறு வியாபாரிகள் வைரங்களைக் கொண்டு வந்து மும்பையில் விற்பனை செய்வர்.

மேலும் இடிபாடுகளுக்குள் வைரங்கள் சிதறிக்கிடக்கக் கூடும் என்றும் அவர் தெரிவித்தார். (வ)

## உறவு பலப்படுமா?....



இந்தியாவுக்குப் பயணம் செய்த அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் பிரதமர் மன்மோகன் சிங்குடன் ஆலோசனை நடத்துகிறார். (வ)

# தீவிரவாதத்துக்கு எதிரான போரில் இந்தியாவுக்கு அமெரிக்கா துணை


## ஹிலாரி உறுதிமொழி

டில்லி, ஜூலை 21

தீவிரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்கா எப்போதும் இந்தியாவுக்கு உறுதுணையாக இருக்கும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் உறுதிமொழி வழங்கியுள்ளார்.

மேலும் உள்நாட்டு பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அவர் கூறினார்.

3 நாள் சுற்றுப்பயணமாக நேற்று முன்தினம் இந்தியாவுக்குச் சென்ற ஹிலாரி கிளிண்டன் நேற்றுக் காலை டில்லி, ஐதராபாத் இல்லத்தில் ஹிலாரி இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா



பேச்சு நடத்தினார். மேற்படி இடம்பெற்ற பேச்சின் போது ஹிலாரி கிளிண்டன் இவ்வாறு தெரிவித்தார். (வ)

# சாயிபாபா மந்திரில் 34 கிலோ தங்கம்

புட்டபர்த்தி, ஜூலை 21

திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோயிலைத் தொடர்ந்து புட்டபர்த்தியில் உள்ள சாயிபாபாவின் யஜுர் மந்திரில் கோடிக் கணக்கான ரூபா மதிப்பில் தங்க நகைகள் உள்ளமை தெரிய வந்துள்ளது.

புட்டபர்த்தியில் உள்ள சாயிபாபாவின் தனி அறையில் உள்ள சொத்துக்களை மதிப்பிட்டு வரும் அதிகாரிகள் அங்கு 340 கிலோ வெள்ளி, ரூ 5.8 கோடி மதிப்பிலான தங்கம் மற்றும் ரூ 2 கோடி ரொக்கம் ஆகியவை இருந்ததாகக் கணக்கிட்டுள்ளனர். கணக்கிடும் பணி இன்னும் முடிவடைய வில்லை.8 அறைகளில் சோதனையிடப்பட்டு கண்டுபிடிக்கப்பட்ட இந்த பொருள்கள் வருமான வரித்துறை உத்தரவின்படி வங்கி ஒன்றில் கணக்கிலிடப்பட்டுள்ளது.

தங்கத்தை மதிப்பிடும் பணி இன்னும் முடியவில்லை. இது வரை 34.438 கிலோ தங்கம் அங்கிருந்து பெறப்பட்டுள்ளது. அவை பல்வேறு பொதிகளில் பல்வேறு வடிவங்களில் இருந்தன என்று அனந்தப்பூர் மாவட்ட ஆட்சியாளர் வி.குருதாஸ் தெரிவித்தார். (வ)

# இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினை; தீர்வு நோக்கிய நிலையில் பேச்சுக்கள்

டில்லி, ஜூலை 21

இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக நடைமுறைக்கு சாத்தியமான திட்டங்களை செயற்படுத்த இருநாடுகளும் பேச்சு நடத்தி வருவதாக இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவ் தெரிவித்துள்ளார்.

மீன்வளம் குறித்த டில்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு அவர் மேலும் பேசுகையில்:

இருநாட்டு மீனவர்களும் அமைதியான முறையில் தொழில் ஈடுபடக்கூடிய வகையில் நடைமுறைக்கு சாத்தியமான தீர்வுத் திட்டத்தை முன்னெடுப்பதற்காகஇருநாடுகளும் அனைத்து மட்டத்திலும் பேச்சுக்களில் ஈடுபட்டுவருகிறது. அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக இரு நாட்டு மீனவர்களும் முறைப்பாடுகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் இலங்கைக்குப் பயணம் செய்தபோது மீனவர்கள் பிரச்சினை தொடர்பாகக் அந்த நாட்டு அரசின் கவனத்துக்குக் கொண்டு சென்றேன். அப்போது இந்திய மீனவர்களின் நலன்களை உறுதிப்படுத்தும் வகையில் விசேட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை அரசு உறுதியளித்ததாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(வ)

# ஆந்திராவில் அதிகளவு யுரேனியம்

ரவத்பட்டா, ஜூலை 21

அணுமின் தயாரிப்பதற்கு தேவையான யுரேனியம் ஆந்திராவில் மிக அதிகளவில் உள்ளது என்று அணுசக்தி குழுத் தலைவர் ஸ்ரீகுமார் பானர்ஜி தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான், ரவத்பட்டாவில் அணு உலை அமைக்கும் பணியை ஆரம்பித்து வைத்து அவர் பேசுகையில்:

இங்கு 1.5 லட்சம் டன் யுரேனியம் இருக்கலாம் என அணு விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். ஆந்திராவின் தும்பலப் பள்ளி சுரங்கங்களில் யுரேனியம் அதிகளவில் உள்ளதாகவும், உலகிலேயே அதிகளவிலான யுரேனியம் இங்கு கிடைக்கக் கூடும் எனவும் தெரிவித்துள்ளார். (வ)

# பா.ஜ.க. மத்தியில் ஆட்சிக்கு வந்தால் தனித் தெலுங்கானா ஏற்படுத்துவோம்

## கட்காரி தகவல்

லண்டன், ஜூலை 21

அடுத்த பொதுத்தேர்தலில் பா.ஜனதாக் கட்சி மத்தியில் ஆட்சிக்கு வந்தால், தனித் தெலுங்கானா மாநிலம் ஏற்படுத்துவோம் - என்று பா.ஜ. கட்சியின் அகில இந்தியத் தலைவர் நிதின் கட்காரி தெரிவித்துள்ளார்.

6 நாள்கள் சுற்றுப்பயணமாக பிரிட்டனுக்குச் சென்றுள்ள அவர், லண்டன் நகரில், அங்குள்ள தெலுங்கானா வளர்ச்சி சங்கத்தினர் மத்தியில் பேசுகையில்:

பா.ஜ.கட்சி எப்போதும் சிறு மாநிலங்கள் உருவாகுவதற்கு ஆதரவு தெரிவித்து வருகிறது. மத்தியில் ஆட்சிக்கு வந்தால் தனித் தெலுங்கானா மாநிலம் அமைப்போம் என்று முதன் முதலாக தீர்மானம் போட்ட ஒரே தேசியக் கட்சியும் பா.ஜ.க. தான். அடுத்த பொதுத்தேர்தலில் பா.ஜனதாக் கட்சி மத்தியில் ஆட்சிக்கு வந்தால், தனித் தெலுங்கானா மாநிலம் ஏற்படுத்துவோம் என்று உறுதி அளிக்கிறேன் - என்று கூறினார். (வ)

# மர்மமான பரிசுப் பொதிகளை வாங்க வேண்டாம் முக்கியஸ்தர்களுக்கு மத்திய அரசு எச்சரிக்கை

டில்லி, ஜூலை.21

தபால்களில் வரும் பரிசுப் பொதிகளையோ, அடையாளம் தெரியாத நபர்கள் கொடுக்கும் பரிசுப் பொதிகளையோ தகுந்த முறையில் பரிசோதிக்காமல் முக்கியஸ்தர்களை வாங்க வேண்டாம் என்று மத்திய அரசு எச்சரித்துள்ளது. இது தொடர்பாக முக்கியஸ்தர்களை விழிப்படையச் செய்யுமாறு மாநில அரசுகளுக்கும் அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேற்படி பரிசுப் பொதிகளில் வெடிகுண்டுகள் இருக்கக் கூடும் என்று மத்திய அரசு எச்சரித்துள்ளது.

அரசில்வாதிகள் சிலர் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களுக்குக் கொடுக்கப்படும் பொதிகளில் வெடிகுண்டுகள் இருப்பதற்கான சாத்தியக்கூறு உள்ளது என்று புலனாய்வுத் தகவல்கள் தெரிவிப்பதையடுத்து மத்திய அரசு இவ்வாறு மாநிலங்களை உஷார்படுத்தியுள்ளது.


மேலும் முறையாகப் பரிசோதிக்காமல் பொதுமக்கள் எவரும் பொதிகளைப் பிரிக்காமல் இருப்பதை உறுதிப் படுத்துமாறு மாநிலங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுதவிர அனைத்துப் பொதிகளையும் வெடிகுண்டு கண்டுபிடிக்கும் கருவி மூலம் சோதனையிடுமாறும் மாநிலங்களுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

கடந்த காலங்களில் உலகின் பல்வேறு இடங்களில் பொதிகளில் இருந்த குண்டுகளும், கடிதங்கள் மூலம் வைக்கப்பட்ட குண்டுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதைச் செய்தாவது வென்றுவிட இலங்கை அரசு துடிப்பு



## முறியடியுங்கள் எனக் கேட்கிறார் சம்பந்தன்

''நேர்மையற்ற முறையிலாவது இந்தத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்று அரசு நினைப்பதாகத் தெரிகிறது. அதனை முறியடித்து 'வீடு' சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டு தெளிவான தீர்ப்பை வழங்குங்கள்'' தமிழ் மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

திருகோணமலையில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சந்திப்பு நேற்று மாலை அவரது இல்லத்தில் நடைபெற்றபோது அதில் பேசுகையில் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரம் முக்கியமான மூன்று பிரச்சினைகளை முன்வைத்து முன்னெடுக்கப்படுகின்றது.

(1) வடக்கு-கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்த அனைத்துத் தமிழ்க் குடும்பங்களும் அவர்கள் முன்னர் குடியிருந்த காணிகளில் மீள்குடியமர்த்தப்பட வேண்டும்.

முறையான வீடமைப்பு வசதிகளுடனும் போதுமான வாழ்வாதார வாய்ப்புக்களுடனும் அவர்கள் மீள்குடியமர்த்தப்பட வேண்டும்.

அவர்களின் சமூக, பொருளாதார மற்றும் கலாசார தேவைகளைப் பூர்த்தி செய்யப்படவேண்டும். அவர்கள் பாதுகாப்புடனும் கௌரவத்துடனும் இயல்பான வாழ்வுக்குத் திரும்பி வாழ்வதை உறுதிப்படுத்தும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தும் முறையில் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

போர் முடிந்து இரண்டு வருடங்கள் கழிந்த பின்னரும் அரசின் இது தொடர்பான செயல்பாடுகள் ஏமாற்றம் தருவனவாகவே அமைந்துள்ளன. இடம் பெயர்ந்த மக்களின் வாழ்க்கையை அர்த்த முள்ள விதத்தில் மீளக்கட்டியெழுப்புவதில் அரசு தனது கடப்பாட்டைக் காட்டவில்லை.

இந்தப் பெரும் பணியை எல்லா அம்சங்களிலும் முன்னெடுத்துச் செல்லக்கூடிய விதத்தில் கட்டமைப்படுபடன் கூடிய முறையான ஒருங்கிணைக்கப்பட்ட செயல் திட்டம் ஒன்று இல்லை. முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டதைத் தவிர இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க தரமான முன்னேற்றம் காணப்படவில்லை.

அவர்களுக்குச் சொந்தமானவை எல்லாம் போரில் அழிந்து போய்விட்டன. வீட்டு வசதி, வாழ்வாதார வாய்ப்புக்கள் மற்றும் அடிப்படைத் தேவைகள் மறுக்கப்பட்ட நிலையிலே அவர்கள் தொடர்ந்தும் வாழ்ந்து வருகின்றார்கள். அரசின் நடவடிக்கைகள் எல்லாம் வெறும் பிரசாரமாகவே அமைந்துள்ளன.

மக்களின் வாழ்வை மீளக்கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டு அரசின் நடவடிக்கைகள் அமையவில்லை.

வன்னியில் பாதிக்கப்பட்ட மக்களின் நன்மைக்காக இந்தியாவினால் அன்பளிக்கப்பட்ட 500 ட்ராக்டர்களைக் கையளிப்பதில் அரசு கபடத்தனத்துடன் செயற்பட்டமை, மனித உரிமைகள் நிறுவனம் ஒன்று அன்பளிப்பாக வழங்கிய லாண்ட் மாஸ்டர்களுக்குரிய பயனாளிகளைத் தெரிவுசெய்வதில் காட்டப்பட்ட அரசியல் ரீதியான பாரபட்சம், இந்தியாவினால் அன்பளிக்கப்பட்ட 50,000 வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்தை நடை முறைப்படுத்துவதில் அரசியல் காரணங்களை முன்வைத்து காட்டப்படும் தாமதம் ஆகியன பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களைக் கவனிப்பதில் அரசுக்கு இதயபூர்வமான அர்ப்பணிப்பு இல்லை என்பதைக் காட்டி நிற்கின்றன.

மலிவான அரசியல் லாபம் ஒன்றையே அது கொண்டுள்ளது என்பதையும் அரசின் செயல்பாடுகள் தெளிவாக வெளிக்காட்டியுள்ளன. மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களுக்காக உண்மையாகப் பாடுபடவேண்டும் என்பதிலும் பார்க்க, அரசியல் லாபத்தை மாத்திரமே அரசு கருத்தில் கொண்டுள்ளது.

(2) அரசினதும் அரசின் அங்கீகாரத்துடனும் இடம்பெறுகின்ற செயற்பாடுகளின் மூலம் இராணுவத் தேவை என்ற ரீதியிலும் அபிவிருத்தி என்ற போர்வையிலும் தமிழ் மக்கள் சட்டபூர்வமாகக் குடியிருந்த, விவசாயம் செய்த காணிகளிருந்து அவர்களை அப்புறப்படுத்துவதும் ஏனைய காணிகளை சட்ட விரோதமாகக் கைப்பற்றுவதும் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

ஏனைய காணிகள் சட்ட விரோதமாக ஆக்கிரமிக்கப்படுகின்றன. புனித வணக்கத் தலங்கள், மற்றும் தமிழ் மக்களின் கலாசாரத்திற்குரிய பாரம்பரிய இடங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டு அழிக்கப்படுகின்றன. சில இடங்களில் கலாசார அடையாளத்தைத் திரிபுபடுத்தும் விதத்தில் புதிதாக வணக்க அடையாளங்கள் மற்றும் சின்னங்கள் வைக்கப்படுகின்றன. இதனால் பிரதேசங்களின் புனிதத் தன்மை மாசுபடுத்தப்படுகின்றது.

இவை யாவும் போரின் பின்னர் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் எதிர்கால நல்வாழ்வுக்கு பாரதூரமான இடரை ஏற்படுத்துவதாக அமைகின்றன. தமிழ் மக்கள் மீது ஆகக் கூடுதலான துன்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற இந்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். மீண்டும் முன்னிருந்த நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் உண்மையான நல்லிணக்கம் உருவாக முடியும்.

(3) தமிழ் மக்களின் சட்டபூர்வமான அரசியல், பொருளாதார, சமூக, கலாசார அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதும் பாதுகாப்பு மற்றும் கௌரவத்துடன் வாழக் கூடியதுமான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

இப்பிரச்சினைகள் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் மோதல் போக்கில் செயற்படவில்லை. ஆனால் தமிழ் மக்களின் எதிர்காலத்தில் அர்த்தமுள்ளதும் உண்மையானதுமான மாற்றத்தைக் கொண்டு வரவும் தமிழ் மக்களின் துன்பங்கள் மற்றும் கவலைகளை நீக்கவும் ஒத்துழைப்பு என்ற உணர்வுடன் அரசுடன் செயற்படவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சித்திருக்கின்றது.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் மேற்கூறப்பட்ட உண்மையான பிரச்சினைகளை மையமாக வைத்து அரசு தற்போதைய தேர்தல் பிரசாரத்தை நடத்தவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கடும் முயற்சிக்கு மத்தியிலும் இந்தப் பிரச்சினைகள் குறித்து தனது செயல்பாட்டில் இன்னும் ஆக்கபூர்வமான முன்னேற்றம் எதனையும் அரசு காட்டவில்லை.

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கிய பல உறுதிமொழிகளை அரசு இன்னும் நிறைவேற்றவில்லை. இதன் காரணமாகக் குடும்பத் தலைவர்கள் இல்லாத காரணத்தினால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் துன்பப்படுகின்றன. இவ்வாறான குடும்பங்கள் தங்களின் குடும்பத் தலைவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா? இல்லையா? என்பதை உறுதிப்படுத்த முடியாத நிலையில் வாழ்ந்து வருகின்றன.

இந்தப் பின்னணியில், தமிழ் வாக்காளர்களின் தேர்தல் தீர்ப்பை எவ்வாறாவது திரிபுபடுத்திக் காட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகின்றது. தமிழ் வாக்களார்கள் பயமுறுத்தப்படுகின்றார்கள். அச்சுறுத்தப்படுகின்றார்கள். அவர்கள் மீது தேவையற்ற செல்வாக்கு பயன்படுத்தப்படுகின்றது. லஞ்சம், ஊழல் நடவடிக்கைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. சைக்கிள்கள், நீரிறைக்கும் இயந்திரங்கள், சேலைகள், வேட்டிகள், பணம் மற்றும் ஏனைய பொருள்கள் அரச தரப்பு அரசியல்வாதிகளால் தாராளமாக வாரி வழங்கப்படுகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 16.06.2011 அன்று அளவெட்டியில் நடத்திய முதலாவது உள்ளகக் கூட்டம் ஒன்று இராணுவத்தினரால் குழப்பப்பட்டது. மக்கள் தாக்கப்பட்டார்கள். ஒரு மாதம் கழிந்தும் அச்சம்பவம் குறித்து இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களின் வீடுகள் கல்வீச்சுக்கு இலக்காகி வருகின்றன. நாய் ஒன்றின் தலையை வெட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளரின் வீட்டு வாசலில் வைத்திருந்தார்கள். நாயின் சடலம் அவரின் வீட்டு வளவினுள் வீசப்பட்டிருந்தது. இவை அச்ச நிலையை ஏற்படுத்துவதற்காகவும் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பதைத் தடுப்பதற்காகவுமே மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறான கண்டனத்துக்குரிய நடவடிக்கைகள் இராணுவத்தின் பிரசன்னம் பலமாக இருக்கும் வடக்கில் இடம்பெறுகின்றது. இதற்கான பொறுப்பை அரசும் அதன் அடிவருடிகளுமே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

வடக்கு மாகாண ஆளுநரிலிருந்து அரச இயந்திரம் முழுமையாக அரசினால் தவறாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அரச ஊழியர்கள் அரச விருப்பங்களை நிறைவேற்ற வேண்டும் அல்லது எதிர் விளைவுகளுக்கு ஆளாக வேண்டும் என்று அச்சுறுத்தப்படுகின்றனர்.

அரசின் ஆணைக்குட்பட்ட பாதுகாப்புப் படையினரும் மற்றும் ஏனைய அரச வளங்களும் அரசின் பிரசாரத்தை நடத்துவதற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவர்களைக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசார நடவடிக்கைகள் குழப்பப்படுகின்றன.

அரசுக்கு ஆதரவாக வாக்களியுங்கள் அல்லது தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு வாக்களிப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள் என்று தமிழ் வாக்காளர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். அரசும் அதன் அடிவருடிகளும் மற்றும் அரசியல் கட்சிகளும், ஆளும் கட்சியின் சின்னத்தில் போட்டியிடும் ஆட்களும் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் வடக்கில் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் ஒன்றை சாத்தியமற்றதாக ஆக்கியுள்ளது. தற்போது மோசமாக இருக்கும் இந்த நிலைவரம் தேர்தல் தினத்தன்று மிகவும் மோசமானதாக இருக்கும்.

தேர்தல் நடைமுறையைக் கண்காணிப்பதற்கும் வாக்களிப்பைக் கண்காணிப்பதற்கும் போதுமான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. சர்வதேசக் கண்காணிப்பாளர்களின் பிரசன்னம் இவ்விதமான செயல்பாடுகளுக்குத் தடையாக இருந்திருக்கும்.

ஜூன் 16 இல் அளவெட்டியில் இடம்பெற்ற பாரதூரமான சம்பவத்தின் பின்னர் அவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. தற்போது வடக்கில் அப்பட்டமாக இடம்பெறும் ஊழல் மற்றும் சட்டவிரோதமான தேர்தல் நடைமுறைகள் இடம்பெறுவது போன்று நாகரிக உலகில் வேறு எந்த நாட்டிலும் இடம்பெறவில்லை.

எப்படியும் நேர்மையற்ற முறையிலாவது இந்தத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்று அரசு நினைப்பதாகத் தெரிகிறது. தற்போது பகிரங்கமாகியுள்ள சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் ஆகியவற்றின் மீறல்களுக்கு முகம் கொடுப்பதற்கு அவ்வாறான தேர்தல் தீர்ப்பு அரசுக்குத் தேவைப்படுகின்றது.

அந்த வெற்றி எப்படிப் பெறப்படுகிறது என்பது பற்றி அரசுக்கு அக்கறையில்லை. சாதகமான தீர்ப்பு ஒன்றைப் பெறுவது மட்டுமே தேவை என்று அரசு எண்ணுவது போன்று தெரிகின்றது. அனைவரும் கண் தெரியாதவர்கள் மற்றும் காது கேளாதவர்கள் என்று எண்ணிக்கொண்டு தங்களின் தவறுகளை மூடிமறைக்கலாம் என அரசு கற்பனை செய்கிறது. இதன் மூலம் மீண்டும் தவறு ஒன்றை விடுகின்றது.

இந்தத் தேர்தலில் என்ன நடைபெறுகின்றது என்பதை முழு நாடும் உலகமும் அவதானித்துக் கொண்டிருக்கின்றன என்பதை அரசு தெரிந்து கொள்ள வேண்டும். இந்தத் தேர்தல் நடைபெறும் சுற்றுப்புறச்சூழல் அடிப்படையில் முக்கியமானதாகும்.

அனைத்து இன மக்கள் மற்றும் சமூகங்களுக்கும் இடையே உண்மையான நல்லிணக்கமும் ஒற்றுமையும் ஏற்படுவதற்கு அரசு நேர்மையாக சரியான நடைமுறையை ஆரம்பித்துச் செயல்பட வேண்டும் என்று நாம் தொடர்ச்சியாக வற்புறுத்தி வந்துள்ளளோம். அரசு குறுகிய நோக்கம் கொண்ட நிகழ்ச்சி நிரலை தொடர்வதில் தீர்மானமாக இருப்பதாகத் தெரிகின்றது.

பாரதூரமாக ஆத்திரமூட்டப்பட்டாலும் அமைதியாக இருக்குமாறு தமிழ் மக்களை நாம் கேட்டுக்கொள்ளுகின்றோம். நீங்கள் அளிக்கும் வாக்கு உங்களின் இறைமையைப் பிரயோகிப்பதாக இருக்கும். ஜனநாயகத்தின் சாரம் அதுவே.

கொள்கையினதும் செயல் திட்டத்தினதும் அடிப்படையில் உங்கள் இறைமையை பிரயோகிக்க வேண்டும். உங்களுடைய இறைமையை இழிவான முறைகள் மூலம் வேறு எவரும் மறைமுக நோக்கங்களுக்காகத் தட்டிப் பறிப்பதற்கு நீங்கள் அனுமதிக்கக் கூடாது.

நீங்கள் அமைதியாக ''வீடு'' சின்னத்திற்கு நேரே புள்ளடியிட்டு தெளிவான தீர்ப்பை வழங்குங்கள்.

- இவ்வாறு தெரிவித்தார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திபெத் சுதந்திரம் பெற அமெ. ஆதரவு இல்லை

## வெள்ளை மாளிகை தகவல் தெரிவிப்பு

வாஷிங்டன், ஜூலை 21

''சீனாவின் ஒரு பகுதி திபெத். ஆனால், சுதந்திரம் பெற அமெரிக்கா ஆதரவு அளிக்காது''என, அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.


இதுகுறித்து வாஷிங்டனில் அமெரிக்க அதிபருக்கான வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜெய் கார்னி கூறுகையில், திபெத் விஷயத்தில் அமெரிக்காவின் நிலை மாறவில்லை. சீனாவின் ஒரு பகுதிதான் திபெத். ஆனால், திபெத் சுதந்திரம் பெறுவதற்கு, அமெரிக்கா ஆதரவு அளிக்காது. திபெத்தின் தன்னிகரற்ற கலாசாரத்தை பாதுகாக்கவும் மற்றும் அந்த மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலும் அமெரிக்கா இந்த நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

''சீனா, திபெத் இடையிலான நீண்டகாலப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளும் வகையில் இரு தரப்பிலும் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசுவதை, அதிபர் ஒபாமா வரவேற்றுள்ளார். திபெத்தின் புத்த மதத் தலைவர் தலாய்லாமா, நோபல் பரிசு பெற்றவர். சர்வதேச அளவில், புத்தமதத் தலைவராக அங்கீகரிக்கப்பட்டவர்.

மற்ற நாட்டு அதிபர்கள் எப்படி அவரை சந்திக்கின்றனரோ, அதே அளவுகோலுடன் தான், அதிபர் ஒபாமாவும், தலாய்லாமாவை சந்தித்துப் பேசினார்'' என்றார்.

வாஷிங் டனில், இந்த வாரத் தொடக்கத்தில் அமெரிக்க அதிபர் ஒபாமாவை, தலாய்லாமா சந்தித்துப் பேசியதையடுத்து, வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் இவ்வாறு கூறியுள்ளார்.

## பத்திரிகையாளர் சந்திப்பு.......



செர்பியா- போஸ்னியா- குரோஷியா ஆகிய நாடுகளிடையே முத்தரப்பு பேச்சுவார்த்தை பரிஜூரி நகரில் நடந்தது. இதில் குரோஷியா அதிபர் ஈவோ-ஜோஸிபோவிக் (வலது) பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் பேசினார்.

# லிபியாவின் பரேகா நகர் கிளர்ச்சியாளர்கள் வசம்

லிபியாவின் கிழக்கு நகரான பரேகாவை கைப்பற்றியுள்ளதாக கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பரேகா நகரைத் தங்கள் வசம் கொண்டுவந்த போதிலும் அந்நகர வீதிகளில் கண்ணி வெடிகள் நிறைந்து காணப்படுவதால் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாவில்லை எனக் கிளர்ச்சியாளர்களின் பேச்சாளர் ஷமிஸ்தீன் அப்துல் மோலா தெரிவித்துள்ளார்.

கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத லிபிய அரச படைகள் தற்போது ராஸ் லானப் நகரை நோக்கிப் பின்வாங்கி வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எண்ணெய் வளம் மிக்க பரேகா நகரின் வீழ்ச்சியானது கடாபி அரசுக்கு மிகப்பெரிய வீழ்ச்சி. எனினும் அந்த நாட்டு அரசு எத்தகைய செய்தியையும் இதுவரை வெளியிட வில்லை.

# கினியா அதிபர் மாளிகை மீது ரொக்கெட் குண்டுத் தாக்குதல்

கொனாக்ரே,ஜூலை 22

கினியா நாட்டின் அதிபர் மாளிகை மீது கிளர்ச்சியாளர்கள் ரொக்கெட் குண்டு வீசித் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் அதிபர் மாளிகை பாதுகாவலர் ஒருவர் கொல்லப்பட்டார். இதில் அதிபர் அதிர்ஷ்டவசமாக ஆல்பா கோன்டே காயமின்றி உயிர்தப்பினார்.

ஆபிரிக்க நாடான கினியா நாட்டின் அதிபராக ஆல்பா கோன்டே(73) கடந்த ஆண்டு நவம்பர் ஜனநாயக முறையில் தேர்வு செய்யப்பட்டவர் .

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் தலைநகர் கொனாக்ரேவில் உள்ள அதிபர் மாளிகையில் நேற்றுமுன்தினம் கிளர்ச்சியாளர்கள் திடீரென ரொக்கெட் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர்.

இந்தத் திடீர் தாக்குதலில் அதிபர் மாளிகை பாதுகாவலர் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் 3 பொலிஸார் படுகாயமடைந்தனர். அதிபர் ஆல்பா கோன்டே காயமின்றி உயிர் தப்பினார். இத்தாக்குதல் தொடர்பாக முன்னால் ராணுவ அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டார். இது தொடர்பாகப் பிரதமர் முகமது சையத்போபானா பாதுகாப்பு அதிகாரிகள் கூட்டத்தை அவசரமாகக் கூட்டி விவாதித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மூக்குத்தியால் கல்லூரியில் அனுமதி மறுப்பு

சுவீடன் நாட்டுக் கல்லூரி ஒன்றில், இந்து மதத்தைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் மூக்குத்தி அணிந்து சென்றதால், அனுமதி வழங்கப்படாததது சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

சுவீடன் நாட்டின் மத்தியில், ஓரிபுரோ என்ற இடத்தில், பொது நிதியில் இயங்கும் கல்லூரி ஒன்று உள்ளது. இந்தக் கல்லூரியில் சேருவதற்காக, இந்து மதத்தைச் சேர்ந்த 13 வயது இளம்பெண் சென்றார். இவர் மூக்குத்தி அணிந்து சென்றதால், கல்லூரியில் சேர்க்க அனுமதி வழங்கப்படவில்லை. வீட்டுக்குச் சென்று மூக்குத்தியைக் கழற்றி வைத்துவிட்டு வந்தால்தான் அனுமதி வழங்கப்படும் எனத் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, இந்தப் பெண்ணின் தாய், கல்லூரி நிர்வாகத்திடம் புகார் செய்துள்ளார்.

இதுகுறித்து, அமெரிக்காவின் நெவாடா என்ற இடத்தில், சர்வதேச இந்து மதத்திற்கான தலைவர் ராஜன் ஜெட் கூறுகையில், மூக்கு குத்திக் கொள்வது, மூக்குத்தி அணிவது இந்தியாவைச் சேர்ந்த இந்துப் பெண்களின் பாரம்பரிய வழக்கம். எனவே, அந்நாட்டின் சட்டத்தில் இதற்குத் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்றார்.

# எகிப்தில் அமைச்சரவை மாற்றம்; புதிய துணைப் பிரதமர்கள் நியமனம்

கெய்ரோ, ஜூலை 21

எகிப்து முன்னாள் அதிபர் ஹோஸ்னி முபாரக் வீழ்ச்சிக்குப் பின்னர், நான்காவது முறையாக, நேற்றுமுன்தினம் அமைச்சரவை மாற்றம் செய்யப்பட்டது.

ராணுவ ஆட்சியை எதிர்த்தும், விரைவில் சீர்திருத்தம் கொண்டுவர வலியுறுத்தியும், முபாரக் ஆட்சியிலிருந்த அமைச்சர்களை வெளியேற்ற வேண்டும் என்றும், கடந்த 8ஆம் திகதியில் இருந்து, புதிய கிளர்ச்சியில் மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதையடுத்து, துணைப் பிரதமர் காமல் மற்றும் இவரைத் தொடர்ந்து மூன்று அமைச்சர்கள் பதவியை ராஜினாமா செய்தனர்.

கிளர்ச்சியின் போது அப்பாவிப் பொதுமக்களைக் கொன்ற குற்றச்சாட்டின் கீழ், கடந்த வாரம் 700 பொலிஸ் அதிகாரிகள் பதவியில் இருந்து நீக்கப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து, கடந்த திங்கட்கிழமை நான்காவது முறையாக, எகிப்து அமைச்சரவை மாற்றி அமைக்கப்பட்டது. இதன்படி முக்கிய அமைச்சர்களான வெளியுற வுத்துறை, நிதித் துறை, ராணுவம், வர்த்தகம் மற்றும் தொழில்துறை சார்ந்த 15அமைச் சர்கள் நீக்கப்பட்டனர். புதிய துணைப் பிரதமர்களாகப் பழம் பெரும் பொருளாதார வல்லுநர் ஹசெம் பெப்லாவி மற்றும் வக்பு கட்சித் தலைவர் அலி அல் சில்மி ஆகிய இருவரையும் பிரதமர் எசாம் ஷரப் நியமித்துள்ளார்.

# சிரியாவில் கலவரம்; 30 பேர் பலி

டமாஸ்கஸ்,ஜூலை 21

சிரியாவின் ஹோம்ஸ் நகரில், அதிபர் பஷர் அல் அசாத் ஆதரவாளர்கள் மற்றும் எதிர்ப்பாளர்களுக்கு இடையே நடந்த மோதல் மற்றும் கலவரத்தில் 30 பேர் கொல்லப்பட்டனர்.

சிரியாவில் அதிபர் பஷர் அல் அசாத்துக்கு எதிரான கிளர்ச்சி, அவரது ஆதரவாளர்கள் மற்றும் எதிர்ப்பாளர்களுக்கிடையே கலவரமாக வெடித்துள்ளது.இதனையடுத்து முக்கிய நகரமான ஹோம்ஸ் நகரில், இருதரப்புக்கும் இடையே நடந்த மோதல் மற்றும் கலவரத்தில் 30 பேர் கொல்லப்பட்டனர்.

ஹோம்ஸ் நகரில், கடந்த வாரம் அதிபருக்கு ஆதரவானோர் மூன்று பேர் கடத்திக் கொல்லப்பட்டதாகவும், இதைத் தொடர்ந்தே இந்த நகரில் கலவரம் வெடித்திருப்பதாகவும், லண்டனை இருப்பிடமாகக் கொண்ட சிரியா மனித உரிமைக் கண்காணிப்பாளர் அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ''ஆட்சிக்கு எதிரான புரட்சி, தற்போது இருதரப்புக்கும் இடையே கலவரமாக வெடித்துள்ளது.

இருதரப்பினரும் தடி மற்றும் ஆயுதங்களால் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொள்கின்றனர். இது ஆபத்தாக உருவாகியுள்ளது'' என்றார்.

# செய்தி நிறுவன உரிமையாளர் முர்டோக் தாக்கப்பட்டார்

லண்டன், ஜூலை 21

தொலை பேசி ஒட்டுகேட்பு விவகாரம் தொடர்பாக இங்கிலாந்து நாடாளுமன்றில் ஆஜராகியிருந்த நியூஸ் ஒப்தி வேல்ட் செய்தி நிறுவன உரிமையாளர் முர்டோக் மீது ஒருவர் திடீர் தாக்குதல் நடத்தியதால் நாடாளுமன்றில் பரபரப்பு ஏற்பட்டது.

பிரிட்டனில், பல்வேறு தொலைபேசி ஒட்டுக் கேட்பு குற்றச்சாட்டில் சிக்கிய நியூஸ் ஒப் தி வேர்ல்ட் பத்திரிகை சமீபத்தில் மூடப்பட்டது. இது தொடர்பாக 10 பேர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலையாயினர்.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் பிரிட்டன் நாடாளுமன்றத் தேர்வுக் குழு முன்பு நியூஸ் செய்தி நிறுவன தலைமை நிர்வாக அதிகாரி ரூபர்ட் முர்டோக், இவரது மகன் ஜேம்ஸ் முர்டோக் மற்றும் நியூஸ் இன்டர் நஷனல் முன்னாள் தலைவர் ரெபெக்கா புரூக்ஸ் ஆஜராகிப் பதிலளித்தனர்.

அப்போது டுவீட்டர் இணையத்தள ஆர்வலர் ஒருவர் திடீரென முர்டோக்கை நோக்கி வேகமாக வந்து அவர் மீது ஷேவிங் கிரீமை ஊற்றித் தாக்கினார். உடனே நாடாளுமன்ற பாதுகாவலர்கள் அவரை மடக்கிப் பிடித்து விசாரணை செய்வதில் அவரது பெயர் ஜானிமார் பல்ஸ் என்ற ஜோனாதன் என்பது தெரியவந்தது.

# சொந்தக் கிராமத்தில் மண்டேலாவின் 93ஆவது பிறந்தநாள் கொண்டாட்டம்

கேப்டவுன், ஜூலை 21

தென்னாபிரிக்க விடுதலைக்காகப் போராடி வெற்றி பெற்ற அந்தநாட்டின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா கடந்த திங்கட்கிழமை தன் 93 ஆவது பிறந்தநாளை சொந்தக் கிராமமான கிழக்கு ஈஸ்டர்ன் கேப்பில் கொண்டாடினார்.

இவருக்கு ஐ.நா., பொதுச் செயலர் பான் கி மூன், அமெரிக்க அதிபர் ஒபாமா உட்பட உலகத் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர்.

தென்னாபிரிக்க விடுதலைக்காக 67 ஆண்டுகள் தன்னை அர்ப்பணித்தவர் நெல்சன் மண்டேலா .இவரது 93 ஆவது பிறந்தநாள், கடந்த திங்கட்கிழமை அந்தநாடு முழுவதும் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில், குழந்தைகள் காலையில் வகுப்புகளுக்குச் செல்லும் முன், மண்டேலாவை வாழ்த்திப் பாட்டுப் பாடினர். நாட்டுக்காக இவர் 67 ஆண்டுகள் அர்ப்பணித்ததை முன்னிட்டு, 67 நிமிடங்கள் நாட்டுக்காக ஒவ்வொருவரும் சேவை செய்ய வேண்டும் என்று, நெல்சன் மண்டேலா அமைப்பும் கேட்டுக்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்து வீரன் கனுசாந் 9 விக்கெட்டுக்களை வீழ்த்திச் சாதனை

வலி.வடக்கு, ஜூலை 21

கொக்குவில் இந்துக்கல்லூரி வீரன் கனுசாந் ஒன்பது விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை புரிய கொக்குவில் இந்துக் கல்லூரி 7 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் வட மாகாணப் பாடசாலைகளுக்கு இடையேயான 15 வயதுப் பிரிவினர்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆட்டம் ஒன்று பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி 22.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது.

கவிவாணன், சஞ்சயன் தலா 18 ஓட்டங்களைப் பெற்றனர். உதிரிகளாக 3 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கனுசாந் 9.5 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 28 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இந்த ஆண்டு நடைபெறும் போட்டிகளில் 9 விக்கெட்டுக்களை ஒரு வீரர் கைப்பற்றியமையும் தனது இறுதி ஓவரில் வீசிய 5 பந்துகளில் 2 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியமையும் சுட்டிக்காட்டக் கூடியதாகும்.

பவிதரன் 19 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்.

63 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 18 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.



கனுசாந்

நிதர்சன் 22, நிக்ஷன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். உதிரிகளாக 14 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஜீராந் 4 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார். (ஐ-86)

# யூனியனை வென்றது ஸ்கந்தா

மருதனார்மடம், ஜூலை 21

இலங்கைப் பாடசாலைத் துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் சுற்றுப் போட்டியில் 15 வயதின் கீழ்ப் பிரிவுக்கான ஓர் ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் மோதின.

இந்த ஆட்டத்தில் ஸ்கந்தா அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

முதலிலே துடுப்பெடுத்தாடிய யூனியன் அணியினர் 23.5 ஓவர்களில் 122 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தனர். இந்த அணியின் துடுப்பாட்டத்தில் எஸ்.லனுசன் 17 ஓட்டங்களையும் பி.கிஷோக் 16 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். கே.கதியோன் 24 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் எம்.சுவிற்றன் 43 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

123 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா அணியினர் 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தனர். கே.ரசிகரன், கே.கதியோன் ஆகியோர் முறையே 24, 18 ஓட்டங்களைப் பெற்றனர். எஸ்.லனுசன், கே.கிஷோக் ஆகியோர் முறையே 25, 30 ஓட்டங்களைக் கொடுத்துத் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (ஐ-55)



5 விக்கெட்டுக்களை வீழ்த்திய கதியோன்

# 9 விக்கெட்டுக்களால் வென்றது சென்.ஜோன்ஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 21

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கம் நடத்தும் 15 வயது பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி, 9 விக்கெட்டுக்களால் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியை வென்றது.

பூவா, தலையா போட்டதில் வெற்றி பெற்ற சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி 24.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றது.

பிரசாந் 18 ஓட்டங்களை தமது அணி சார்பாக பெற்றார்.

கனுஷன் 8 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் நிலோஷன் 6.2 ஓவர்கள் பந்து வீசி 26 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

56 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 16.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 56 ஓட்டங்களை பெற்றது.

கபில்ராஜ் ஆட்டம் இழக்காமல் 31 ஓட்டங்களை தமது அணி சார்பாக பெற்றார்.

பிரசாந் 4 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். (ஐ-23)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் 15,17 வயது பிரிவினர்களுக்கான கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

17 வயது அணிகளுக்கு இடையிலான ஆட்டம்:

யாழ்.மத்திய கல்லூரி அணி எதிர் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி.

(கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானம்.) (ம-23)

# அருணோதயா மாணவி புதிய சாதனை



*பியகமையில் அமைந்துள்ள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற 54 ஆவது கனிஷ்ட பிரிவு மெய்வன்மைப் போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவி புதிய சாதனை நிலை நாட்டியுள்ளார்.*

*2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற 20 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தல் நிகழ்வில் பியுமானி 2.9 மீற்றர் உயரத்தினை பாய்ந்தமை இதுவரையில் சாதனையாக இருந்தது.*

*அதனை 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற 20 வயதுப் பிரிவில் பெண்கள் பிரிவினருக்கான கோல் ஊன்றிப் பாய்தல் நிகழ்வில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவி எஸ்.தனுஜா 3 மீற்றர் உயரத்தினை பாய்ந்து புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார். (ஐ-23)*

# தேசியமட்ட வலைப்பந்தாட்டம்

37 ஆவது தேசியமட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 26 ஆம் திகதிகளில் கொழும்பு விளையாட்டு அமைச்சின் விளையாட்டுத்திடலில் இடம்பெறவுள்ளன. இந்த விளையாட்டுப் போட்டியில் பங்கு கொள்வதற்காக வடமாகாண வலைப்பந்தாட்ட அணி எதிர்வரும் 24 ஆம் திகதி கொழும்பு செல்கின்றது.

இந்த அணியில் இலங்கை தேசிய வலைப்பந்தாட்ட அணியில் போட்டியிட்டுவரும் சிவலிங்கம் தர்ஷினியும் உள்ளார்.(ம-23)

# தேசிய மட்ட பெரு விளையாட்டு; தெரிவான யாழ். பாடசாலைகள்

வலி.வடக்கு, ஜூலை 21

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் வடமாகாண மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே வவுனியாவில் நடைபெற்ற பெருவிளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்று தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள போட்டிகளில் கலந்து கொள்ளத் தகுதிபெற்றுள்ள பெண்கள் பாடசாலை அணிகளின் விவரம் வருமாறு:

**எல்லே**

**19 வயது** - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி (வலிகாமம்), பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை (வடமராட்சி) மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை (வடமராட்சி).

**கபடி**

**19 வயது** - இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம் (வலிகாமம்), இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்(வலிகாமம்), வவுனியா கணேஸ்வரா மகாவித்தியாலயம் (வவுனியா தெற்கு).

**வலைப்பந்தாட்டம்**

**15 வயது** - சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி(வலிகாமம்), வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி (வடமராட்சி), கொக்குவில் இந்துக்கல்லூரி (யாழ்ப்பாணம்).

**17வயது** - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி (வடமராட்சி), சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி (வலிகாமம்), தெல்லிப்பழை யூனியன் கல்லூரி (வலிகாமம்).

**19வயது** - தெல்லிப்பழை யூனியன் கல்லூரி (வலிகாமம்), சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி (வலிகாமம்), வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி (வலிகாமம்),

**உதைபந்தாட்டம்**

**19 வயது** - மானிப்பாய் மகளிர் கல்லூரி (வலிகாமம்), வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலயம் (வவுனியா வடக்கு), கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி (வடமராட்சி).

**கரப்பந்தாட்டம்**

**15 வயது** - வவுனியா கிடாய்சூரி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை (வவுனியா வடக்கு), அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்(வலிகாமம்), புத்தூர் ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலயம் (யாழ்ப்பாணம்).

**17 வயது** - அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் (வலிகாமம்), சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி (வலிகாமம்), வவுனியா கிடாய்சூரி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை (வவுனியா வடக்கு)

**19 வயது** - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாட்சாலை (வடமராட்சி), தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி (வலிகாமம்), மன்னார் தோட்டவெளி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை (மன்னார்).

**கூடைப்பந்தாட்டம்**

**19 வயது** - யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் மகாவித்தியாலயம்(யாழ்ப்பாணம்), வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை(யாழ்ப்பாணம்), உடுவில் மகளிர் கல்லூரி (யாழ்ப்பாணம்)

**மென்பந்து கிரிக்கெட்**

**19 வயது** - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி (வலிகாமம்), பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை (வடமராட்சி), முல்லைத்தீவு குமிழமுனை மகா வித்தியாலயம் (முல்லைத்தீவு)

**மேசைப் பந்தாட்டம்**

**19வயது** - தெல்லிப்பழை யூனியன் கல்லூரி (வலிகாமம்), யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி (யாழ்ப்பாணம்), சுண்டுக்குளி மகளிர் கல்லூரி (யாழ்ப்பாணம்).

**சதுரங்கம்**

**15 வயது** - பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை(வடமராட்சி), அளவெட்டி அருணோதயாக் கல்லூரி (வலிகாமம்), வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி (வடமராட்சி)

**19 வயது** - யாழ். இந்துமகளிர் கல்லூரி (யாழ்ப்பாணம்), அளவெட்டி அருணோதயாக் கல்லூரி (வலிகாமம்), வடமராட்சி மத்தியமகளிர் கல்லூரி (வடமராட்சி).

**பூப்பந்தாட்டம்**

**19 வயது** - சுண்டுக்குளி மகளிர்கல்லூரி(யாழ்ப்பாணம்), யாழ். இந்து மகளிர்கல்லூரி (யாழ்ப்பாணம்), உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம் (வலிகாமம்).

**கரம்**

**15 வயது** - சுண்டுக்குளி மகளிர்கல்லூரி(யாழ்ப்பாணம்), வடமராட்சி மத்தியமகளிர் கல்லூரி (வடமராட்சி), சுந்தரபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை(வவுனியாவடக்கு)

**19 வயது** - யாழ்.இந்து மகளிர் கல்லூரி(யாழ்ப்பாணம்), வடமராட்சி மத்தியமகளிர் கல்லூரி (வடமராட்சி), சுண்டுக்குளி மகளிர் கல்லூரி (யாழ்ப்பாணம்).

**ஹொக்கி**

**19 வயது** - உடுவில் மகளிர் கல்லூரி (வலிகாமம்), மல்லாகம் குளமங்கால் றோமன்கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை(வலிகாமம்): சுந்தரபுரம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை (வவுனியா வடக்கு).

**உடற்பயிற்சி**

**19 வயது** - இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் (வவுனியா வடக்கு), மானிப்பாய் மகளிர்கல்லூரி (வலிகாமம்), இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம் (வலிகாமம்). (ஐ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று சிறப்பு மிக்க ஆட்டம்

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகின்றது. இந்திய அணி இங்கிலாந்துடன் 4 டெஸ்ட் ஆட்டங்கள், ஒரு 20 ஓவர் போட்டி மற்றும் 5 ஒரு நாள் ஆட்டத்தில் விளையாடுகின்றது.

இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் முதல் டெஸ்ட் ஆட்டம் லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றது. டெஸ்ட் போட்டியின் கிரிக்கெட் வரலாற்றில் இது 2 ஆயிரமாவது டெஸ்ட் ஆட்டமாகும். அத்தோடு இரு அணிகளும் 100 ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் மோதுகின்றன. இதனால் இந்த ஆட்டம் வரலாற்றில் சிறப்பை பெறுகின்றது. 100 ஆவது டெஸ்ட் ஆட்டத்தையொட்டி இந்தியா, இங்கிலாந்தை சேர்ந்த முன்னாள் அணித்தலைவர்கள் சிலருக்கு இங்கிலாந்து கிரிக்கெட் சபை அழைப்பு அனுப்பி உள்ளது. ஆனால் யார், யாருக்கு அழைப்பு அனுப்பப்பட்டு உள்ளது என்ற விவரத்தை வெளியிட மறுத்துவிட்டது.

2,000 ஆவது பயிற்சி போட்டி என்பதால் மேலும் முக்கிய வி.ஐ.பி.க்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டு உள்ளது. முதல் 90 ஆண்டுகளில் 1000 டெஸ்ட் ஆட்டங்கள் நடந்தது. அடுத்த 27 ஆண்டுகளில் 999 டெஸ்ட் ஆட்டங்கள் நடைபெற்று உள்ளன.(15)



# அப்ரிடிக்கு அபராதம் 45 லட்சம்

பாகிஸ்தான் முன்னாள் அணித்தலைவர் அப்ரிடியிடம் இருந்து 45 லட்சம் ரூபா அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

உலகக் கிண்ண மற்றும் மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான தொடரில் விளையாடியதற்காக அவருக்கு 55 லட்சம் ரூபா பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வழங்க வேண்டியிருந்தது. அதில் இருந்து அபராதத் தொகையான 45 லட்சம் கழிக்கப்பட்டுள்ளது. இதை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரிகளும் உறுதி செய்தனர்.

முன்னதாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் அணித்தலைவராக இருந்த சயிட் அப்ரிடியை அந்தப் பதவியில் இருந்து நீக்கியது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை. இதனால் ஆத்திரமடைந்த அப்ரிடி, மூத்த வீரர்களுக்கு கிரிக்கெட் சபை நிர்வாகிகள் உரிய மரியாதை அளிப்பதில்லை என்று கூறி கடுமையாக விமர்சித்தார். இதையடுத்து கடும் கோபமடைந்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, இங்கிலாந்தின் ஹாம்ப்ஸயர் அணியில் விளையாட அப்ரிடிக்கு அளித்திருந்த தடையில்லாச் சான்றிதழை திரும்பப் பெற்றது.

மேலும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் விதிமுறைகளை மீறியதாகக் கூறி விசாரணைக் குழுவையும் அமைத்தது. ஆனால் இதை எதிர்த்து அப்ரிடி சிந்து மாகாண உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அதன் பிறகு வழக்கை திரும்ப பெற்ற அப்ரிடி, விசாரணைக் குழுவின் முன்பு ஆஜரானார். அப்போது அவருக்கு 45 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. ஹாம்ப்ஸயர் அணியில் விளையாடவும் தடையில்லாச்சான்றிதழ் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# விளம்பரம் திரும்பப் பெற மாட்டாது

டோனி நடித்த மதுபான விளம்பரத்தில், ஹர்பஜனை காயப்படுத்தும் வகையில் எதுவுமில்லை. இந்த விளம்பரத்தை திரும்பப் பெறமுடியாது என்று விஜய் மல்லையா தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் தலைவர் டோனி, ஹர்பஜன் இருவரும் தனித்தனியாக வெவ்வேறு மதுபான விளம்பரங்களில் நடித்துள்ளனர். இதில் பிரபல தொழிலதிபர், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் ஐ.பி.எல். அணியின் உரிமையாளர் விஜய் மல்லையாவின் மதுபான விளம்பரத்தில் இந்திய அணித் தலைவர் டோனி நடித்து இருந்தார். இந்த விளம்பரம் ஹர்பஜன் அவரது குடும்பம் மற்றும் சீக்கிய சமூகத்தை கிண்டல் செய்வது போல உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து ஹர்பஜன் சிங்கின் தாயார் அவ்தார் கவுர் விஜய் மல்லையாவுக்கு அனுப்பிய நீதிமன்ற 'நோட்டீசில்' மதுபான விளம்பரம் குறித்து ஹர்பஜன் சிங் குடும்பத்தினரிடம் அனைத்து பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிகளில் உடனடியாக நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்கவேண்டும். இந்த விளம்பரத்தை மூன்று நாள்களில் திரும்பபெற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது.

ஹர்பஜனின் புகார் குறித்து விஜய் மல்லையா கூறியதாவது:

ஹர்பஜன் சிங்கை தனிப்பட்ட முறையில் தாக்குவது போல, தோனியின் விளம்பரம் இல்லை. இது இரண்டு தயாரிப்புகளுக்கு இடையிலான விளையாட்டு. இந்தியாவில் பல ''டிவி'க்களில் அரசியல்வாதிகள் குறித்து, கேலியான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகிறது. இதை எதிர்த்து அவர்கள் அனைவரும் வக்கீல் நோட்டீஸ் அனுப்பத் தொடங்கினால் என்னவாகும்.

இது தொடர்பாக அவர்களது வக்கீல் அனுப்பிய நீண்ட... கடிதம் கிடைத்தது. இதுகுறித்து எங்களது வக்கீல்கள் ஆலோசித்துக் கொண்டுள்ளனர். மற்றபடி விளம்பரத்தை திரும்பப்பெறும் எண்ணம் இல்லை இவ்வாறு விஜய் மல்லையா கூறினார்.

# காலவரையற்ற டெஸ்ட் கிரிக்கெட் போட்டி

## ஐ.சி.சி. தலைமை அதிகாரி

ஐ.சி.சி. உலக டெஸ்ட் சாம்பியன் ஷிப் 2013 ல் காலவரையற்ற டெஸ்ட் கிரிக்கட் போட்டியை நடத்த ஐ.சி.சி. முடிவு செய்துள்ளது.

அதாவது வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்படும் வரை டெஸ்ட் போட்டி தொடரும் என்று ஐ.சி.சி. தலைமைச் செயல் அதிகாரி அருண் லோர்கட் தெரிவித்துள்ளார்.

ஐ.சி.சி. எதிர்கால கிரிக்கட் சுற்றுப்பயண நாள்காட்டியில் 4 ஆண்டுகளுக்கான உலக டெஸ்ட் சாம்பியன் ஷிப் போட்டியை ஐ.சி.சி. நடத்தவுள்ளது. ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் முதல் 4 அணிகள் போட்டியில் விளையாடும், இந்தப் போட்டியில் வெற்றி தோல்வியை தீர்மானிக்க காலவரையற்ற டெஸ்ட் போட்டியாக அது இருக்கும் என்று ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.

அதாவது இறுதிப் போட்டி என்ற ஒரு டெஸ்ட் போட்டி சமனிலை என்று ஆகிவிடக்கூடாது என்ற நிலையில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளதாக லோர்கட் தெரிவித்துள்ளார். இருப்பினும் சமனிலை என்பதை வைத்துக் கொண்டாலும் எந்த அணி வெற்றிபெற்றது என்பதை நிர்ணயிக்க பல்வேறு வழிமுறைகளை ஆலோசித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.



# வேகத்தில் இல்லை துல்லியம்

இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் முதல் கிரிக்கட் டெஸ்ட் போட்டி இன்று லோர்ட்ஸ் மைதானத்தில் தொடங்குகிறது.

இந்த டெஸ்ட் போட்டியில் சமீபத்தில் விமர்சனத்திற்கு ஆளாகி வரும் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஸ்டூவர்ட் பிராட் பெயரும் இடம் பெற்றுள்ளது. இவரது மோசமான பந்துவீச்சு இங்கிலாந்து அணியின் வெற்றியைப் பாதிக்குமோ என்ற அச்சம் அந்த அணி வீரர்களுக்கே உள்ளது.

ஸ்டூவர்ட் பிராட்டின் மோசமான பந்துவீச்சுத் திறன் குறித்து இங்கிலாந்து அணி இயக்குநர் ஆண்டி பிளவரும் விமர்சனம் செய்துள்ளார். இலங்கைக்கு எதிரான தொடரில் ஸ்டூவர்ட் பிராட் பந்துவீச்சு இங்கிலாந்து அணிக்கு அதிருப்தியை தந்துள்ளது. அவரது பந்து வீச்சில் துல்லியம் இல்லை என பிளவர் மனம் திறந்துள்ளார்.

பிராட் எதிரணிக்கு நெருக்கடியை தந்து விக்கெட்டுகளை எடுக்க வேண்டும் அதுதான் அவருடைய பணி. ஆனால் எதிரணியை எவ்விதத்திலும் அச்சப்படுத்தவில்லை. பணிகளை நிறைவேற்றும் அற்புதமான வீரர் என்ற பெருமை

## பிராட் குறித்து பிளவர்

பிராட்டுக்கு உண்டு. அப்படி இந்த வீரர் செயற்படவில்லை என்றும் பிளவர் விமர்சித்துள்ளார்.

லோர்ட்ஸ் டெஸ்ட்டில் இங்கிலாந்து அணியில் 11 வீரர்கள் பட்டியலில் பிராட்டுக்கு இடம் கிடைப்பது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. அணியில் இடம் பெற வேகப்பந்து வீச்சாளர் டிம் பிரஸ்னனுடன் அவர் போட்டி போட வேண்டியுள்ளது. (15)

# நவீன பிரட்மன் சச்சின்

கிரிக்கெட் உலகில் இந்தியாவின் சச்சின் நவீன பிரட்மனாகத் திகழ்கிறார் என முன்னணி வீரர்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

இந்திய அணித்தலைவர் டோனி ''கிழக்கும், மேற்கும் சந்திக்கின்றன'' என்ற விருந்து நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார். லண்டனின் ''ஹில்டன் பார்க்' என்ற இடத்தில் நடந்த இந்த விருந்தில் உலகின் முன்னணி வீரர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதில் பங்கேற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் அணித்தலைவர் லாரா, சச்சின் குறித்து கூறும்போது:

சச்சின் டெண்டுல்கர் 16 வயதில் கிரிக்கெட் விளையாடத் தொடங்கினார். தற்போது 38 வயதிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றார். இவரைப் போன்ற சிறந்த வீரரை இது வரை கண்டதில்லை. சச்சின்தான் உலகின் சிறந்த வீரர்.

லோர்ட்ஸ் மைதானத்தில் சச்சின் 100ஆவது சதம் அடிக்க இருப்பதை நேரில் காண உள்ளேன் என்றார், இங்கிலாந்தின் ஸ்டூவர்ட் கருத்துத் தெரிவிக்கையில்:

கடந்த 1990களில் சிறந்த வீரராக விளங்கியவர் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் லாரா. ஆனால் தற்போதைய கிரிக்கெட்டில் தொடர்ந்து அசத்தி வரும் இந்திய அணியின் சச்சின். அவரை விடச் சிறந்தவர். சச்சின் ''நவீன பிராட்மேன்' ஆவார். அதிக தொழில் நுட்பத்தை பயன்படுத்தி விளையாடுவதில் டிராவிட் வல்லவர். எதிர்வரும் டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றும்.

இந்த விருந்தில் கலந்துகொண்ட டிராவிட் கருத்துத் தெரிவிக்கையில்:

இந்தியா பல்வேறு கடவுள்களை கொண்டுள்ளது. இதில் கிரிக்கெட்டின் சிறந்த வீரர் சச்சினும் ஒரு கடவுளாக திகழ்கிறார்.



# கனவு அணியில் இந்திய நட்சத்திரங்கள்

ஐ.சி.சி டெஸ்ட் போட்டிக்கான கனவு அணியில் கபில்தேவ், கவாஸ்கர், சச்சின், சேவக் உள்ளிட்ட நான்கு இந்திய வீரர்கள் இடம் பிடித்துள்ளனர். லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் இன்று தொடங்கும் டெஸ்ட் ஆட்டத்தில் இந்தியா, இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன. இது 2,000 ஆவது டெஸ்ட் போட்டி இந்த மகத்தான மைல் கல்லை கௌரவிக்கும் விதமாக சர்வதேச வீரர்கள் அடங்கிய கனவு டெஸ்ட் அணியை ஐ.சி.சி தேர்வு செய்ய திட்டமிட்டது. இதற்காகப் பரிந்துரை செய்யப்பட்ட 60 வீரர்களின் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) சமீபத்தில் வெளியிட்டது. இதில் 2 தொடக்க வீரர்கள் 3 மத்தியவரிசை துடுப்பாட்ட வீரர்கள், ஒரு விக்கெட் காப்பாளர், ஒரு சகலதுறை ஆட்டக்காரர், 3 வேகப்பந்து வீச்சாளர்கள், ஒரு சுழற்பந்து வீச்சாளர் என்ற 11 வீரர்களை, ஐ.சி.சி இணையத் தளம் மூலமாக ரசிகர்கள் தேர்வு செய்தனர்.

இதில் அதிகபட்சமாக இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா சார்பில் தலா நான்கு வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேற்கிந்தியத்தீவுகள் சார்பில் இரண்டு வீரர்களும், பாகிஸ்தான் சார்பில் ஒருவரும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி திருநிலநாயகி சண்முகநாதன்

[தென்கோவை கற்பகப்பிள்ளையார் கோயிலடி, இருபாலை]



கோப்பாய் தெற்கு, கோப்பாயைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருநிலநாயகி சண்முகநாதன் நேற்று(20.07.2011) புதன்கிழமை கனடாவில் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிலிங்கம்ஐயா(ஆசிரியர்)-ஏலவார் குழலி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்ஐயா- வேதம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சண்முகநாதனின் அன்பு மனைவியும், க.குகமூர்த்தி, திருமதி வள்ளியம்மை குமாரசாமி ஆகியோரின் சகோதரியும், பாஸ்கரன், வரதாம்பிகை, காலஞ்சென்ற செந்தில்நாதன் மற்றும் கிருஷ்ணவேணி, வேதநாயகி(வல்லவை), காலஞ்சென்ற வைத்தியநாதன்(ஆசிரியர், லிங்க விநாயகர் தேவஸ்தானம்) மற்றும் கற்பகநாதன், சுசீந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும், கெங்காமலர், வருணநாதன், சற்குணதேவி, யோகநாதன், சந்திரலிங்கம், சூரியகுமாரி, இராஜ இராஜேஸ்வரி, பவித்திரா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.07.2011) வெள்ளிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தென்கோவை
கற்பகப் பிள்ளையார் கோயிலடி,
இருபாலை.

(6054)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி புவனேஸ்வரி அருளம்பலம்



கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி புவனேஸ்வரி அருளம்பலம் (19.07.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- தங்கம்மா தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்ற மயிலு அருளம்பலத்தின் (றிப்போட்டர்)அன்பு மனைவியும், சேதுப்பிள்ளை, சிவபாதம், சிவபாக்கியம், சிவசுப்பிரமணியம்(யாழ். பல்கலைக்கழகம்), காலஞ்சென்றவர்களான தியாகராசா, இரஞ்சினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், வேலழகன், அருள்மொழியழகன்(கனடா), தேன்மொழி(ஆஸ்திரேலியா), பூங்கொடி(சுவிஸ்), கயல்விழி, காலஞ்சென்ற திருமொழியழகன் ஆகியோரின் அன்புத் தாயும், சுகுணா, மரிவெல்(கனடா), தவதாஸ் (ஆஸ்திரேலியா), ஸ்ரீதரன்(சுவிஸ்) ஆகியோரின் மாமியும், பாதுஷன், அஸ்வினி, சிவானி, சுமித்திரா, சாய்மீரா(கனடா), விதுஷனி (ஆஸ்திரேலியா), மானசி, மதுரா, ஹரிஸ் (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.07.2011) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கல்வயல் சாவகச்சேரியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே.சிவசுப்பிரமணியம்
(சகோதரன்),

கல்வயல்,
சாவகச்சேரி.

(6052)

## திருமதி மல்லிகாதேவி மகாலிங்கம்



மண்டைதீவு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடா, ரொறண்டோவை வசிப்பிடமாகவும் கொண்ட மல்லிகாதேவி மகாலிங்கம் 17.07.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம்- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், வைத்திலிங்கம்- சின்னம்மா (கொழும்பு) தம்பதியரின் அன்பு மருமகளும், வைத்திலிங்கம் மகாலிங்கத்தின் அன்பு மனைவியும், கஜனின்(கனடா) பாசமிகு தாயும், பாலசிங்கம்(திருநாமசுந்தரம்- இலங்கை), வடிவாம்பிகை (இலங்கை), ஜெயசிங்கம்(கனடா), நேரு(கனடா), சந்திராதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், லக்ஷன், சோஜனா, கம்சிகா, முகிலா, ஜேவிதன் ஆகியோரின் அருமை மாமியும், ரகுபதி(இலங்கை), தயாரஞ்சினி(கனடா), ரஞ்சி(கனடா), குமரசூரியர்(சுவிஸ்), குணரட்ணம்(கொழும்பு), காலஞ்சென்ற பரராஜசிங்கம் மற்றும் திருஞானம்(கொழும்பு), காலஞ்சென்ற கனகலிங்கம், கனகேஸ்வரி (கனடா), மகேஸ்வரி(கனடா), அரசரத்தினம்(கனடா), அன்னலட்சுமி(பிரான்ஸ்), மயில்வாகனம்(பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2011) வியாழக்கிழமை காலை 8 மணி முதல் 10 மணிவரை OGDEN FUNERAL HOMESஇல் நடைபெற்று 635, PARLIMENTSTஇல் அமைந்துள்ள CHAPEL of St. JAME மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

277, சிவன்கோயில் வீதி,
தோணிக்கல், வவுனியா.

(ஸி/1887)

தகவல்:
ரகுபதி வடிவாம்பிகை.

## தென்மராட்சி வலய கட்டடம் திறப்பு

தென்மராட்சி, ஜூன் 21

தென்மராட்சி கல்வி வலயத்துக்கு 16 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட அலுவலகக் கட்டடம் நேற்று வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் இந்திக்க பண்டாரநாயக்கா முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

சாவகச்சேரி ஹென்ஸ்மன் வீதியில் மத்திய கல்வி அமைச்சின் இடைநிலைக் கல்வியை மேம்படுத்தும் செயல்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மாடிக் கட்டடத்தின் தளப் பகுதிக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தில் மேலும் நாவற்குழி ம.வி. கைதடி முத்துக்குமாரசாமி ம.வி., மீசாலை வீரசிங்கம் ம.வி, மந்துவில் ஸ்ரீபாரதி ஆகியவற்றில் அமைக்கப்பட்ட கட்டடங்கள் அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டன. (ஒ-207).


## பஸ் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள JJ - XXXX என்ற இலக்கமுடைய அரை சொகுசு பஸ் உடனடியாக விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை

தொடர்பு:- 0778865513

## வீடு விற்பனைக்குண்டு

174/6, கோயில் வீதி, இலக்கத்தை உடைய 1¾ பரப்பு சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. நேரடியாக பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

0774940523, 0778058721

## தவறவிடப்பட்டுள்ளது

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாக கொண்ட தளையசிங்கம் ராசம்மா (488432757V) என்பவரின் தேசிய அடையாள அட்டை யாழ்ப்பாணத்துக்கும்- குளப்பிட்டி சந்திக்கும் இடையே சென்று கொண்டிருந்த தனியார் பஸ்ஸில் தவறவிடப்பட்டுள்ளது. அதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொ.பே எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

தொ.பே- 0776223790, 0770851814.

## சோற் பிறியட் சக்சஸ்

சாவகச்சேரியில் அமைந்துள்ள INNOVAGE (MULTINATION COMPANY) க்கும் அதன் கிளைக்கும் முகாமைத்துவ ஆள்சேர்ப்புகள் இடம்பெறுகின்றன. தாங்களும் O/L / A/L சித்தி பெற்றவராயின் தொடர்பு கொள்ளலாம். சர்வதேசரீதியான பயிற்சியுடன் உயர்வான சம்பளமும் வழங்கப்படும்.

தொடர்புகொள்ள:-
M.S.Srikanth T.P- 0770771377

## தவறவிடப்பட்டுள்ளது

கோப்பாய் தெற்கு, இருபாலை, மடத்தடி என்னும் முகவரியை உடைய தனபாலசிங்கம் தினேஸ் என்பவருடைய அடையாள அட்டை நாயன்மார் கட்டுக்கும் புதிய செம்மணி வீதிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. அதனைக் கண்டெடுத்தவர்கள் 0776184286, 0213206153 மேற்படி தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

## காணி விற்பனைக்குண்டு

தெல்லிப்பழை வீதியிலுள்ள சிறுவிளானில் மெயின்றோட் அருகில் 34 பரப்புக்காணி வெட்டுக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: மத்தேசு அருளப்பு
தொ.பே-0779037518, 0779459186
பெரியவிளான், ஆத்தியோலை.

## தவறிவிட்டது

அளவக்கை, முருக்கண் என்ற முகவரியைக் கொண்ட வியயரசன் றொஷான் என்பவரின் (922443319V) எனும் இலக்கத்தை உடைய தேசிய அடையாள அட்டை கடந்த செவ்வாய் அன்று பாஷையூரில் தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

16/4, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ.பே- 0770519551

## தேவை

செய்தியாளர்கள்/ பயிற்சிப் பத்திரிகையாளர்கள், தட்டச்சாளர்கள், அலுவலக உதவியாளர் (ஆண்)
இணைய ஊடகத் துறையில் பணியாற்றுவதற்கு ஆர்வமுடையவர்கள் தேவை. சுயவிவரச் சான்றிதழ்களுடன் வியாழன், வெள்ளி இன்றும் நாளையும் ஆகிய தினங்களில் மு.ப 11.30 - பி.ப 01.00 க்குள் நேரில் வரவும்.

விவரங்களுக்கு- முகாமையாளர்,
Online Uthayan,
359, Kasthuriyar Road, Jaffna.
Call: 0215672222 Fax- 0212220549


# மரண அறிவித்தல்கள்

## திருமதி தங்கராசா வைரம்மா

அல்வாய் மேற்கு, திக்கத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கராசா வைரம்மா (20.07.2011)புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம்- வைராத்தை தம்பதியரின் அன்பு மகளும், தங்கராசாவின் அன்பு மனைவியும் தயாநிதி(லண்டன்), மோகனதாஸ் (லண்டன்), தயாபரன், கலாநிதி, கலைச்செல்வன் ஆகியோரின் அன்புத் தாயும், பொன்ராஜ்(லண்டன்), பிரார்த்தனா ஆகியோரின் அன்பு மாமியும், வர்ணிகா, சுஜாதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2011) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திக்கம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி தம்பித்துரை இராஜேஸ்வரி



புதுத்தோட்டம், துன்னாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், காளிகோயிலடி பத்தைமேனி, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பித்துரை இராஜேஸ்வரி நேற்று (20.07.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், தாமோதரம்பிள்ளை தம்பித்துரையின் பாசமிகு மனைவியும், பிரதீபன், பிரசாத், நிரூபா(லண்டன்), வினோஜிகா ஆகியோரின் அன்புத் தாயும், பிரசாத், கோகிலன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2011) வியாழக்கிழமை பி.ப 2.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தீத்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்,
மருமகன்.

காளிகோயிலடி,
பத்தைமேனி, அச்சுவேலி.

## வீரகத்தி சிவசுப்பிரமணியம்

[இளைப்பாறிய உத்தியோகத்தர், இலங்கை துறைமுக அதிகார சபை]



தென்புலோலியூர், புற்றளையைப் பிறப்பிடமாகவும், வெல்லப்பிட்டி, புலோலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி சிவசுப்பிரமணியம் 19.07.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா மற்றும் கணபதிப்பிள்ளை (U.K) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தேவகுஞ்சரியம்மாவின் அன்புக் கணவரும், யோகாம்பிகை(கனடா), யோகநாயகி (சுவிஸ்), யோகராணி(ஆசிரியை, வெள்ளவத்தை இராமகிருஸ்ணர் வித்தியாலயம்), யோகமலர்(ஜேர்மனி), அருணகிரி(U.K) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருமைத்துரை(கனடா), சிவநாதன்(சுவிஸ்), புவனேந்திரன் (மாலைதீவு), செசேந்திரன்(ஜேர்மனி), சோபனா(U.K) ஆகியோரின் அன்பு மாமனும், தயாபரன், அஜந்தன், கோகுலன், மயூரி, மயனி, மயூரன், நிரோசி, கஜித்திரா, அஜித், நிஷாந்தன், நிருஜன், நிராமமன், நிருத்தன், திவ்யா, தரண் ஆகியோரின் அன்புப் பேரனும் யாழன், யாதுனா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(22.07.2011) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப ஒரு மணியளவில் ஆனைவிழுந்தான் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெல்லப்பிட்டி,
புலோலி தெற்கு.

(ஸி/1888)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறாகப் பயன்படுத்தும் ஒவ்வொரு வாக்கும் எமது அழிவுக்கான ஆயுதமாக அமையும்

## தமிழ்த்தேசிய சிந்தனையுடன் வாக்களிக்குமாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வலியுறுத்து

யாழ்.மக்கள் தவறாகப் பயன்படுத்துகின்ற ஒவ்வொரு வாக்கும் எமது இருப்பையும் உரிமையையும் அழிப்பதற்கான ஆயுதமாகவே பயன்படும் என யாழ்.பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர் ஒன்றியம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இன்றைய காலத்தில் 'யதார்த்தத்தை சரியாகப் புரிந்துகொண்டு தமிழ்த் தேசிய சிந்தனையுடன் வாக்குகளை அளிக்க வேண்டுமெனவும் மாணவர் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது. அந்த அறிக்கையில், மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது, எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலானது, எமது இனத்தைப் பொறுத்தவரையில் மிக முக்கியமான தேர்தல் மட்டுமன்றி சர்வதேசத்தின் கண்களை எமது பக்கம் திரும்பிப் பார்க்க வைக்கக்கூடிய ஒரு தேர்தலாகும். காலம் காலமாக எமது நாட்டில் நடைபெற்று வந்த பல்வேறு தேர்தல்களை காலத்தின் கடப்பாடு உணர்ந்து எமது மக்கள் சரியாக எதிர்கொண்டனர் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

இதுவரை காலமும் இல்லாத அளவுக்கு அடிமை வாழ்க்கை எம் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. திட்டமிடப்பட்ட ரீதியில் எமது காலாசாரம் அழிக்கப்பட்டு நாம் பூர்வீகமாக வாழ்ந்த தமிழர் தாயகப்பகுதிகள் அபிவிருத்தி என்ற போலிச்சொற்களைப் பயன்படுத்தி சிங்கள மயமாக்கலுக்கு உட்படுவதுடன், மூத்தோர் பெயரிலும் எமது கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையிலும் அழைக்கப்பட்டு வந்த எமது வீதிகள் கூட சிங்களப் பெயருக்கு மாற்றப்பட்டு சந்திகள் தோறும் அறிவிப்புப் பலகைகள் மாட்டப்பட்டுள்ளன. நாம் சுதந்திரமாக உலாவி வந்த வீதிகளில் கூட இன்று நிம்மதியாகத்திரியமுடியவில்லை. மாலை 6 மணிக்கே வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். எமது சகோதரிகள் சுதந்திரமாக கற்றல் செயற்பாடுகளுக்குச் செல்வதற்கோ, தொழில் நிறுவனங்களுக்குச் செல்வதற்கோ வீதி களில் பயணிக்க முடியவில்லை. யுத்தம் முடிந்து விட்டது என்று மார் தட்டியவர்கள் இரண்டு ஆண்டுகள் கடந்தும் எமது மக்களை தமது வாழ்விடங்களில் மீளக் குடியமர்த்தாமல் அகதிமுகாம் என்ற துயரவாழ்க்கைக்குள் தள்ளியுள்ளனர். ஏராளமான தமிழர் நிலங்கள் உயர்பாது காப்பு வலயங்கள் என்ற போர்வையில் அபகரிக்கப்பட்டு இராணுவத்தினரால் தமது சொந்தத் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எமது மக்களினால் போரின்போது விட்டுச்செல்லப்பட்ட பெறுமதி மதிப்பிடமுடியாத சொத்துக்கள் தென்னிலங்கைப் பகுதிக்கு இராணுவத்தினரின் அனுமதியுடன் எடுத்துச் செல்லப்பட்டு வருகின்றது. அண்மைக் காலமாக வடபகுதி பல இளைஞர், யுவதிகள் மர்மமான முறையில் யாரும் சந்தேகிக்காத வகையில் தற்கொலை என்ற பெயரில் தடயங்கள் அழிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

வருகின்ற தேர்தலில் தமிழ்த்தேசியம் என்ற கொடியின் கீழ் அணிதிரள்வதன் மூலம் எமது ஒற்றுமையையும் அவாவை யும் எல்லோருக்கும் தெரியப்படுத்த லாம் என்பது எமது அசைக்கமுடியாத நம்பிக்கை.

எனவே அன்பான மக்களே இன் றைய காலத்தின் யதார்த்தத்தைச் சரியாகப் புரிந்துகொண்டு உங்கள் பொன்னான வாக்குகளை தமிழ்த்தேசிய சிந்தனையுடன் பயன்படுத்துமாறு அன்புரிமையுடன் கேட்டுக் கொள்வதோடு நாம் தவறாகப் பயன்படுத்துகின்ற ஒவ்வொரு வாக்கும் எமது இருப்பையும் உரிமைகளையும் அழிப்பதற்கான ஆயுதமாகப் பயன்படுத்தப்படும் என்பதையும் முள்ளிவாய்க்காலில் உயிர் இழந்த மக்கள் அனைவருக்கும் நாம் செய்யும் துரோகமாகும் என்பதனையும் நினைவிற் கொண்டு தமிழ்த்தேசிய ஒற்றுமையுடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

---

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டி.எம். ஜெயரட்ண, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, விளையாட்டுத் துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, கூட்டுறவுத்துறை அமைச்சர் ஜோன்சன் பெர் னாண்டோ, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-எ-426-23)

---

## மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இசை நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதற்காக நேற்றுக் காலையில் விமானம் மூலம் பாடகர்கள் மூவரும் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர். அவர்கள் இலங்கை வந்தடைந்தனர் என்பதை அறிந்த தமிழக அரசியல் தலைவர்கள் உடனடியாக அவர்களைத் தொடர்பு கொண்டு மஹிந்த கலந்துகொள்ளும் நிகழ்வில் பங்கேற்கவேண்டாம் என்று அழுத்தம் கொடுத்தனர்.

"கிளிநொச்சியில் விளையாட்டரங்கு திறப்பு விழாவுக்காக, இசை நிகழ்ச்சி நடத்த வேண்டும் என்று எங்களைக் கேட்டார்கள். தமிழ் மக்கள் முன்பு தமிழ் பாட்டுகளை பாடலாம் என்று நாங்கள் ஒப்புக்கொண்டோம். ஆனால், இங்கு வந்து பார்த்தபோது, அந்த நிகழ்ச்சியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்கிறார் என்று தெரியவந்தது. நிறைய பெரியவர்கள் எங்களுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு இது குறித்துப் பேசினார்கள்" என்றார் பாடகர் மனோ.

தமிழ் நெஞ்சங்களுக்கு சின்ன கஷ்டம் வருவதுபோல் ஒருபோதும் நடந்து கொள்ளமாட்டோம் என்றும் அவர் உறுதியளித்தார்.

"உறுதியாகச் சொல்கிறேன். நானும், பாடகி சுசித்ரா, பாடகர் கிரிஷ் ஆகியோரும் சென்னை திரும்புகிறோம். கிளிநொச்சி செல்ல மாட்டோம். தமிழ் மண்ணுக்கு, தமிழ் நெஞ்சங்களுக்கு என்றும் நன்றி உடையவர்களாக இருப்போம். தெரியாமல் வந்ததால் எங்களை மன்னிக்க வேண்டும்" என்றார் அவர்.

பாடகர்கள் கிளிநொச்சி செல்லாது திரும்பப் போகிறார்கள் என்பது தெரிய வந்ததும் அமைச்சர்கள் பலரும் உயர் அதிகாரிகளும் விமான நிலையத்துக்கு விரைந்தனர். அவர்கள் எவ்வளவோ கேட்டு மன்றாடிய போதும் கிளிநொச்சி வர பாடகர்கள் மறுத்து விட்டார்கள்.

பிற்பகலே அவர்கள் சென்னை திரும்பி விட்டார்கள். ஒரு நாட்டின் ஜனாதிபதி கலந்துகொண்ட நிகழ்வில் பாடமறுத்து பாடகர்கள் திரும்பிச் சென்ற நிகழ்வால் கொழும்பில் பெரும் பரபரப்பும் அதிர்ச்சியும் ஏற்பட்டுள்ளது.

தமிழக அரசியல்வாதிகளான பழநெடுமாறன், வைகோ போன்றோர் பாடகர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கி, பயணத்தை உடனடியாக நிறுத்துமாறு கேட்டுக் கொண்டதை அடுத்தே பாடகர்கள் சென்னை திரும்பினர். (உ)

அடிப்படை உடல் பரிசோதனை.
கிரமமான உடல் பரிசோதனைகள் பாரிய நோய்களை முற்கூட்டியே இனங்காட்டி உங்களை பாதுகாக்கும்.
*இலவச வைத்திய ஆலோசனை வழங்கப்படும்

A full package includes
Scan,ECG,Blood and Urine Tests&Reports
Lava Diagnosis & Lava Hospitals
Member of Lava Holdings Pvt Ltd Reg No:PV74170
கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூடம் மற்றும் அறிக்கைகள்.
Tel: 0212224333 |# 75,Temple Road,Jaffna | www.Lavahospitals.com

---

## மாநகர சபை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைகேடுகளை விளக்கினார்.

நகரில் கஸ்தூரியார் வீதி - மின்சார நிலைய வீதி சந்தியில், லிங்கம் கூல் பாருக்கு முன்பாக உள்ள காணியில் 5 மாடிக் கடைத் தொகுதி ஒன்றை அமைப்பதற்கு மாநகர சபை முடிவு செய்தது. அதற்கான கேள்வி கொழும்பு பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்டது. ஒரேயொரு விண்ணப்பம் மட்டுமே கிடைத்தது என்று தெரிவித்து அது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில் தனியார் ஒப்பந்த நிறுவனம் ஒன்று பணிகளை ஆரம்பித்தது. ஆனால் இந்த நிறுவனம் பெரும் தொகைக்குக் கடைகளை விற்கிறது என்றும் அதனால் கோடிக்கணக்கில் மாநகர சபைக்கு நட்டம் ஏற்பட்டது என்றும் குற்றச்சாட்டுக்கள் ஆதாரத்துடன் முன்வைக்கப்பட்டன.

கடைகளை விற்கும் பணத்தில் கணிசமான பகுதி ஆளும்தரப்பு அமைச்சர் ஒருவருக்குச் சென்று சேர்வதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து கட்டடப் பணிகளை நிறுத்தக் கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தது. ஆனால், அந்த வழக்கு நேற்றுமுன்தினம் தள்ளுபடியானது. வழக்காளி தரப்பு வழக்குரைஞர் சமூகமளிக்காத காரணத்தால் வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

தாக்கல் செய்யப்பட்ட மனுவில் சில விடயங்கள் விடுபட்டிருந்ததால், மீண்டும் அது தொடர்பில் மனு ஒன்று தாக்கல் செய்யப்படும் என்று கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

"இதுவரை இந்த விவகாரம் நீதிமன்றில் இருந்ததால், நான் அது குறித்துக் கருத்துத் தெரிவிக்கவில்லை. இப்போது வழக்குத் தள்ளுபடியாகி உள்ளதால் நடைபெற்ற முறைகேடுகளை விரிவாக விளக்க முடிகிறது" என்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார் சீ.வி.கே.சிவஞானம்.

அவர் மேலும் தெரிவித்தாவது:-

நகரில் புதிய கடைத் தொகுதி அமைப்பதற்கான கேள்வி அறிவித்தல் யாழ். மாநகர சபையால் 2010ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

இதற்குப் பதிலளித்து எஸ்.எம்.ரி. டெவலப்பேர்ஸ் என்ற நிறுவனம் கடிதம் ஒன்றை மட்டும் அனுப்பி இருந்தது. அதனடிப்படையில் அந்த நிறுவனத்துக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

கேள்வி அறிவித்தல் ஒன்றுக்கு கடிதம் மூலம் பதிலளிப்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட முறை அல்ல. கேள்வி கோரலுக்கு என்று முழுமையான விதி முறைகள் உள்ளன. அவை அனைத்தும் இதில் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

மாநகர சபை விளம்பரம் 9ஆம் திகதி பிரசுரிக்கப்படுவதற்கு இரு நாள்களுக்கு முன்னதாகவே எஸ்.எம்.ரி. டெவலப்பேர்ஸ் நிறுவனம் கம்பெனிகள் சட்டங்களின் கீழ் தன்னைப் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பித்துள்ளது. 8ஆம் திகதியே அது பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதாவது அவசர அவசரமாக நிறுவனம் பதிவு செய்யப்பட்டதன் பின்னரே விளம்பரம் பிரசுரிக்கப்பட்டது.

எனினும் 19ஆம் திகதியிட்டு மாநகர சபைக்கு அந்த நிறுவனம் அனுப்பிய கடிதத்தில் நிறுவனத்தின் பதிவு இலக்கம் எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

முறைப்படி விண்ணப்பிக்காத, பதிவு செய்யப்படாத நிறுவனம் ஒன்றுக்கு எப்படி ஒப்பந்தம் வழங்கப்பட்டது? இது முறைகேடு இல்லையா? அப்படியிருக்க யாழ். மாநகர சபையில் முறைகேடே நடக்கவில்லை என்று முதல்வர் எப்படிக் கூற முடியும்?

- என்றார் முன்னாள் ஆணையாளர். (உ)

---

## வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

60 கிராமாக அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்பொழுது இயந்திரப்படகுகள், வலைகள் தயாரிக்கக்கூடிய உரிய தொழில் நுட்பங்கள் இல்லாததன் காரணமாக படகு கவிழ்தல், மூழ்குதல் போன்ற விபத்துகள் ஏற்படுகின்றன. தேசிய தரத்துக்கு ஏற்றவாறு அவை தயாரிக்கப்படுவதில்லை.

அத்துடன், மீன் ஏற்றுமதி 21 ஆயிரம் மில்லியன் கிலோவாக அதிகரித்துள்ளது. குறிப்பாக கடந்த வருடத்தில் 10 சதவீத அதிகரிப்பு காணப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை நீக்கப்பட்ட பின்னர் மீன் ஏற்றுமதி அதிகரித்திருக்கிறது - என்றார். (ஒ-5)

---

## அற்ப சலுகைகளுக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஈ.சரவணபவன்.

தளபதி அமிர்தலிங்கத்தின் கோட்டையான வழக்கம்பரையில் நேற்று இரவு ஆனோல்ட் தலைமையில் நடந்த இறுதிப் பிரசாரக் கூட்டத்தில் ஈ.சரவணபவன் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

டக்ளஸ் தேவானந்தா காட்டிக் கொடுப்பதற்கு மட்டுமல்ல அதைச் சொல்லவே வாய் கூசுகிறது. சிங்களவர்களின் தலைவர்களுக்கு அப்படியான செய்கைகளையும் செய்கிறார். இவரை தமிழ்ச் சமூகம் மன்னிக்குமா. அடுத்தது யார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவரும்தான் ஒரு இனவாதிதான், தமிழ் விரோதிதான் என்று தனது சுயரூபத்தைக் காட்டிவிட்டார்.

தென்னிலங்கையில் பல கட்சிகளும் போர்க்குற்ற அறிக்கைகளையும் சனல் - 4 தொலைக்காட்சியையும் கட்டாயமாக விசாரிக்க வேண்டுமென கூறும்போது இவ்வளவு காலமும் மௌனமாக பாசாங்கு காட்டிவிட்டு இப்பொழுது அரசுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளார். இவரும் இங்கு தனது யானை சின்னத்தில் ஆள்களை நிறுத்தியுள்ளார். அன்று அந்த யானைக் கட்சிக்காரர்கள் தமிழரின் பொக்கிஷமான யாழ்.நூலகத்தை எரித்துச் சாம்பல் ஆக்கினர்.

1983 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் ஆயிரம் ஆயிரம் தமிழர்களைக் கொன்று அரசியல் அநாதைகளாக்கி எமது தாயக பூமிக்கு இந்திய இராணுவத்தை அழைத்து எமது நாட்டை சுடுகாடு ஆக்கினார்கள்.


யானையாக இருக்கலாம், வெற்றிலையாக இருக்கலாம், நீலநிறமாக இருக்கலாம், பச்சை நிறமாக இருக்கலாம் ஆனால் இவர்கள் எல்லோருமே தமிழ் விரோதிகள் இப்படியான தமிழ் விரோதிகளுக்கு வக்காளத்து வாங்கிக்கொண்டு இங்கு எதுவுமோ நடைபெறவில்லை தமிழர்கள் கொல்லப்படவில்லை என்று சிங்கள தலைமைக்கு வக்காலத்து வாங்குகிறார் டக்ளஸ், அன்று எம்மை துகில் உரித்தவர்கள் இன்று சேலை கொடுக்கிறார்கள். அவர்களாகவே மூடிய பாதையைத் திறக்கிறார்கள். இன்று ஜனாதிபதியும் அமைச்சர்களும் பேசும் மேடைகளுக்கு கோடி கோடியாக செலவு செய்கிறார்கள். இப்படி வீண்விரயமாக இந்தப் பணத்தைக்கொண்டு எத்தனையோ வீடுகளைக் கட்டி எம் மக்களுக்கு வழங்கியிருக்கலாம். ஆனால் அதைச் செய்யமாட்டார்கள். ஏனென்றால் எம் மீது அவர்களுக்கு அக்கறை இல்லை. அவருடைய குறிக்கோள் போர்க்குற்ற அறிக்கையும் சனல் - 4 தொலைக்காட்சியும் பொய்யானவை என்று தமிழர்களைக் கொண்டே சாட்சி பகிர முயல்கின்றார். நாம் இன்று ஏழைகளாக இருக்கலாம். ஆனால் கோழைகளாகி விடமாட்டோம். எமது உடலில் ஓடுவது தமிழ் இரத்தம். அதனை எவராலும் மாற்றி அமைத்து விடமுடியாது. எனவே தமிழர்களாகிய நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களிக்க வேண்டும். எதிர்வரும் 23ஆம் திகதி அந்தத் தீர்ப்பை நாம் எழுதுவோம் என்று கூறினார்.

(ஐ-ஏ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 லட்சம் மக்கள் இறந்தாலும் பரவாயில்லை வெல்ல வேண்டும் என்றே போர் செய்தது அரசு

## புரிந்துகொண்டு வாக்களியுங்கள் என்கிறார் மாவை எம்.பி.



2009 மே திங்களில் முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் நாலு இலட்சத்து இருபதாயிரம் (420000) அப்பாவித் தமிழ் மக்கள் பாதுகாப்பற்று இருக்கிறார்கள் என்று அதிகாரபூர்வமாகத் தெரிந்தும் ஜனாதிபதியும் அரசும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் திட்டமிட்டே (70,000) எழுபதாயிரம் பேர்தான் இருக்கிறார்கள் என ஐ.நா. மன்றம் வரை சென்று பேசினார்கள். அப்படியானால் 3,50,000 மக்கள் கொல்லப்பட்டாலும் பரவாயில்லை போரை வென்று விடவேண்டும் என்பது தானே திட்டமாக இருந்தது? - இவ்வாறு கேள்வி எழுப்பினார் மாவை சேனாதிராசா.

பருத்தித்துறை, நெல்லண்டை அம்மன் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற இறுதிப் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாடுகளின் அழுத்தத்தால் (3,17000) மூன்று இலட்சத்து பதினேழாயிரம் மக்கள் உயிர் பிழைத்து அகதிகளாய் முட்கம்பி வேலிகளுக்குள் தஞ்சமடைந்தனர். ஆனால் ஏழுபது ஆயிரம் பேருக்குக்கூட போதிய உணவு, மருந்து போன்றவை அனுப்பப்படவில்லை என்று குற்றம் சுமத்தப்படுகிறது.

இராணுவத்தினர், மட்டுமல்ல அரசின் முழு வளங்களும் அரச நிர்வாக முழு இயந்திரங்களும் அமைச்சர் குழாமும் எப்படியும் இந்தத் தேர்தலில் வெற்றியீட்ட வேண்டும் என அனைத்து வியூகங்களையும் வகுத்துள்ளது. போரில் அரசுக்கு கருணாஅம்மான் உதவியதைப்போலவே யாழ்ப்பாணத்தை தேர்தலில் கைப்பற்ற டக்ளஸ் துணை புரிகிறார்.

கடந்த அறுபது ஆண்டுகளில் மட்டுமல்ல 2009 முள்ளி வாய்க்கால் போருக்குப்பின்னரும் ஜனநாயக ரீதியில் எந்த தென்னிலங்கை அரசுகளோ சிங்களத் தலைமைகளோ தமிழ் மக்களை வெற்றிகொள்ளவில்லை என்பதே வரலாறு. இந்தத் தேர்தலிலும் தமிழ் மக்கள் அந்தப் பாடத்தை அரசுக்குப் புகட்டி தம் இலக்கை நோக்கி அரசியலில் தீர்வு ஒன்றை பெற திடசங்கற்பம் பூண்டிருப்பதை நிரூபிப்பார்கள் என நம்புகின்றோம்.

குடிப்பரம்பலில் எங்கே பலமாக தமிழ் மக்கள் இருக்கிறார்களோ அங்கேயே அவர்கள் சிறுபான்மையினராக்கப்பட்டு அதிகாரமிழந்தவர்களாக வாழ்வுரிமையைக் கூட இழந்தவர்களாக ஒரு கலப்பினமாக மாற்றப்படும் அபாயகரமான நிலையில் இன்று உள்ளனர். அதுதான் மஹிந்த சிந்தனையின் ''ஒரே மக்கள், ஒரே நாடு'' எனும் சித்தாந்தம் ஆகும்.

எத்தனை ஆண்டுகளும் எம் தமிழ் மக்கள் செய்த தியாகங்களும் விட்டுவரும் கண்ணீரும் சிந்திய செந்நீரும் அற்ப சலுகைகளுக்காக அல்ல. இந்த அற்ப சலுகைகள் எந்த வகையிலும் தமிழர் தியாகங்களுக்கு ஈடாக. எங்கள் தாய்மார் விடுகின்ற பெருமூச்சுக்கும் கண்ணீருக்கும் ஈடாகமுடியாது.

தமிழ் மக்களை இந்தத் தேர்தலில் எவ்வாறாயினும் வென்று விட வேண்டும் என்று எத்தணிக்கும் அரசு இராணுவத்தையும், அரச நிர்வாகங்களையும், ஊழியர்களையும் அதில் ஈடுபடுத்துவதானது ஜனநாயக மற்றும் தேர்தல் சட்ட விதிகளை அப்பட்டமாக மீறுகின்ற செயலாகும்.

போர்க்குற்ற விசாரணை நடத்த வேண்டும் என்று சிபார்சு செய்துள்ள ஐ.நாவின் நிபுணர் குழு அறிக்கையில் இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வேண்டும் என்றும் வற்புறுத்துகின்றது. இந்த அறிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றது. 2009 மே 23 இல் வெளியான பான் கீ மூன் - ஜனாதிபதி கூட்டறிக்கையிலும் அரசியல் தீர்வுக்கு வற்புறுத்தப் பட்டிருக்கின்றது. அதைத் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி தீர்வுகாண வேண்டும் என்று நாம் வற்புறுத்துகின்றோம். அவ்வாறே இந்தியாவும், அமெரிக்காவும் ஏனைய சர்வதேச நாடுகளும் அரசுடன் வற்புறுத்திவருகின்றன. ஆனால் அரசிடம் ஒரு அரசியல் தீர்வுக்கான விருப்பமோ, அரசியல் திட்டமோ, திடசங்கற்பமோ இல்லை.

இந்த நிலையில் அரசு பெரும் பொருளாதார சீர் குலைவுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. விலை வாசி உயர்வை கட்டுப்படுத்த முடியாமல் உள்ளது. அரசு சர்வதேச நாடுகளிடம் பட்ட கடனை தீர்க்க முடியாதுள்ளது. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஒரு வீட்டைத் தானும் எங்கள் வரிப்பணத்தில் கொடுக்காத அரசு இராணுவச் செலவீனங்களுக்காக போர் முடிந்தது என்ற நிலையிலும் வரவு செலவுத் திட்டத்தில் மிகப் பெரும் நிதியை ஒதுக்கியுள்ளது. சர்வதேசத்தினதும் இந்தியாவினதும் அரசியல் மற்றும் பொருளாதார அழுத்தங்களுக்கும், நெருக்கடிகளுக்கும் அரசு ஆளாகி வருகின்றது.

இந்த நிலையானது தமிழ்த் தேசிய இனத்துக்கான அரசியல் தீர்வுக்கும் விடுதலைக்கும் சாதகமாகி வரும் சூழ்நிலையாகும். இன்று சர்வதேசத்துக்கும், சர்வதேச நாடுகளுக்கும் அரசுக்கும் இடையிலான இராஜதந்திரப் போரானது தமிழ் மக்களின் விடுதலைக்கும் அரசியல் தீர்வு ஒன்றுக்கும் சாதகமான நிலையையும் ஏற்படுத்தி வருகின்றது. இத்தகைய ஒரு சூழ்நிலையை மாற்றி அமைத்து சர்வதேசத்திலும் தமிழ் மக்களை அரசியல் ரீதியாகவும் பலவீனப்படுத்தவும் அரசுக்குப் போர்க்குற்றமோ, அரசியல் தீர்வோ இல்லை எனக் கூறுவதற்கே தமிழ் மக்களை அரசுக்கு சாதகமாக வாக்களிக்குமாறு அரசு கோரி நிற்கிறது. இதற்கு தமிழ் மக்கள் ஒரு பொழுதும் இடமளிக்க மாட்டாது என்று நம்புகின்றோம்.

தமிழ் மக்கள் இன்று நடைபெறும் தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும். அதற்காக ஒரு வாக்குத் தானும் சிதறவிடாமல் வீட்டுச் சின்னத்துக்கே வாக்களித்து எம் மக்கள் எதிலும், எங்கும் வெற்றிபெற வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்று தெரிவித்தார்.

# ஈழத்தமிழர்களுக்கு சம உரிமை வேண்டும்

## சென்னையில் ஹிலாரி தெரிவிப்பு

இலங்கைத் தமிழர்களுக்கும், ஏனைய இனத்தவரைப் போல சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று சென்னை வந்திருந்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் வலியுறுத்தியுள்ளார்.

டெல்லி வந்தடைந்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்ரன், நேற்று முன்தினம் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணாவை சந்தித்து பேசினார்.

நேற்று அவர் தனி விமானம் மூலம் சென்னை வந்திறங்கினார். அவர் முதலில் சென்னையில் உள்ள அண்ணா நூற்றாண்டு விழா நூலகத்தில் மாணவர்களை சந்தித்து பேசினார்.

''தமிழகத்தில் தமிழர்கள் அரசியலில் ஆர்வமுடன் பங்கேற்பது பாராட்டுக்குரியது. இலங்கையில் வாழும் தமிழர்களுக்கும் சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.'' - என்றார் அவர்.

பின்னர் தமிழக முதல்வர் ஜெயலலிதாவை சந்தித்த ஹலாரி, இலங்கைத் தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு புதிய யோசனைகளை முன்வைக்கும் தருணத்துக்காக அமெரிக்கா காத்திருப்பதாகத் தெரிவித்தார்.

தமிழர்களை சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த அமெரிக்க வலியுறுத்தவேண்டும் என்று ஜெயலலிதா கேட்டுக் கொண்டார். (உ-எ)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்தனர். 4.30 மணிக்கு அங்கு சென்ற அவரை தேர்தல் துண்டுப் பிரசுரம் ஒன்று தொடர்பாக விசாரித்த குற்றப் புலனாய்வுப் பொலிஸார் கொழும்பில் மேலதிக விசாரணை செய்யவேண்டியுள்ளதாகத் தெரிவித்து தமது வாகனத்தில் அழைத்துச் சென்றனர். (உ-ஐ)

## அரச தரப்பை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநியாயங்கள் அதிகரித்து விட்டன. தேர்தல் சட்டங்கள் பச்சை பச்சையாக மீறப்படுகின்றன.

இந்தத் தேர்தலுக்காக அரச வாகனங்கள், பணம் மற்றும் அரச கட்டடங்கள் உள்ளிட்ட அரச சொத்துகள் அனைத்தையும் அரசு பயன்படுத்துகின்றது. இதனால் தேர்தல் சட்டங்கள் முற்றாக மீறப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் அரசைத் தவிர, வேறு எந்தக் கட்சியும் தேர்தலில் ஈடுபட முடியாத பயங்கர நிலைமை காணப்படுகின்றது.

மக்களிடமிருந்து வாக்குகளைப் அபகரிப்பதற்காக அரசு மக்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் மற்றும் உடை கள் ஆகியவற்றை இலஞ்சமாக வழங்கு கின்றது. தேர்தல் இடம்பெறும் இடங்களில் இந்த நடவடிக்கை பரவலாக நடைபெறுகின்றது.

பொலிஸார் தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். பக்கச்சார்பற்று செயற்பட்டு அவர்களின் சீருடையின் கௌரவத்தைப் பாதுகாக்கவேண்டும்.

மக்கள் இந்தத் தேர்தலில் அறிவுபூர்வமாக செயற்படவேண்டும். ஜனநாயக விரோத சக்திகளுக்கு எதிராக மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்தவேண்டும். அரசின் சர்வாதிகாரத்தை இல்லாதொழிக்க மக்கள் இந்தத் தேர்தலைப் பயன்படுத்தவேண்டும். - என்றார். (ஐ-சி)

**Barnabas** SALE

247, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0777448668

இன் அதிரடி மலிவு விற்பனை




★ உறுதியான உத்தரவாதம், விற்பனைக்கு பிந்திய அதிவேகமான சேவை.
★ இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டும்
(48)

**விசேட கருத்தரங்கு A/L - 2011**

சகல துறை மாணவர்களுக்குமான பொதுச் சாதாரண பரீட்சைக்கானது.
ஆரம்பம்- நாளை 22.07.2011 வெள்ளி.
9.30- 12.30
வழிகாட்டல் நூல் உட்பட கட்டணம்- 120/-
DMI ஆரிய குளம் சந்திக்கு அருகில்.

THE FAITH LIFE CHURCH
ASSEMBLIES OF GOD AG

**விசுவாச வாழ்வு அற்புதப் பெருவிழா**

காலம்: 21,22. 07. 2011 வியாழன், வெள்ளி மாலை 5. 59 மணிக்கு
இடம்: ஸ்ரீ நாராயணா சன சமூக நிலைய வெளியரங்கு, கோண்டாவில் கிழக்கு

நிகழ்வுகள்: இன்னிசை விருந்து, நடன அலைக்காற்றுகை, மழலைகள் பாடல் ஆடல், கடவுளின் அற்புத சாட்சிகள்

இதுவரை கண்டிராத அதிசய நிகழ்வு



தேவ ஆசீர்வாத செய்தி, விடுதலைப் பிரார்த்தனை-
வண: க.பாஸ்கரன் தலைமைப்போதகர் விசுவாச வாழ்வு திருச்சபை, நெதர்லாந்து

அற்புதம் காண திரண்டு வாரீர்

Mr AG Konderall    The Faith Life Church, Netherland

தொடர்பு: பாஸ்ரர் க. ராஜா 077 7299991, பாஸ்ரர் க.பாஸ்கரன் 077 1134352

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org